கவிஞர் வீட்டுக்கு

இந்த நூலில்

அங்கம் - அங்கி - அங்கு - அங்கே
அங்கம் - அங்கி - அங்கு - அங்கே

அந்த - அந்தி - அந்தோ - சந்தை
அந்த - அந்தி - அந்தோ - சந்தை

அஞ்ச - அஞ்சா - அஞ்சி - அஞ்சு - அஞ்சே
அஞ்சு - அஞ்சா - அஞ்சி - அஞ்சு - அஞ்சே

மேல்வரியில் எழுத்துவாசகமாயிருப்பது - கீழ்வரியில் சாய்ந்த எழுத்திலிருக்கும் - உச்சர வாசகமாய் எழுதியிருப்பதைப் பிழையா யிருக்கிறதென்று எண்ணுதீர்கள்.

மொழிக்கு முதலில் 'ன' - எழுத்திருக்கும்
பார்த்துப் படித்துக்கொள்ளுங்கள்.

இந்த "தவவிளவு னிழு னிகழ்வுகள்"
நூலில், தெய்வ வாக்கியங்களும், திரு உரையாடல்களும்
ஜீவ வழிபாட்டு சம்பவங்களும் இடம் பெற்றுள்ளன.

தேவாமிர்தம்.... தில்லையமுதம்... அமுதமொழி...
போன்ற வாக்கிய தொகுப்புகளின்

னன்காம் பகுதி

அச்சிட்டோர்: அமுதன் அச்சகம், ஆற்காடு.

முதல் முகப்புரை

ஆருயிர்ப் பிறவியர்களுக்கு,

வணக்காரம்.

இந்த "தவ வினவு எனு எரிகழ்வுகள்" நூலில் இடம் பெற்றுள்ள எமது தெய்வமவர்கள் திருவாக்கியங்கள், திரு உரையாடல்கள், ஜீவ வழிபாட்டு சம்பவங்கள் அனைத்தும் அவ்வளவும் னும் அறிந்ததுதான் என்றாலும், கணக்கில் அடங்காத அலைகள் எமது டைரி குறிப்பிலும் எம்முடைய நினைவில் மட்டும் தான் இதுவரை இருந்து வந்திருக்கிறது.

தொகுத்து ஆலயத்தில் எழுதிவைத்திருந்த பலபகுதிகளும் தீ விபத்து மற்றும் சில காரணங்களால் இல்லாமல் ஆகிவிட்டது. காலத்தால் அழியாத மகிமை பொருந்தியதான அலைகள் பெரு முயற்சி எடுத்து திரட்டப்பட்டு அச்சு ஏட்டில் மெய்வழி தமிழில் இப்போது வெளியிடப்பெற்றுள்ளது.

எனைத்து பார்க்க பார்க்க அபூர்வமும், ஆச்சரியம் தரும் எல்லாவற்றையும் இந்த நூலில் ஒன்று திரட்டப் பெற்றுள்ளது. இது எமக்கும், எமது சந்ததியினருக்கும், மெய்வழியை நாடி வரும் இவ்வுலகின் எல்லாமக்களுக்கும் எமது தெய்வீக செய்திகளை விரிவாக எடுத்து தெரிவித்து மகிழ்ந்திடுவதற்கு தக்க ஒரு நூலாக அமைந்துள்ளது.

தெய்வத்தின் மகிமைகள் எம் சிந்தையில் சதா நினைந்து நினைவுபெற வேண்டும் என்ற பேரவாவினால் முடிந்தவரை அனந்நாதி தேவர்களிடம் இருந்து திரட்டியது மல்லாமல், அச்சிட்டுத் தரும் பணியையும் செய்து வரும் மெய்வழி செந்நாமரை அனந்நாரின் பெருமுயற்சிக்கு எனது பாராட்டுதல்கள்.

அருமையான இந்த தெய்வநூலை, மெய்வழி மக்கள் குலத்திற்கு வழங்குவதில் பெரும் மகிழ்ச்சி அடைகிறேன்.

அன்புடன்

மெய்வழி சாரல் வர்க்கவான்

அட்சரகலா ஆதினம் - சபைக்காரர்

தவ விளக்கு

ஸ்ரீ ஸ்ரீதர்வேளை

உள் பகுப்பு	பக்கம்
1. மெய்யொழில் திருவசனங்கள்	5 - 49
2. வேதனை அழுதம் சிந்தும் திருஉரையாடல்கள்.	50-76
3. ஜீவ வழிபாட்டு சம்பவங்கள்	77-140

ஆதியே துணை

தெய்வத்தை என்றுக அறிந்து வணங்கி, அன்றே அவர்களுடன் காட்டில் வாசம் செய்கின்றவர்கள், கனக வர்ண பரிசுத்த சூக்கும தேகத்தில் பிறந்து – செவியுணவு பருகிப்பருகி, தன்னுருக்கு தான்னாகவே மகா துலக்கமான சந்தோஷ மகிழ்ச்சியராய் விளைவற்றிருக்கிறார்கள் என்று – அகஸ்தேரிகை

- வீரபிரம்மம் அவர்கள் தீர்க்கதரிசனம்

ஏகபராபர பேரறிவாகார பாரப்பெரிய வண்ணை வண்ணமாகிய

மெய்யெழில் திருவசனாங்கள்

இதுவரை உலகில் யாரும் அறிந்திராத, கேட்டறியாத, அதி அற்புத னுட்ப னுணிகிய ஞான விளக்க திருவாக்கியங்களின் விரிப்பு.

இது இப்படி என்று தெரியாமல் உன் னினைவு வளர்கிறது. வளர்ந்து கொண்டேவருவது எப்படி என்று உன்னுல் புரிந்து கொள்ளமுடியாமல் அது வளர்கிறது. அறிவுக்கு தெரியாமலேயே புலன்களும் வளர்ச்சி அடைகிறது. இப்படி மனித சக்தியிலேயே புலன்கள் வளர்ந்து பிரண்டு உருண்டு ஈசனுக வேண்டும் என்பது விதி. அருபத்தில் உள்ள ஈசன் எதுவும் செய்ய முடியாது. அது மனித சக்தியில் வந்து தான் ஈசனுடைய சக்தியுடன் சேர்ந்து அதன்பிறகு விளைவுறுகிறது. எல்லோரும் இப்படி ஆகவே ஒவ்வொரு மனுவையும் இறைவன் படைத்தது.



உலகத்தில் உள்ள ஜீவராசிகள் எண்ணமுடியாத கோடானகோடி எண்ணிக்கை உள்ளவை. அவை அவ்வளவும் ஆகாயத்தில் இருந்துதான் உண்டாயின. ஆகாயத்தில் ஒரு உசும்புதல் உண்டாகியது. ஆகாயத்தில் ஏற்பட்ட அந்த ஒரு உசும்புதலால்தான் ஜீவராசிகள் உண்டாகியது. இந்த னிகழ்வு உயிர்ப்பு சக்தியாகிய அந்த உசும்புதல் மனித அறிவுக்கு எட்டப்படாதது.

அதே போன்று எல்லா உலோகங்களும் காற்றில் இருந்துதான் உண்டாகியது. உயர்ந்த உலோகமாகிய தங்கம் கூட காற்றில் தான் உண்டாயிற்று.

இறைவன் உன்தேகத்தில் ரோமங்களை படைத்து உள்ளான். அது என்ன காரணத்திற்கு என்று தெரியுமா? உலகத்தின் எந்த உடற்கூற்று ஆராய்ச்சியாளராலும் கூட தெரிவிக்க முடியாதே. னும் தெரிவிக்கிறேரும் அறிந்து கொள். ஜீவப்பிரயாண னேரத்தில் உன்னை பரமபதத்திற்கு ஏற்றுவதற்கு அது உதவுகிறது. இந்த காரணத்தை னீ விரதம் இருந்து எம்மிடம் தெரிந்து கொள்ளவேண்டும். வேறு யாரிடமாவது இந்த உலகில் கோடி கொடுத்தாலும் சொல்வாருண்டோ!....

எம் தேவ மக்களாகிய உங்களை வேதங்கள் எல்லாம் புகழ்கின்றன. ஆனால் னிங்கள் இந்த தேவ குலத்தினரை அல்லாமல் மற்றவர் உறவை னாடுகிறீர்கள். சம்பந்தம் வைத்துக்கொள்கிறீர்கள். மாமன், மச்சான் என்று சென்றால் மறுபடியும் னரனாகி விடுகிறாய். இது ஏதாவது உனக்கு தெரிகிறதா? மற்றவர்கள் உறவை னாடினால் சாபம்தான் வரும். பாதாள லோகத்தில் இருந்து பூவுலகத்திற்கு எடுத்துவந்து இப்போது தேவ லோகத்தில் அல்லவா இருக்கிறாய்! இது சத்திய னிஜச் செயல் அல்லவா? இதை புரிந்து எண்ணி வாழுங்கள்.

இராஜனிலே அறிந்த னி அங்கே உறவு கொண்டாடுவது அவர்களிடம் பிச்சைக்கு போவதற்கு சமானம்.

இந்த உலகின் வேத வேதாந்தங்கள் என்று வாழ்னுள் முழுதினும் எதை ஓதினுலும் எவனுக்கும் எந்த பலனும் கிடையாது. அப்படியிருக்க சாவுடைய னேரத்தில் அவன் எதிரில் எல்லோரும் உட்கார்ந்துகொண்டு இன்னும் அதிக அதிகமாக ஏதேதோ பாகுரங்களே ஓதி ஓதி உரக்க கூவினுல் மட்டும் பலன் வந்து விடுமா?

னும் னூறு வருடம் முச்சடக்கி தவம் செய்திருக்கிறேரும். அது வினுக்கா? ஆனுல் செத்தபின்னும் ஒன்றும் இல்லே என்று அலட்சியமாக இந்த உலகம் இருக்கிறது. அப்படி னினைக்கும் மடையனுக்கு முதேவி தண்டனே தானே வரும். இறைவன் படைத்த இந்த பூமி இவனுக்கு என்னெவெல்லாம் வினோவித்து கொடுக்கிறது. இதற்கு னன்றி சொல்ல கூட எண்ணமில்லே. செத்தால் ஒன்றும் இல்லே என்று கூறும் னன்றி கெட்டவனுக்கு எப்பேர்பட்ட அதோகதி காத்திருக்கிறது என்று தெரியாது. சத்தியப்படி இங்கு னம்பி வந்தவர்களுக்குத்தான் இப்பிறப்பின் உண்மை தெரியும்.

வெளி உலகில், னகலான ஒரு பொய் ஞானத்தை கட்டு கோப்பாக காப்பாற்றி வருவதைப் பார். ஆசாரம், தொழுகை என்று ஏதேதோ மெய்ச் செயல் உள்ளது போல் பேசிப்பேசி எல்லோரையும் னம்ப வைத்து ஒருவருக்கொருவர் ஏமாற்றி கொள்கிறார்கள். னெடுங்காால ஆனந்த வாழ்க்கை பெறவேண்டிய மனிதன், தன் அற்பத் தனத்தால் அப்படி அதை பெறுமல் கெடுத்துக்கொள்கிறான்.

மடாலயங்களிலும், வெளியுலகிலும் ஆச்சாரம், அனுஷ்ட்டானம் என்று 'பொய்யான ஒன்றை பக்தி என்று எடுத்து வைத்துள்ளார்கள். உதாரணத்திற்கு ஒன்றை-பாருங்கள். ரொம்ப ஆச்சாரமாக கடும் குளிரில் விடிவதற்குமுன்னே னான்கு மணிக்கு எல்லாம் எழுந்து கடும் குளிரில் குளத்திற்கு போய், மூழ்கி எழுந்து ஈர உடையுடனே னடுங்கிகொண்டே வந்து ஜபிப்பது பூஜிப்பது போன்றவை என்ன விளைவுவரும் தெரியுமா? இந்த செய்கை இவன் தேகத்தை இவனே வருத்திக்கொள்வதால் இவனை அறியாமல் இரக்கமற்ற கொடூரமான குணத்தினை மனதில் விதைக்கப்பெற்றதாக ஆகிவிடும். எப்படி என்றால், தன் ஜீவனை தானே இரக்கமில்லாமல் வதைப்பதால் வரும் வினையின் விளைவே இது. இந்த செய்கையால், இவனுக்கு

மற்றவர்கள்பால் வரும் இரக்கம் குறைந்துவிடும். உதாரணமாக சொல்லுவது என்றால், மேல் நாட்டில் அதிக குளிர்பிரதேசத்தில் இருப்பவன், இரக்கமற்ற குண முள்ள வனாகத்தான் இருப்பான். அதனால் தான் ஞானமுனையும் அங்கு முளைவதில்லை.

பெரியோர்கள் யாரையும் பாவி என்று சொல்ல மாட்டார்கள். எனெனில், ஒருவன் கடைசி னிமிடத்தில் பிரண்டு உருண்டு தம்மிடம் வந்து கெஞ்சினால் அவனை மீட்பித்து விடலாமே என்ற பேரிரக்கத்தால் தான். ஆனால் அவர்களும் பாவி என்று கூறும் அளவிற்கு சிலர்கள் உண்டு. அவர்கள் யார் தெரியுமா? இந்த மெய்யை வந்து பற்றிவிட்டு பிறகு ஓடிப்போனவர்கள். ஜாக்கிரதை. அப்பேர்பட்ட பாவி ஒரு னடமாடும் நித்தப் பிணம். அதுபோன்றோரிடம் யாரும் எந்த தொடர்பும் வைத்துக்கொள்ள கூடாது. மெய்யை விட்டு விலக்கப்பட்டவர்கள் அவர்கள். சத்தியம் செய்து கொடுத்தாயே அதை மறக்கிறதா?...

"ஒருவன் மறுபடியும் பிறக்காவிட்டால், தேவனுடைய ராஜ்யத்திற்குள் பிரவேசிக்கமாட்டான்" என்று ஏசுபிரான் பிரசங்கம் செய்யும்போது ஒருவன் குறுக்கே புகுந்து: " னன்

தான் பிறந்து விட்டேனே.... மறுபடியும் எப்படி பிறப்பது? என்று கேட்டானும். அதற்கு அவர், " மாமிசத்தில் பிறந்தது மாமிசமாகவே இருக்கும். ஆவியில் பிறப்பது ஆவியாய் இருக்கும்" என்று பதிலுரைத்தார்கள். னி மாமிச பிண்டமாகத்தானே பிறந்நாய். எம்மிடம் வந்நபிறகு தானே தேவ ஆவியாக ஆவிடை என்று யோனியில் பிறக்க வைத்தோம். அதைத்நான் அவர் சொன்னர்!.

10-12-72

ஆமை கடலோரத்தில் முட்டையிட்டு, அதனை தன் கண்களால் பார்த்து பொறிக்கச்செய்து னினைவால் வளர்க்கும். எம்பிள்ளைகளாகிய உங்ஙளையும் னும் அப்படித்நான் செய்கிறேும்.

வெளி உலகத்தில் எப்படி இருந்நாலும் ஒரே முடிவுதான். இங்கு கவனித்து ஜாக்கிரதையாக ஒருவரோடு ஒருவர் அன்போடு பழகி இருக்க வேண்டும். குற்றம் பார்க்க கூடாது என்று னினைவு இருந்நாலே போதும். னினைவைவிட வலுவானது எதுவும் இல்லை.

தெய்வம் வேறு இல்லை. னும் வேறு இல்லை என்ற னினைப்பு உனக்கு வேண்டும். அப்படி இருந்நால் குற்றமே வராது. அந்த குற்றமும் உன்னை விழுங்காது. அந்த

குற்றத்தையே னி விழுங்கி விட்டவனும் ஆவாய்.

இந்த மெய்யை அறிந்த சகோதரர்களாகிய னிங்கள் ஒருவருக்கொருவர் பாசத்துடன் இருக்க வேண்டும். அப்படி இல்லை யெனில் தீர்ப்புனேரத்திலும் மாறுத தண்டனை உங்களுக்கு வழங்கப்பெறும்.

னடுத்தீர்வையாகிய பொது தீர்ப்பு னடக்கும்போது, ஒரு டேப் ரிக்கார்டர் கருவி வந்து உன் எதிரில் அதுவே னிற்கும். உன்னை கேட்காமலேயே, உன் செயல் ஒவ்வொன்றையும் அது சொல்லும். இப்போதே அது செயல்பட்டுக்கொண்டு உன் செயல் ஒவ்வொன்றையும் பதிவு செய்து கொண்டிருக்கிறது. இப்படி யெல்லாம் னிகழக்கூடிய அளவுக்கு அது அப்படிப்பட்ட னிதிமன்றம். எழுதாத மாமறை இப்போது ருபத்தில் வந்து னிற்குதே, அதினிடம் சத்தியமாக னடந்து கொள்ள வேண்டும் என்று இரு.

உன்னை ஒரு கல்லு மாதிரி இருக்கிறுயே, மரம் மாதிரி னிற்கிறுயே என்று சொன்னல் கோபம் வருகிறது இல்லையா? அப்போது தெய்வத்தினை ஒரு கல்லாக ஆக்கி வைப்பது எத்தகைய கோபத்தை அதற்கு தந்து சாபம் வரும்பார்.

சின்ன ஒரு னெருப்புத்துண்டு, அக்னி தீயாகி கொழுந்துவிட்டு எரிந்து மரங்களை எரித்து காட்டையே சாம்பலாக்கி விடுகிறது. அது போலத்தான் உன் பொருமை தியும். அது உன் னற்பண்புகளை தீய்த்து அழித்துவிடுகிறது.

ஆசை, ஆணவம், காமியம் என்கிற முப்பாழ்குணம் கொண்டவனே மனிதன். இவன் அந்த குணத்தை வென்று முப்பாலுக்கு செல்லவேண்டும்.

ஒரு ஊரில் மழை பெய்ய வில்லை என்றால் கோயில் உள்ள சிலையை எடுத்து குளத்தில் தூக்கிப்போட்டு விடுவார்களாம். மழை பெய்த பிறகு அதை மீண்டும் எடுத்து பிரதிஷ்டை செய்வார்களாம். மழை பெய்யாததற்கு சாமிக்கே இவன் தண்டனை கொடுக்கும் மனனிலையை பார்.

இவன் வணங்கும் அந்த சிலை, எப்படி ஒன்றும் இல்லாத ஜடப்பொருளோ அது மாதிரி தான் இவன் அறிவும் இருக்கிறது.

இந்த உலகத்தில் இறைவனல் படைக்கப்பெற்ற வஸ்த்துக்களையும் அற்புதங்களையும் னினைத்து பேசினாலேயே போதும், மாதம் மும்மாரி பொழியும்.

இறைவன் இந்த அண்டத்தை படைத்து உனக்கு தந்நுள்ள செல்வங்ஙள் தலே கொள்ளாதது. அதற்கு னன்றி கூடனுக னீ என்ன செய்ய வேண்டும்? அந்த இறைவன் உனக்கு தந்த சீதனங்ஙளே, னன்றியுடன் னீ னினைத்து பேசிக் கொண்டிருந்நால் னிச்சயம் மாதம் மும்மாரி பொழியும்.

காற்றில் உள்ள பூதங்ஙளில் ஈரமும், உஷ்ணமும் முக்கியமானது. குளிர்தேசத்தில் உள்ள காற்றில் கொஞ்ஞமேனும் உஷ்ணம் இருப்பதால் தான் மனு உயிர் வாழ முடிகிறது. அதே போன்று அக்னிபிரதேசத்தில் பாலவனத்தில் வாழும் ஒட்டகத்திற்கு உஷ்ணகாற்று உள்ளே போகாமலிருக்க, அதன் மடிக்கு கீழ் சதைபாகம் ஒன்று கெட்டியாக தொங்கும். னமக்கெல்லாம் அது என்னவோ ஒரு அசிங்கம் மாதிரி தெரியும். இறைவன் கருணையால் அதற்கு படைத்த கருவிக் குலம் அது. இறைவன் இப்படி படைப்புகளே னுணுகி, னுணுகி ஆராய்ந்து அதற்கேற்ப அதனே செய்து படைத்துள்ளான். இந்த கருணைகளே அளந்நே பார்க்க முடியாது.

ஈசன் தன்னேவிட மேம்பட்டவனுக மனுஷனே படைத்திருக்கிறான். இதை னீ னினைத்து பார்த்ததுண்டா?

மனிதருள் னன்குவகை உண்டு. இதயமே இல்லாத

கீழ்த்தரமானவன் ஒருவன். இரண்டாமவன் பிறரிடம் குறை காண்பவன். மூன்றுமவன் அறிவாளி ஆனாலும் தீய எண்ணங்களுள்ளவன். மூவரையும் ஒதுக்கி வாழவேண்டும். நான்காமவன் இதயம் இருந்தும் வாய் மூடியாக வாழ்பவன். கண்ணியமானவன். இவன் தான் மூமின். இவனே இந்த உலக இச்சைகள் ஒன்றும் செய்வதில்லை. இவனைத்தான் ஞானிகள் கண்டெடுத்து மறை உலகிற்கு அழைத்து செல்கிறார்கள். அவனே ஞானியும் ஆக்குகிறார்கள்.

மாட்டு வண்டி ஓட்டுவதானாலும் கூட அதற்கு ஒரு வித்தை தெரிந்திருக்க வேணும். வண்டி ஓட்டும் போது மூக்கானாங்கயிறு ஒரு முழத்தில் மட்டும் இருக்க வேண்டும். அப்படி வைத்த ஒட்டினால் தான் வண்டி ஒரே சீராக செல்லும்.

உன் மரணத்திற்கு பின் உள்ள வாழ்வை முதலீடாகவும், இவ்உலக வாழ்வை அதன் லாபமாகவும் கருது. நீ அமானிதம் பெற்று வந்துள்ளவன்.

முதலில் மரணத்திற்கு பின்னால் உள்ள பெரு வாழ்விற்கு வேண்டிய மெய்கல்வியை தேடிக்கொள். அதன்பின் உனக்கு காலமிருப்பின், இவ்உலக தேவைகளையும் உன் ஜீவனை உபாயங்களையும் தேடுவதற்கு முயற்சி செய்யலாம்.

ஜீப்பிரயாணமான உடல், காஷாயத் தீர்த்தத்தை அருந்துகிறது என்ருல் அந்த உடலில் உயிர்ப்பு னுண்ணியமாக ஊசலாடுகிறது என்று ஆகிறதுஅல்லவா! இந்த அதிசயத்தை செய்து காட்டுபவர் யார்? இதைக்கூடவா எடுத்து சொல்ல வேண்டும்.

காற்று காலத்தில் மரத்தில், இருந்து இலைகள் உதிர்ந்து விடுகிறது. ஏன்? காற்று காலத்தில் காற்றடிக்கும் போது இந்த இலைகளின் கனமும் கூடி மரம் தம் பளு தாங்காமல் சாய்ந்து விடக் கூடும் என்பதனை கருதியே இலைகளை உதிரச்செய்து, அதன் கனத்தை குறைத்து வரும் ஆபத்தில் இருந்து மரங்களை காக்க இப்படி இறைவன் சிருஷ்டித்துள்ளான். இப்படித் தான் ஒவ்வொன்றையும் னுணுகி னுணுகி இவைகளை சிருஷ்டித்த கடவுள்தான், உனக்கு விதி என்ற ஒன்றையும் வைத்திருக்கிருன். அதிலிருந்து னீ தப்பிக்க மெய்யான குருமார்களையும் உலகிற்கு அனுப்பிவைத்துள்ளான்.

உனக்கு வரும் ஒவ்வொரு விதமான வியாதிகளுக்கும், ஒவ்வொருவிதமான மருந்தும் மாத்திரையையும் ஆராய்ச்சி செய்யும் இந்த உலகம், இறுதியில் வரும் மரணத்தருவாயான அந்த எமவாதைக்கு ஏதேனும் மருந்து இருக்கிறதா என்று

சிந்திக்க காணுமே! மனித சக்திக்கு அப்பாற்பட்ட ஒரு அருமருந்து இதற்கு இருக்கவேணுமே என்று யாரும் சிந்திக்கவில்லையே! மயிரிழை மட்டும் உன் கண்ணுக்கு தெரிகிறது. மலைபோல் உன் கண்ணெதிரே வரும் இது மட்டும் ஏன் தெரியவில்லை!

அறுசுவை ஒளியுமிடமே உனக்குதெரியாதே உன் உயிர் உன் உடலில் பற்றிக் கொண்டிருக்கும் இடம் மட்டும் உனக்கு தெரியப்போகிறதா!. ஒரு ஊரை மிகவும் பிரயாசைபட்டு தேடி அடைந்து, அந்த மலையில் நின்று அதன் வளப்பங்களை அனுபவித்து வாழ்பவருக்கும், அந்த மலை எங்கிருக்கிறது என்று கூட தெரியாமல், தேட ஒரு ஆர்வமும் இல்லாமல், எங்கேயோ நின்று கொண்டு இந்த மலையைப்பற்றி யோசனை பண்ணுகிறவருக்கும் எவ்வளவு வித்தியாசம் இருக்கும்.

அறுசுவையும் அருபம். ஜீவனும் அருபம். அது ஒன்றோடொன்று ஒட்டிக்கொண்டு ஒன்றிவிடுகிறது. எப்படி? இங்கு வந்துவர்களுக்குத்தான் அது தெரியும்!.

ஒரு அந்நாரத்தில், சுவாசம் என்ற ஒரு கயிற்றில் தொங்கிக் கொண்டு னீ உயிர்வாழ்கிறாய். அந்த சுவாசத்தை இடகலை பிங்கலை என்ற இரண்டு எலிகள் கடித்து கடித்து கத்திரித்துக்

கொண்டிருக்கின்றது. அது கத்தரித்து முடித்த உடன் நீ படுபாதாளத்தில் விழப்போகிறாய்.

எமனிடத்தில மாட்டி உதைபட போகிற இவன், உலக வாழ்வில் கீர்த்தி, புகழ் தேடி அடைய நினைப்பது எதற்கு பொருந்தும் என்றால் செருப்படி பட்டாலும் அது படுகின்ற னேரத்தில் வெளி வாசலில் திரை போட்டு மறைத்து போடலாம் என்று நினைத்து ஒருவன் மானம் இல்லாமல் செருப்படி வாங்க தயாராக இருப்பவன் நினைப்பது போல இருக்கிறது.

பாழும் கிணறு உள்ளது. முன்னே போனவர்கள் எல்லாம் அதிலே விழுகிறார்கள். அதைப் பார்த்தும் பயந்தும் அழுது புரண்டாலும் பிறகு பார்க்கலாம் என்று எண்ணும் விம்பாக பட்டபகலிலேயே அதில் போய் விழுகிறாய்.... உன்னை என்ன செய்வது?....

பணவெறி, பேராசை கொண்டோரிடம் எம் மெய்ஞ்ஞான பிடத்தைப்பற்றி பேசாதே. ஆசானிடம் பேசுவதிலும் பழகுவதிலும் ஜாக்கிரதையும் பயபக்தியும் உள்ளது அல்லவா! அதே போன்று அது எம் செயலைப் பற்றி பிறரிடம் நீ பேசும்போதும், பேசுவது யாரிடம் என்று அறிந்து பேசு. தகுதியானவர்களிடம் மட்டும் ஞானம்பேசு.

வினர்களிடம் எம்மைபற்றி பேசுவது, இங்கு னீ எம்மை தூஷித்த குற்றம் செய்யாவிட்டாலும், னீ பிறரை கொண்டு எம்தேவ பிடத்தை தூஷிக்கும் செயலை செய்துவிட்டவன் ஆவாய். பன்றியின் முன்னால் முத்தை இறைத்தது போன்ற அயோக்கிய தனமாகிவிடும் இது.

"வேலிக்கு வெளியே இருப்பவன் வேலிக்கு வெளியே தான்" என்று தீர்க்கதரிசனம் சொல்லியிருக்கிறது. ஜாக்கிரதை! உங்களை தேவ யோனியில் பிறக்க செய்துவிட்டேன். ஆனால் அதனை னினையாமல் னரகர்களுடன் கூடி னரகவேலையை தானே செய்கிறீர்கள். உலக எண்ணத்தில் இல்லாமல் னீ தேவ பிறப்பில் பிறந்தவன் என்ற எண்ணம் இருக்கவேண்டும். னமது னூலை பதாபாடிக் கொண்டும் தீர்க்க தரிசனங்களை படித்துக் கொண்டும் இருக்கவேண்டும்.

னீ எவ்வளவு பாடுபட்டு உன் உடை, ஆடை ஆகிவற்றை சம்பாதித்து வாங்கி அணிந்து கொள்கிறாய். ஆனால் அது உன் உடலில் ஒட்டி கொண்டு விடுகிறதா? இல்லையே. ஒட்டாமல் தானே இருக்கிறது. பாடுபட்டு வாங்கிய பொருளே உன்னிடம் ஒட்டாது. அப்போது தேவப்பிறப்பு வாங்க முடியாத பொருளாயிற்றே. அதை

மனிதனுக்கு மட்டும் தீர்ப்பு உள்ளது. அந்த த
கட்டாயம் வந்தே தீரும். தடுக்க முடியாது.

வேத வாக்கியங்களள் தான் மறைமொழி. ஒ
மறைமொழியில் கற்று தேர்ந்தவர் ஆனாலும் மெய் ஆ
அடைந்தால் தான் வேதம் விளங்கும். மெய்குரு பிரா
ஓட்டி பழகி செயல் கை வரவாகிய பிற்பாடுதான் ஒருவ
னிறை மொழி கிடைக்கும். இதன் பின் இவர்கள் திருவ
இருந்து வருவதெல்லாம் னிறைமொழியாகும்.
னிறைமொழி மாந்தர் தான் ஒருவனே பரம பத வாழ்
திருப்ப முடியும். அவர்கள் தான் வேதத்தில் சிந்தி
முத்துக்களே கோர்வையாக்கி உனக்கு போதிக்க முடி
ஒருவன் கற்ற மறைமொழி அவனே பரமபதத்திற்கு ஏ
னிறை மொழிதான் ஏற்றும். அப்படியானல் அந்த ம
மொழியின் செயல் என்ன மகா னிகரற்றதாக இருக்கும்!.

வண்டு, பூவின் ஜீவனை அணு அணுவாக ருசித்து பருகி ஒன்றும் இல்லாமல் ஆக்கி விடுகிறது. அதே போல் உன் ஜீவனை ஒவ்தோறும் விழுங்கி வருவது உன் சுவாசமாகும். இந்த சுவாசத்தை ஒன்று அங்கலத்திற்குள் அடக்குவதில் தான் சாதனை. எந்த வேதமும் எந்த கீதையும் படித்து என்ன? நம் உன் வெற்றி கண்களை திறந்த பிற்பாடு தான் எல்லாம்.

பாதாளத்தில் இருந்த ஜீவமந்திரத்தை, திருஷ்டியில் நம் முழுமையாக படித்து பார்த்து அனைத்தையும் தெரிந்துகொண்டு விட்டோம் என்றால் அது என்ன செயல்? சாதாரண மனிதனுக்கு இது தெரியுமா? இந்த காட்சி நிகழும் எல்லையில் நீ வந்துவிட்டாயே, எவ்வளவு அறிய பெரிய நிலையில் நீ இருக்கிறாய் என்பது உனக்கு புலனுகிறதா? மற்ற எல்லையில் நீ அரசனுகவும், பெரிய மந்திரியாகவும் இருந்தாலும் இப்போது நீ இருக்கும் பெருநிலையைவிட மட்டமானது தானே எல்லாம்?

எமனுடைய வாதனையை மாற்றுகிற பிரகாச பூவே விபூதி. கடலூரில் சாம்பல் விபூதி அல்ல என்று வள்ளலார் கூறியதால் குழப்பம் ஏற்படுத்தினர்கள். கண்டறியாத காட்சிகளையும், கேட்டறியாத கேள்விகளையும் எம்மிடம்

பெறுவீர்கள் என்று வள்ளலார் கூறியிருக்கிறாரே, இது எத்தனை பேருக்கு பட்டது. இதை பெற்ற நீங்கள் மட்டும் தானே புண்ணியனுனீர்கள்! இதை பாராமுகமாக பாராது சென்றவர்கள் பாவத்திற்கு தானே போகிறார்கள். இதை வைத்து தான் பாவ புண்ணியம் தெரிந்துகொள்ள வேண்டும்.

பாதிரி, மடாதிபதி, ஆலிம் என்பவர்கள் எல்லாம் மனிதர்களால் அப்பதவிக்குதேர்ந்நெடுக்கப்படுபவர்கள் தானே. இவர்கள் குரு என்று கூறப்பெறும் மெய்ஞ்ஞான தெய்வீக பிடத்தின் தன்மைக்கு எப்படி வரமுடியும்? குருமார்கள் என்போர் எல்லா வேதங்களையும் கையில் செயலாக கொண்டவர்களாக இருக்கவேண்டும். அப்படி கைக்கொண்டுள்ள மெய்ஞ்ஞான குருவானவர்கள் தான் தெய்வீக பேரரசர்கள். அவர்கள் உனக்கு மெய்யை போதிக்கும்போது, மற்ற மதங்கள் மீதும், உன் மதம் மீதும் உனக்கு அன்பு வரும். அவர் மூலமந்திரத்தை அறிவித்து அதை செயலாக ஆக்கி காட்டுவார். இப்படி அறிவிப்பது ஏன் என்று கூட மேலே சொன்னவர்களுக்கு தெரியாது. உன்னை அலகையாக போகாமல் நரகத்தில் நீ விழுந்துவிடாமல் காப்பாற்றுபவர்கள் தான், வேதத்தை உனக்கு போதிக்கும் மெய் குரு பிரான்கள். உன் உள்ளத்தில் உள்ள தீங்கை

யெல்லாம் சங்காரம் செய்து உன்னை தன் வசப்படுத்தும் மெய் ஆசான் செயலுக்கே சம்ஹாரம் என்று பெயர். திரு, ஸ்ரீ, இரண்டும் மெய்க் குருபிரானை மட்டுமே குறிப்பது.

கற்கண்டை வாயில் இட்டு சுவைத்தால்தான் இனிப்பு என்ற சுவை இன்னது என்று தெரியும். அதேபோல் மலர் என்று எஜமான இருந்தால் தான் மணம் வீசி அதன் நறுமணத்தை இதுதான் என்று அறியமுடியும் - இப்படி எல்லாவற்றுக்கும் ஒரு பொருள் எஜமான வேண்டும். அப்போதுதான் அதன் சிறப்பு இன்னது என்று நேர்முகமாக தெரியவரும். அதுபோல, மெய்யை விளக்குவதற்கும் ஒரு பொருளானது ஒரு உருவமாக மெய் ஆசானை நம் வந்துள்ளோம்.

னீ அகர முதல் இன்னது என்று தெரிந்து கொள்ள வேண்டும். ஆனால் அதனை னீ தெரிந்து கொள்ள வேண்டுவதற்குரிய ஒரு தகுதி, வள்ளுவர் கூறும் மலர் மிசை ஏகி மானடி சேர்வதற்கு முன்பா அல்லது பின்பா? அதுவும் உங்களுக்கு தெரியாது. உலகம் இதை லேசாக மிக சின்னதாக சாதாரணை ஒன்றுக எனைக்கிறது. ஞாலறிவாளர்கள் என்று சொல்லிக்கொள்ளும் இந்த உலகின் பெரும் பெரும்

வித்துவான்கள், கல்வியாளர்கள், அறிவார்ந்த னிபுணர்கள் மூலமாகவாவது மெய்யான அகரத்தை னீ அறியமுடியுமா? முடியாதே. எம் தெய்வ குடும்பத்தில் சேர்ந்து உன் மெய்ஞ்ஞான தேவகுரு அருளும் அன்பெனும் செயல்மூலம் மட்டும்தானே இதனை பெற முடியும்!.



கோழிக்குஞ்சு முட்டைக்குள் இருந்து வெளி வருவதற்கு தம் இள அலகினால் குத்தும். அதே இடத்தில் வெளியில் இருந்து தாய் கோழியும் அலகினால் குத்தும். இரண்டும் மேலும் கீழும் குத்த குத்த ஓட்டை உண்டாகி முட்டை உடையும். இரண்டும் பொருத்தினால் தானே விடுதலை. அதுபோல் எம் சொல்லும் உன் செயலும் ஒன்றினால் தான் எல்லாம்.

கூரான வாள் தகடு ஒன்றின் கூர்முனை பட்டாலே அறுந்துவிடும்படியாக கூருக இருக்கிறது அதன் முனை. அந்த கூர்முனையில் தேன் துளி ஒரு சொட்டு ஒட்டியிருக்கிறது என்று ஆசையில் னீ அதை னக்கினால் உன் னுக்கின் கதி என்ன? னீ அனுபவிக்கும் உலக சிற்றின்பம் அந்த தேனுக்கு ஒப்பாகும். தேன் துளி சுவையை அனுபவிக்க அந்த வாள் கூர்முனையை னுக்கினால் உன் னுக்கு அறுபட்டு அதோ கதி ஆகிவிடும்.

னீ பிறக்கும் போதே பிறவிப்பிணி என்ற நோயும் உனக்கு விதியாகிவிட்டது. அதனை போக்க எம்மிடம் தவமாதவ மருந்து ஒன்றை பெற்று உண்டால் தான் னீ மீள முடியும். அதனைத் தரத்தான் உம்மை நோக்கி வருகிறோம். அதை வேண்டாம் என்று ஓடுவதற்கு னீ என்ன பைத்தியக்காரனு? பயித்தியத்திடம் தான், அதன் பயித்தியம் தெளிய மருந்து கொடுக்கவந்தால் அது அதை உண்ண மறுத்து ஓடும். அதுபோன்ற ஒரு பயித்திக்கார தனத்தால் தான் எம்மை இந்த உலகம் தூஷிக்கிறது. அப்படி அறிவு பிரண்டு மாற்றமாக எம்மை பார்த்து அலறுகிறது. ஜீவ பண்டித மருத்துவராக மாதவ மருந்து எடுத்து வந்து, எமவாதையை தீர்க்கும் எமது மருந்தை ஏற்காமல் ஐயோ என்று அலறி தூர தூரமாக ஓடுகிறது. உன் பிறவிப் பிணியை தீர்க்க, இனமாக மருந்து தந்து தீர்த்து, உன்னை என்றும் அழியாதவனாக ஆக்கி ஒவ்வொருவரையும் அவரவர் மதத்திலும், ஜாதியிலும் தவறாமல் இருக்கும்படி செய்கிறோமே, அதை புரிந்து கொள்ளாதவர்கள் புத்தி இல்லாத பித்தர்கள் தானே!

சந்திரனும் ஆகாயமும் இக உலகில் கெட்டு வரும் அறிகுறிகள் அகமியத்திற்கும் பொருந்தும். ஆகாயம் தான்

னினைவு. அதற்கு உணவு தருவது மதி. மெய்யை பெருதவன் மதி கெட்டு போய்விடும். அதனுல் னினைவும் கெட்டுவிடும்.

பிரளயம் என்ருல் னி னினைக்கிற பிரளயம் இல்லே. மண்ணில் ஒவ்வொரு அணுவும் பிளக்கப்படும். எனக்கு இணக்கமாக னி இருந்நால் புலி எப்படி புல்லே தீண்டாதோ அதேபோல் அந்ந கொடூரமான பிரளயம் உன்கிட்டேயே வராது. அதற்கான திட்டங்களும் வகுத்துதான் வைத்திருக்கிறோம்.



❋ இருப்பதை வைத்து பசியாருங்கள். தின்பதில் அதிகம் இச்சை வைக்காதீர்கள்.

❋ பச்சரிசியை உண்டு பசியாற வேண்டும். கொஞ்சும் உண்டாலும் சந்தானது அது.

❋ மண்பானை சமையல் சுந்தமானதாக இருக்கும். மற்ற எல்லா உலோக பாத்திரங்களும் களிம்பு உடையது. மண்பானைக்கு சமமானது தங்க பாத்திரம் தான்.

உன்னை உண்டாக்கிய பரம அணு தான் உன் வயதை கணிக்கும் சக்தி கொண்டது. அதனிடம் உன் வயதை

னிர்ணயிக்கும் சக்தி மட்டுமல்ல உன்னை னித்திய தேகமாக்கும் சக்தியும் அதனிடம் தான் இருக்கிறது.

பெரியோர்கள் தங்களுள் தவத்தினால் வயதைக் கூட்டிக் கொள்ளவோ, குறைக்கவோ, முடிந்ததே தவிர வயதை னிர்ணயிக்கும் சக்தியை பெற அவர்களால் இயலவில்லை. அது சனீஸ்வர சக்தியைவிட பொல்லாதது. னீ னினைக்கும் சனீஸ்வரர் அல்ல அது. இது வேறு. அந்த பதவியை கைப்பற்றினாலும் வயதை னிர்ணயிக்கும் அதன் சக்தியை பணியச் செய்யவோ கட்டுப்படுத்துவோ இயலாததாகவே இதுவரை இருந்து வந்திருக்கிறது.

அதை உடைக்க னும் முதலில் ஒரு தவத்தில் அதை தேடினேம். அந்த சக்தி அகப்படாமல் ஒளிந்து கொண்டது. பிறகு அரும்பாடுபட்டு கடும்தவம் செய்து அது இருக்கும் இடத்தை கண்டுபிடித்து பணியச் செய்து, அந்த வயதை னிர்ணயிக்கும் சக்தியையும் கைப்பற்றினேம்.

இந்த தேகத்தைப் படைத்தது இந்த பரமா அணு என்று சொன்னேம் அல்லவா? அதனுள் இருக்கும் ஒரு மகாசக்தி தான் இந்த வயதை னிர்ணயிக்கும் சக்தியும். இதுவே உன்னை னித்திய தேகமாக்கும் சக்தியும் ஆகும்.

னீ பிறந்து னரனுக போகும் அந்த படுபாதாள அழிவிலிருந்து புது உயிர் உண்டாக்கி மனிதனுக்கி மிட்டு தேவனுக ஆக்குவதே எம்செயல். எம் இந்த அறிக்கையை கேட்டும் ஒருவரும் வரவில்லே என்ருல், மனிதன் என்று யாரும் இல்லே. எல்லாம் னரன்தான். ஒரு மெய்க்குருபிரானே அடையாதவன் னரன். அவரை அடைந்தவன் மனிதன். மனிதனுகி அவரை அடைந்தபிறகு ஈசனுக தேவனுக மாறுகிருன். னரனும் மனிதனும் உருவ ஒற்றுமை ஒன்றுகத்தான் இருக்கும். ஆனல் ஆசானே பெற்ற மனிதன் அதே உருவத்தில் தேவனுக மாறி எமனே மிதித்து போடக்கூடிய வல்லபத்தை பெற்றவனுகிருன்.

❋ ஜிவனுக்கு பசு என்று ஒரு பெயர் உண்டு. இந்த பசுவுக்கு பதி இறைவன். இந்த பசுவும் பதியுமான பசுபதி இதயதாமரையில் விற்றிருக்கிறது. ஜிவனுகிய பசு தன்னிடமுள்ள முன்று மலங்களையும் இந்த பதியை சார்ந்து விலக்கிக் கொள்ளவேண்டும். ஆம். குருவையே னம்பி சரனுகதி அடைந்து அவர்கள் என்னத்தில் சங்கமமாகி இரண்டற கலக்க வேண்டும். இதுவே பசுபதி பாசமாகும்.

❋ பிராப்தம் என்ருல் செய்வினே

இந்த மனித தேகம் குற்றம் உள்ளது. அதனால், இதில் இறைவன் ஒரு தனி தேகம் ஒன்றை இதனுள் கட்டிக்கொண்டு அதில் குடியிருக்கிறான்.

நாவில் பட்டவுடன் மறைந்த அந்த சுவை உன் உள் நாக்கில் ஒட்டி ஜீவனில் ஒன்றி விடுகிறது. சுவையும் ஜீவனும் அருபம் என்பதால் இது னிகழ்கிறது. ருசி ஜீவனில் ஒன்றுவதால் சுவாசத்திலும் இணைகிறது. சுவாசத்தில் இணைவதால் விந்திலும் அது ஒன்றுகிறது. அதனால் உன் பிறப்பிலும் அறுசுவையின் பாதிப்பு இருக்கும். அந்த கணக்கு பிரகாரம் உன் குணாதிசயங்களும் அமைகிறது.

இனப் பெருக்கத்திற்கு ஜீவ வித்துதான் ஆதாரமானது. ஆனால் இதே ஜீவவித்தினால் அழியாத ஜீவ ஏற்ற செயலும் னடைபெறுகிறது. இதுவேறு. அதுவேறு. தெய்வ ஆசான் உடன் ஒட்டி அவர்கள் காட்டும் வழிக்கேற்ப வாழும் போது உன் ஜீவன் வலுவடைந்து - சிதருமல் ஜீவ நுதமாக - ஆன்ம லோக வித்தாக மாறி ஒரு உடம்பு ஆகிறது. காயம் மாறி தேகம் ஆகிறது. னும் உடம்பு எடுத்ததின் பயன் இது. தாய் மரத்துடன் ஒட்டி அதன் கினை வழியாக உணவுபெற்று காய் கனி வித்தாக விளைவேறும் செயல் போல் ஆசான் மூலம் இது கிடைக்கிறது.

உன் மெய்க் குருவின் வாக்கிற்கினைங்ங னீ னின்று வெற்றி பெறுவது வில்லில் இருந்து அம்பு புறப்பட்டு சரியான குறியில் பாய்வதுபோல் ஆகும். மீன்சார னிரில் மீன் எதிர் னீச்சல்அடிப்பது போல, இகவாழ்க்கையில் எதிர் னீச்சல் அடித்து குருவிற்கு அடிபணிந்து னீ வாழ்ந்திட வேண்டும். மேலே சொன்ன இந்த அம்பும் மீனும் தான் குரு ராசி ஆகும்.

1.10.1973

அரசனனவன் தன் ஆட்சியில் மந்திரிகளை அவர் அந்நஸ்த்து, குணுதிசயம், பார்த்து பார்த்து தேர்வு செய்து னியமித்துக் கொள்வான். ஆனல் இப்போது சேலம் சந்தை மேட்டில் ஒரு அணுவிற்கு கடலை வாங்கி கையில் வைத்துகொரித்துகொண்டு கக்கத்தில் கேஸ் கட்டுகளை சொருகி வைத்து கொண்டு கேஸ் எதேனும் கிடைக்காதா என்று அலையாய் அலைந்து ஆளைபிடித்து கோர்ட் கோர்ட்டாக காத்திருந்து பிழைப்பு னடத்துபவர்கள் எல்லாம், இந்த னூட்டின் கவர்னர் ஜெனரலாக எளிதாக ஆகிவிடும் அளவிற்கு காலம் வந்துவிட்டது. காசு காசு என்று னினைத்து காசு இல்லாமலேயே இருப்பவர்கள் ஆட்சிக்கு வந்தால் எப்படி இருக்கும்? இருப்பதை அல்லவா பிடுங்கி கொள்வார்கள். வந்த உடன் இந்த ஜமீன் அந்த ஜமீன் எல்லாம் பிடுங்கப்பெற்றது.

லாபத்திற்கு வரி என்றால் சரி. விற்பனைக்கு வரி என்பது எப்படி பொருந்தும். ஜார்ஜ் ஆட்சி இருந்தபோது 35 ரூ கந்நாயம் தான். இப்போது ரூ.135 ஆகிவிட்டதாம். அப்போது அந்த காலத்தில் இவ்வளவு கந்நாயம் தான் கட்டவேண்டும் என்று ஒரு வரைமுறை எல்லாம் இருந்தது.



திருமங்கை ஆழ்வார் உலக முடிவுனுளையில் வர இருக்கும் மெய் னகரத்தை 'சாலைக்கிராமம்' என்று குறிப்பிட்டுள்ளார். இந்த கடைகாலத்தில் இங்கு வந்துள்ள இந்த 'மெய்வழிச் சாலை' வருவதையே அவர் குறித்துள்ளார். ஆனால் இதை உணராமல், ஒன்றும் அறியாமல் ஒரு புழு பூச்சி கூட்டை எடுத்து வைத்துக்கொண்டு இதுதான் "சாலைகிராமம்" என்று வம்படியாக கூறி அவர் தீர்க்க தரிசனத்தையே மாற்றி கூறி, உண்மையை புறக்கணிக்கிறார்கள். அந்த பூச்சிக் கூட்டை, வணங்கவும் செய்கிறார்கள். இந்த மெய்யெழில் பகிரங்கமாக உலகிற்கு வரக்கூட கூடாது என்றே இந்த கலியன் செய்யும் தந்திரம் இது. "சாலைக்கிராமம்" என்றால் அதற்குரிய, அவர் கூறிய அடையாளம் இருக்க வேண்டுமே! குயுக்தியாக ஏதோ செய்து அது இது என்று கூறி, இது மறைப்பாக இருக்கவேண்டும் என்று வேறு கூறுகிறான். அதனால் தான், "இந்த மெய்யை உணராதவன் வாயில் அவன்

தின்பதை தட்டி விட்டு மண்ணை போடு .... புல்லெதினி..." என்று கோபமாக அவர் சாபமிடுகிறார்.

ஊரான ஊர், உயிர் பயிரேற்றும் ஊர், உயிர் பயிருக்கு உதவி செய்யும் ஊர் என்று இந்த எல்லையின் செயலை விதவிதமாக அல்லவா திருமங்கை ஆழ்வார் சொல்லுகிறார். அப்படித்தானே இது இருக்க வேண்டும். இப்படியெல்லாம் இந்த உலகினர் செய்வதையும் கேட்கும் போது, இந்த மெய்யை அறிந்தவர்களுக்கும் உணர்ந்தவர்களுக்கும் முள்ளுமேல் அமர்வதுபோல துடிக்கச் செய்கிறது. இப்படி என்ன சொல்லியும் எந்த தலையும் தேறுது போலிருக்கிறது. எல்லாமே ஒரே மாதிரி மொட்டைத் தலையாகவா ஆகிவிடுவது? உன் விட்டில் ஒருவன் னுழைந்து அதாஅதம் பன்னினுல் வி எவ்வளவு துடிப்பாய்? அது போன்று இந்த மெய்ஞ்ஞான விட்டில் யார் யாரோ னுழைந்து அதம் பன்னுகிறார்கள். கேட்பதற்கு ஆள்இல்லை.



ஒவ்வொரு பருவமாக கடந்து விளைந்து மனித பருவத்திற்கு வந்தாயிற்று. இன்னுமொரு விளைவு இருக்கிறது. அந்த விளைவு தான் அறுவடைப் பருவம். அந்த பருவம் வராமல் அறுவடையில்லை. அதுபோல குருபெருமானிடம் ஞான அறிவு பெறுகிற ஆருவது அறிவு பெறுகிற காலம் ஒன்று

வரவேண்டும். அது னெல், கதிர் மணி ஆகும் காலம். அந்த காலம் வராவிட்டால், மனுவின் வாழ்வு கதிர் விட்டதும் காய்ந்து போன பயிர் போலத்தான்.

சிபில் மாதரசி போன்ற பெரியோர்கள் னடோடிகளிடம் அன்பு கொண்டிருந்தார்கள். இப்படி பெரியோர்கள் அவர்களிடம் அன்பு கொண்டிருந்ததால் சில னல்ல பழக்க வழக்கங்களை அந்த னடோடி மக்களுக்கு கற்பித்-திருக்கிறார்கள். இங்குள்ள னடோடி குறவர்களுக்கு இருக்கும் அந்த பழக்கங்களை சொல்லவேண்டுமென்றால், அவர்கள் கையில் ஒரு சத்தியாபிடி வாள் வைத்திருப்பார்கள். தலையில் பெரிய முண்டாசு கட்டியிருப்பார்கள். கட்டிடத்தில் படுக்க மாட்டார்கள். வானவெளியில் அல்லது ஓலைகுடிசையில் தான் படுத்து உறங்குவார்கள். தென்தேசமாகவே போய்க் கொண்டிருப்பார்கள். இது ஞானசெம்மல்களை தேடி செல்வது போன்று ஆகும். இது போன்ற பழக்கங்கள் எல்லாம் முன்காலத்தில் யாரோ ஒரு மெய்ஞ்ஞான மூலப்புருஷர்கள் இவர்களுக்கு எடுத்து வைக்க, அதை அப்படியே விடாப்பிடியாக பிடித்து வாழ்ந்து வருகிறார்கள்.

ஆனால், இப்போது இவர்களும் மாறி வாழ்ந்திட ஆரம்பித்து கொண்டிருக்கிறார்கள் - கட்டிடங்களும் கட்டிவாழ்கிறார்கள்.

கூலா காலமாக வந்த வந்த மதத்தை உலகமக்கள் கொஞ்சும் கொஞ்சுமாக அழித்து விட்டார்கள். அதனல், இந்த மதங்ஙள் போலியாகி எதுவும் கலியனுக்கு ஒட்டவே ஒட்டாமல் போய் விட்டது. கடைசியில் சத்தியமான அசலாக இப்போது வந்நுள்ள, எம் கையகத்தாகி உள்ள மறலியை விரட்டுகின்ற எம் மெய்ச் செயலேயே மதத்திற்கு பெயராக வைத்துவிட்டோம்.

இதில் சேராதவர்களுக்கு வர்ணம் இல்லே. மற்ற மதத்தில் முத்தி இருக்கிறதென்ருல், இந்த செயலுடைய மதம் ஏன் வருது?

உடம்பிலுள்ள கசடானது ரத்தத்துடன் கலந்து னும் னம்மை அறியாத னேரத்தில் தூக்கத்தில் தங்ஙிவிடும். அதனல் தான் தூக்கத்தை குறை என்கிறோம் அந்த னேரத்தில் கசடு தங்ஙி தான் பிறகு னேயாக உனக்கு வருவது. அந்த னேயை அதே உணவின் முலம் மாற்றி கொடுத்து தான் அதனை னிக்கி தவிர்த்து விரட்டி அடிக்க முடியும். ருசி ஏற ஏற கசடு அதிகம் ஏறும்.

துவ ஏற்றத்தில் பசியாவரம் எம் கைவர வாயிற்று. ஆனல் அப்படி ஆனது கூட எமக்கு தெரியாமல் கடும் தவத்தில்

இருந்நோம். இரண்டு முன்று மாதம் கழித்து தான் அந்த பசியாவரம் எம் கையகத்து ஆகிவிட்டிருக்கிறது என்பதனை உணர்ந்நோம்.

சதுர்யுகங்ஙோடி காலத்திலும் வந்த பாராவான்கள் அவரவரின் காலங்ஙளில் எடுத்து வைத்த முலமந்நிரங்ஙள் அனைத்தையும் இப்போது ஒரு உருவம் கைக்கொண்டு னிருபிப்பதென்பது எப்பேர்பட்ட செயல்!.

எதற்கு வந்நோம் என்று சிந்நிக்காமல் இருப்பது, தினமும் விடாமல் பாடுபட்டும் உழுதும் அதற்கு கூலி வேண்டுமே என்ற னினைப்பு ஒருசிறிதும்இல்லாமல் உழுது கொண்டே இருக்கும் ஒரு மடையன் போல இருப்பது ஆகும். னும் ஏன் பிறந்நோம்! னம்கதி என்ன? என்ற கேள்விகொண்ட தேட்டமுடையவனே மனு. இந்த எண்ணம் வராதவரை அவன் னரன்தான். இதை கற்பிக்கும் கல்விதான் மெய்க்கல்வி.

னரன் மனுவாகி தேவயோனியில் பிறக்காமல் இருப்பது மிக மோசமான ஒரு னிலையாகும். இந்த னிலையை, னரகனுக பிறப்பதைவிட மிருகமாக பிறப்பது மேல் என்றே சொல்லவேண்டும்.

னரன் இப்படி தேவனுக மாருதது ஒரு குற்றமாகும். னூறு ஆண்டு இதற்காக உன் ஜீவன் உன் வாழ்னுள் முழுதும்

உன்னுள் காத்திருக்கப்படுகிறது. ஏ திரும்பி பார்ப்பாய் என்றே அது காத்திருக்கிறது. ஆனால் காலமெல்லாம் கழிந்தாலும் உன் மனமும் செயலும் அதனை திரும்பிபார்ப்பது இல்லை. எமன் அனுகா வல்லப தவம் கொண்டு, இப்போது னும் எடுத்து விரிவாக உனக்கு சொல்லியும் ஏ திரும்பாவிட்டால், உன் குற்றத்தை அது வெளியாக்கி விடும். உன் மரண தருவாயில் அதற்கு அடையாளம் வெளியாகிக் கசப்பு வெளிவரும்போது, உனக்கு மாறுத அவமானம் வந்து சேர்ந்து விடுகிறது.

வாழ்னுள் முழுதும், எல்லாம் தனக்கு வேனும் என்ற ஒரு னினைப்பு உனக்கு எப்படி வருகிறது என்றால், உனக்குள் ஒரு பொருள் இருந்து அப்படி தூண்டி வந்ததனால்தான். அதற்கு தகுந்த முடிவில்லாத யோக்கியதை உடைய ஒரு பொருள் இருக்கிறது. அது உன்னுள் இருந்தாலும் அதை கைப்பற்றும் அறிவில்லாமல் இறுதிகாலம் வரை அதை தேடாமல், வினாக னாள எப்படி எப்படியோ கழிந்து விடுகிறாய்.

சிட்டுக்குருவிக்குள் ஒரு வகை சிட்டுகுருவி உள்ளது. அது உறங்கும்போது மேலே மல்லாந்து படுத்து காலை உயிர தூக்கி வானத்தில் இருந்து ஏதோ விழப்போவதை தான் தாங்கிக் கொள்வது போல படுக்குமாம்.

வானம் இடிந்து விழுந்தால், அதை தன் கால்கள் தாங்கிக் கொள்ளும் என்ற னினைப்பாம் அதற்கு! இதேபோல் மனிதனுக்கும் எல்லாம் தனக்கு தெரியும் என்றும் இந்த உலகத்தையே அவன்தான் தாங்குவதாகவும் ஒரு னினைப்பு இருக்கிறது.

அழியாப் பொருளை தேடாமல், அழிபொருளையே தேடி அழிந்து போவது மனித இயல்பாக ஆகிவிட்டது.

ஞமும் பாடுபட்டு எவ்வளவோ சம்பாதித்து பிறந்தகுலத்திற்கும் மதத்திற்கும் ஒன்பது வருடம் பாடுபட்டோம். பயன் எதுவும் கிடையாது. பலன் இல்லாவிட்டாலும் அதனல் பகையும் கலகமும் தான் எமக்கு வந்து சேர்ந்தது. எல்லாரும் மற்றவர்கள் பார்க்க மதிக்கத்தான் இறைவனை வணங்குகிறார்கள் என்ற உண்மையும் அப்போது னமக்கு தெரிந்தது.

உடம்பு முழுதும் விஷமாக பாம்பு உள்ளது. அதற்கு அடிபட்டுவிட்டால் அது பிழைக்காது.

கடவுள் இல்லை என்று சொல்பவர்கள் அதற்காக என்ன ஆராய்ச்சி செய்தார்கள். அதை பெற தகுந்த வழி இருக்கிறதா

என்று பார்த்தார்களா? ஆனல் இறைவன் தந்த இந்த அண்டத்தினே மட்டும் அனுபவிக்கிறூர்களே! அப்படி அனுபவிப்பது இறைவனுக்கு னன்றிக் கடன் என்று உணர்ந்நார்கள் இல்லே. அதற்கு பதில் சொல்லுவது ஒரு கடமை என்று அறிந்நார்கள் இல்லே. அந்த கடமையை மறுத்தளித்ததால் இவர்களே விழுங்ங எமனும் னரகமும் காத்திருக்கிறது என்றும் தெரியாது.

எல்லா அங்ஙக்குலங்ஙளும் தளர்ந்த பிறகு ஞானத்தை பற்றி சிந்நிக்கிறூர்கள். னீ அறிவாளன் என்று படிப்பு பட்டம் வொங்ஙி னிருபித்தபின் தான் உனக்கு அரசின் உத்தியோகம் கிடைக்கிறது. ஆனல் ஐம்பத்து எட்டு வயதில் உன்னே திருப்பி அனுப்பிவிடுகிறூர்களே!. உன் இக உலகத் தொழிலே விட இது ஒன்றும் மட்டமானது அல்லவே. இளமையில் கற்கவேண்டிய கல்வியே மெய்க்கல்வியும்.

இளம் வயது முதல் உள்ள ஞாபகசக்தி னூற்பது வயதில் குறைந்து விடுகிறது. ஆனல் எமக்கு அப்படி அல்ல. எமக்கு எப்போதும் அபார ஞாபக சக்தி உண்டு. இப்போது கூட னீ ஒரு செய்யுள் கூறு. அதை அப்படியே திரும்ப சொல்கிறேமா இல்லேயா என்று பார். இப்போது பல வருடமாக எனக்கு

உணவு கூட இல்லையே. இதன் விளைவு இன்னும் முன்று மாதத்தில் அதிசயமாக மாற இருக்கிறது.

அந்த னரக அவஸ்தையின் கொடுரம் இன்னது என்று இப்போது னீ அறியும்படி வெளிச்சமாக தெரிந்து ஆகிவிட்டால், அவ்வளவுதான், அடுத்து ஒரு பிடி சோறு கூட உன் தொண்டையில் இறங்காது. அப்படியே விக்கித்து போய் விடுவாய். பத்து புளிய மரத்தினை கொளுத்தி அனலாக்கி அதில் உன்னைப் போட்டால்கூட அது கொடுக்கும் வேதனை னரக அவஸ்த்தையை விட எவ்வளவோ குறைவானதாக தெரியும். அந்த அனல் கொடுமையின் வேதனையைவிட னரக அவஸ்த்தை அவ்வளவு கொடுரமானது.

இந்த உண்மை னிச்சயமானது. அதன் னிள அகலத்தை அறிந்த னும் சொல்லுகிறேம். எம் கையகத்து ஆகிக்கொள். அது உன் கடமையும் கூட. மரண அவஸ்தையாகிய கோர எல்லையை மாற்றி, பேரின்ப வாழ்வு உனக்கு தர விரும்பும் எம் காருண்யம் எப்படிபட்டது என்று இன்னுமா னீ உணரவில்லை.

மெய்யை னுடுவது அறிவு

உலக இன்பத்தை னுடுவது மனவெறி.

எமனை அடக்கியவர் யாராவது உண்டா? மார்கண்டேயருக்காக ஈசனே அன்று வந்து அடக்கியதாக கதைதான் கேட்டிருப்பீர்கள். ஆனால் எமனை அடக்கும் செயல் இதுவரை யார் கையிலாவது வந்ததா? இல்லையே. ஆனால் இந்த உலகம் முழுதும் எமன்கை அடக்கும். ஆனால் அந்த எமன் இப்போது எம்கை அடக்கும். அன்று ஈசனிடமிருந்த அந்த சக்தி இப்போது எம்மிடம் இருக்கிறது என்று னிருபித்து காட்டுகிறேமே! அப்போது னும்யார்? னும் யார் என்பதை பற்றி னிங்கள் இப்படித்தான் பேச வேண்டும்

வேதம் ஐந்து புலன்களுக்குள் தான் அடக்கம். கண், மூக்கு, வாய், செவி எல்லாம் முன்பு இருந்ததுதானே. அதைத்தானே இருந்ததனை இருந்தபடி உனக்கு காட்டினேன். ஆனால் அதற்கெல்லாம் அப்பாற்பட்ட எமனல்லவா உன் தலைக்கு வருகிறான். அப்போது ஐம்பொறிகள் எல்லாம் ஓடி ஒளிந்து கொண்டு உன்னை கைவிட்டுவிடுகின்றதே! அப்போது மீண்டும் னும் தான் வந்து உன்னை காப்பாற்றுகிறேம்.

உன் தேகத்திற்கு னோய் வந்தபோது அந்தவேதம் எத்தனை விதமாக வேதனை தந்து உன்னை வாட்டுகிறது. அப்போது உன் தேகம் தரும் வேதனையினால் அந்த தேகத்தின்

மீது கோபம் எதுவும் னீ கொள்வதில்லையே. பொருத்துக் கொண்டுதானே இருக்கிறாய்? அப்படித்தான் உன் சகோதரர்கள் ஏதேனும் னீ வருந்தும் படியான செயல்கள் செய்தாலும் னீ பொறுத்து கொள்ள வேண்டும்.

மெய்த்தொண்டர்கள் " நாயினும் கடையேன்"... என்று தம்மை தாழ்த்தி குருபிரானிடம் வேண்டுவார்கள். நாயிற்கு பல கெட்ட பழக்கங்காள் உண்டு. கக்கினதை தின்னுவது போல பலகெட்டபழக்கம் அதற்கு உண்டு. ஒரு சமயம், ஒரு நாய் குப்பை மேட்டில் படுத்திருந்ததாம். சே! இனிமேல் எச்சில் இலையை தின்னக்கூடாது. போன ஜென்மத்தில் நாம் என்ன வெல்லாமோ இருந்தோமே... என்றெல்லாம் னினைத்ததாம். " "தொப்" என்று எச்சில் இலை ஒன்று எதிர் வீட்டில் விழ, அந்த சத்தத்தை கேட்டதும் அந்தநாய் தான் னினைத்தெல்லாம் மறந்துவிட்டு, எச்சில் இலையை நோக்கி பறந்து ஓடிவந்ததாம். இதைத்தான் " நாய் மறந்தார்போல" என்பது " நாய்க்கு வேலையுமில்லை, னிற்க நேரமும் இல்லை" என்பார்கள். வீட்டில் முன்பாகமும் பின்புறமும் மாறி மாறி ஓடியது ஓடியபடி னிற்காமல் அலையும், வந்துனிற்கும். உடனே ஓடிவிடும். இப்படித்தான் உலக மக்கள் இகப்பாட்டிற்கு பறந்து பறந்து பாடாய் பறக்கிறார்கள். அதற்காக பறக்கிற பரப்பு இருக்கே...

அட அப்பா.... அதனால்தான் இந்த குணமெல்லாம் மாற வேண்டி, தம்மை " னையினும் கடையேன்"... என்று கூறிக்கொண்டு வேண்டி, குருபிரானிடம் இறைஞ்சி மெய்த்தொண்டர்கள் னிற்பார்கள்.

பரம பதத்தை அடைய வந்ததுவே இந்த உடல். பவக்கோலை எல்லாம் சங்ஹாரம் செய்து பவச்சேற்றை உலர்த்தி பெரிய ஆபத்தாகிய மரண அவஸ்த்தையை விரட்டி அடித்து, பரமபதத்தை இவன் தலையில் ஏற்றி வைப்பதுவே ஆறாவது அறிவு. அனித்திய தேகத்தில் முத்தி கிடைக்காது. உன்னை னித்திய தேகத்தில் பிரட்டி ஆக்கிந்நான் முத்தி தருகிறோம்.

" ஈட்டி எட்டின வரைக்கும் பாயும். பணம் பாதாளம் வரை பாயும்." என்று சொல்லியிருக்கிறார்கள். இதை எவ்வளவு னேராக சொல்லியிருக்கிறார்கள் தெரியுமா!.

பணம் இருந்தால் பாதாளத்திற்குத்தான் கூட்டிச்செல்லும். அதாவது னரகத்திற்கு தான் கூட்டி செல்லும். சொர்க்கத்திற்கு கூட்டி செல்லாது என்று திட்டமாக கூறுவதுவே இது. இது எவருக்கும் தெரியவில்லை.

பாதாளம் என்பது திறந்த உலகம், ஆழமான உலகம் என்று னினைத்துவிடாதே. அது மலம் இருக்கும் இடம்.

பணக்காரனும் மலமும் ஒன்று என்று னினைத்துக்கொள்.

இம்மையும் மறுமையும் உன் இரு மனைவிகள் போல. ஒருத்தியை னீ மகிழ்விக்க விரும்பினால் மற்றவள் உன்னிடம் கோபம் அடைவாள்.

ஞசிக்கு வெளியே எம் மூச்சு ஓடாது. மூச்சு ஓட ஆரம்பித்து ஞசி னுனிவரை அது வந்த உடன், உடனே அது திரும்பி உள்முகமாக ஓட ஆரம்பிக்கும். அதுவும் எப்படி ஓடும் தெரியுமா? மூல இடத்தில் இருந்து புறப்பட்டு ஞசினுனி வரை அது வருவதற்கு அதற்கு 160 ஞழிகை பிடிக்கும். பின் திருப்பி உள்முகமாக எழும்பி அதன் மூல இடத்திற்கு திரும்பி போய் அது சேருவதற்கே மேலும் 160 ஞழிகை ஆகும். இதை கணித்தால் மூச்சு ஓட வில்லை என்றுதான் சொல்லவேண்டும். ஒரு செடி தினமும் வளர்வது கண்ணுக்கு தெரிகிறதா? இல்லையே. அதேபோல்தான் இது. இது சாதாரண கை வரவா? இது மாதிரி ஒரு உருவம் இருக்க முடியுமா?

உனக்குள்ளாக தெய்வம் இருக்கிறது. " அதனுல் தான் தன்னை அறிய வேண்டும்" என்று பெரியோர்கள் சொன்னர்கள்.

னும் ஒரு பொருள் உமக்கு தந்நோம். அதை உலகத்தில் னி விலை கொடுத்து வாங்க முடியுமா?

ஈரோடு னுயக்கர் கடவுளை கோயிலில் தேடினர். கல்லில் தேடினர். அதனல் அங்கு இல்லை என்று னிச்சயமாக தெரிந்து "கடவுள் கல்லில் இல்லை, கோயிலிலும் இல்லை" என்று உள்ளது உள்ளபடி கூறிவிட்டார். தெரியாததை தெரியாது என்று ஒப்புக் கொண்ட அவர் எப்படியோ உங்களை, கல்லை வணங்கும் பேய் குணத்தில் இருந்து மீட்டு விட்டார். னும் எடுத்து வந்த வேலையில்பாதி அவரே முடித்துள்ளார் என்றே சொல்லுவோம். ஆனல் இன்னென்று வருது பார்.... இது சிவவாக்கியம்....

" னட்ட கல்லும் பேசுமோ?.... னுதன் உள் இருக்கையில்" .... என்று பாடுகிறார் பார், அது தான் இங்கு னடப்பது. இதைபிடித்து கொண்டுதான் தொடர்ந்து உங்களிடம் பேச அழைக்கிறேன்.

உன்னுடைய னுதன், ஓங்கார ஒலியேன், சப்தஸ்தானுதிபதி, உனது தேவாலயமாகிய கடத்தினுள் குடியிருக்கிறன். இதை ஈரோட்டார் கவனிக்கலில்லை ஆனல் சிவ வாக்கியர் போதிக்கிறார். னன் சிவ வாக்கியரோடு இன்னும் பல சித்தர் முத்தர்களையும் காட்சிக்கு அழைத்துக் கொண்டு பல அற்புத காட்சிகளை உன்னை காண அழைக்கிறோம். வா.... .....

னரர்களுடன் னீ பழகுவது, உனக்கு அவர்களுடைய னினைப்பை அதிகம் தந்து, கொடிய தண்டனை வரும். அறிவை அறிந்த பின்னுல் அப்படி அவர்களுடன் பழகுவது, அறிந்த அறிவை அலட்சியபடுத்தி வேறு பாதையில் போவது போல் ஆகும். இப்படி னீ செய்வதால் உனக்கு தரப்பெறும் தண்டனையை விட அவனுக்கு தரப்பெறும் தண்டனை குறைவு என்பது உனக்கு தெரியுமா?.... ஏனெனில், அவன் அறிவை அடைய வில்லை. அதனுல் கீழ்ப்படியில் விழுந்து அடிபட்டவன் ஆகிறுன். னீ மெய்யை அறிந்தவன். அதனுல் மேல்மாடியில் இருந்து விழுந்ததனுல், படுஅடிப்பட்டவன் கதியில் ஆகிவிடுகிறுய்.

கடவுளைதான் "கல்" ஆக்கி விட்டார்கள். அது அருபமாம். அதனுல் தான் அப்படி ஆக்கினேம் என்கிறுர்கள். சரி. அதன் வாகனங்களான மாடு, யானை, குதிரை, எலி இவை யெல்லாம் என்ன ஆச்சு? அதனையும் கல்லாக்கி அதன் மேல் ஏன் கல் சிலையை வைத்துள்ளீர்கள்! தலைமேல் சூரியன் கொளுத்துகிறுன், அந்த வெய்யில் தாங்கமல் குடையை பிடித்துகொண்டு, அந்த சூரியனையே கல்லாக்கி வணங்கிக் கொண்டிருக்கிறுர்கள்.

உன்னைபெற்ற தாயாராய் இருப்பவரே மெய்குரு. உலகில் னீ வணங்கும் தெய்வங்கள் மாற்றாந் தாய் போல. அது உன்னை பாதாளத்தில் தள்ளிவிடும்.

இறைவன் உனக்கு அறிவு தந்தது னித்தியத்தை அடையவே. னீ சமையல் செய்து பசியாற உண்ணுவதற்கு அஞ்சும் முனும் அடுக்காய் காய்கறிகள் சாமான்கள் எல்லாம் கொடுத்திருந்தும், னீ சமையல் எதுவும் செய்யாமல் கொக்கு காட்டினால், கொடுத்தவனுக்கு கோபம் வருமே அது போலத்தான்.

னீ ஒரு னொண்டி ஆடு - உன்னை விழுங்க வேங்கை ஒன்றுனோர் எதிரிலேயே காத்திருக்கிறது. னொண்டி ஆடாவது இந்த னிலையில் அதனைபார்த்து னடுங்கும். ஆனால் னீ எந்த னடுக்கம் அச்சம் கூட இல்லாமல் இருக்கிறுயே. எமன் வாதனை ஒன்று உனக்கு வரப்போவதை னிச்சயமாக அறிந்தும் னீ இப்படி இருப்பது ஆச்சர்யமாகத்தான் இருக்கிறது.

உன்னைபோன்ற ஒரு னுகரிக அறிவு மலைவாசிகளுக்கு இல்லை. னிர்வாணமாக கூட அவர்கள் வாழ்கிறுர்கள். அவர்கள் அறிவை பயன்படுத்தவில்லை, அதனால் அப்படி

வாழ்கிறார்கள் அல்லவா? அதுபோல மனிதனுக்கு ஆறாவது அறிவு என்று ஒன்று கொடுக்கப்பெற்றும் அவன் அதை அறியாமல் இருப்பது இந்த நிலையில் தான். ஆறுவது அறிவை அறிந்து அதன் மேன்மையை மனிதன் பயன்படுத்திக்கொள்ளவில்லை. பகுத்தறிவு என்று அவன் சொல்லிக்கொள்வது ஐந்தாவது அறிவின் ஒரு மேல் நிலையை தான். உண்மையில் பகுத்தறிவு என்பது ஆறுவது அறிவான பூரணமான ஒரு அறிவு.

பெரிய ஆபத்தாகிய கொடிய மரணம் வரும்போது - தம் வீடு, மனை, குடும்பம் என்று அனைத்தையும் இவன் இழக்கிறானே, அது போது, அவற்றில் எதுவாயினும் வந்து இவனுக்கு உதவுமா? யாரும் வந்து உதவ மாட்டார்கள். மெய் ஆசானாகிய மெய்குருநாதன் தான், அப்போது தெய்வமாக உன்முன் வந்து, ஆறுவது அறிவுதந்து உதவுவார்கள். அதனால் தான் தெய்வம் வேண்டும் என்ற உள்ளுணர்வு மனிதனுக்கு படைக்கப்பெற்று இருக்கிறது.

இதோபார் இது ஒரு பிடி மண். இதனிடத்தில் என்னென்ன அதிசய வல்லபங்கள் இருக்கிறது. இலிப்பு மரம், புளிப்புமரம், வாசனை மரம், எல்லாமும் இதில் இருந்து தானே அதன் தன்மையை பெறுகிறது. ஆக இந்த ஒரு பிடி

மன்னை படைத்த வஸ்து எப்பேர்பட்ட சக்தி கொண்டதும் பேரறிவு படைத்ததுமாக இருக்கும்? அதை கூட னினைக்காமல் கடவுள் இல்லை என்று வாதம் செய்கிறுர்களே! அவனிடம் இதை பேசவும் னினைப்பதும் கூட கடவுளாகிய கடத்தில் உள்ள உள்ளம் தானே!.

சர்வ மதங்களையும் னிருபிப்பது என்பது எம்மைத் தவிர வேறு யாராக இருக்க முடியும்? எல்லா மதத்தையும் ஒன்றுபடுத்தி செயலுடைய மதமாக ஆக்கி உள்ளோமே... இது என்ன சாதாரண செயலா....? யாத்திரை பத்து படிக்கும்போதே அந்த தவச்செயல் எம்மை பற்றியது என்று கூற னினைத்தோம். பிறகு சொல்லலாம் என்று இருந்துவிட்டோம்.

உலகம் முழுதும் உனக்கு னட்பாக இருந்தாலும் எம்மிடம் னீ கொள்ளும் னட்புக்கு ஈடு இணை உண்டா? எம் னட்புதான், உன் எம படரை னீக்கி காக்கும் மகிமை பொருந்தியது.

னர வாடைக்குத் தான் எமன் வருவான். தேவ வாடைக்கு எமன் வரமாட்டான்.

பாரவான்கள் எல்லாம் செல்வனுகவும், குபேரனுகவுமா வாழந்நார்கள்? அவர்களுக்கு இந்த பொய்ப்பொருளை வைத்தா கீர்த்தி வந்நது. உலகம் இப்படி பொய்ப்பொருளுக்கு அடிமையாக உள்ளதே! அந்த பொய்ப்பொருளை தன்னுடைய எஜமானுக அல்லவா இந்த மனிதன் நினைக்கிறான். ஆனல் இறுதியில் உன்னை பொய்யனுக்கிவிட்டு அந்த பொய்ப் பொருள் போய்விடுகிறது.

மரண அவஸ்த்தையில் ஒருவன் போவதை மற்றவன் கண்டும் அவன் போய்விட்டான் என்று நினைக்கிறனே ஒழிய தானும் அடுத்து அந்த கதிக்கு போகப்போகிறோம், மரண அவஸ்த்தையில் மாட்டிக் கொள்ள போகிறோம் என்று உணர்ந்நார்கள் இல்லையே . ஒரு மிருகம் செத்தால் இன்னொரு மிருகம் எந்த உணர்வும் இல்லாது பக்கத்தில் புல்தின்னுமே அதுபோலத்தானே இவனும் இருக்கிறான்.

இந்த உலகத்தை படைத்த பரம வஸ்த்து இப்போது மனித ரூபத்தில் வந்நிருக்கிறது. அது உன்னுடைய னண்பனுக ஆகி இருந்நால் உனக்கு அது னன்மை தானே. உனக்கு வேண்டியவற்றை னீ அதனிடம் கேட்கலாமே. எல்லாவற்றுக்கும் மேலாக எமனை மிதித்து ஏறும் வல்லபத்தையும் உனக்கு கொடுக்க அது தயாராக இருக்கிறது.

ஆதியே துணை

...சிரிப்பார், களிப்பார் தேனிப்பார்
திரண்டு திரண்டு உன் திருவார்த்தை
விரிப்பார், கேட்பார், மெச்சுவார்.....

- திருவாசகம்

தலைசெழிக்க வந்த தெய்வீக நிறைவிரி வேதனை அமுதம் சிந்தும்

திருஉரையாடல்கள்

...அருகிலொவ் வொருவர்க்கும்
தரும்வினை விடைச்சுவை
அருளமு தினையுண்டு
பெருகிய தருதலம்.

- மெய்வழி வேதம்

தெய்வமவர்கள் தங்கள் பிள்ளைகள் குழுமி உள்ள திருச்சபையில், பிள்ளைகளை பல்வேறு விஷயங்களைப்பற்றி விசித்து பேச அனுமதிப்பார்கள், அது ஞானசம்பந்தமாகவும் இருக்கும், இக உலகில் அன்றாடம் எடைபெறும் விசயங்களாகவும் இருக்கும். பிள்ளைகள் பேசுவதை கேட்டு ரசித்து மகிழ்ந்து இருந்து விட்டு, பிறகு அந்த பேச்சின் இடையிலோ அல்லது முடிவிலோ தங்கள் பேரறிவு பிரகாசத்தை அவ்வப்போது அருள்வார்கள். அது இதுவரை யாரும் கேட்டறியாததவையாக இருக்கும். அதிசயமான அற்புத திருவாக்கியமாகவும் அது இருக்கும். மெய்வழி பிள்ளைகளுக்கு அந்த வாக்கியம் பேரானந்த தேவ மொழியாக இருக்கும். இப்படிப்பட்ட, பேரி தங்கள் பிள்ளைகளை தங்கள் ஜீவ ஒட்டுதலுக்கும், அந்த தேவனுட்டிற்கு அழைத்து செல்லுவார்கள். அந்த காண்டற்கரிய விளக்கங்களை அறிந்து மகிழ்வோம்.

திருப்பத்தூரில் முதன் முதலில் தெய்வமவர்களின் மாணாக்கர்கள் ஆகியவர்களில் திருவேங்கட ஐயங்கார் என்பவரும் ஒருவர். அவர் தெய்வத்தை சந்தித்தது முதல், தெய்வத்தின் பெருமையை என்று உணர்ந்து தெய்வத்திடம் ஒட்டி பழகி கூடவே இருந்து வந்தார்.

ஒருநாள், அவர் தம்மையும் ஒரு பிள்ளையாக ஏற்கும்படி தெய்வத்திடம் வேண்டினார். அப்போது தெய்வம் அவர்கள் "நீ பிராம்மண குலத்தை சேர்ந்தவன். மேட்டிமை உடைய குலம் அது. அதனால் எம்மிடம் சிஷ்யனாக ஆகும் பக்குவம் உனக்கு வராது"... என்று கூறிவிட்டார்கள். ஆனால், அவர் மேலும் மேலும் தெய்வத்திடம் வேண்டி நின்றார். அப்போது தெய்வம் அவர்கள், " சரி, அப்படியானால் ஒரு கட்டளை இடுகிறேன். அதன்படி செய் பார்க்கலாம்" என்று கூறி " மாட்டு வாலைவெட்டி, துண்டு துண்டாக்கி, சமைத்து, வறுத்து எடுத்துவந்து இங்கு எல்லார் முன்னிலையும் நீ அதை உண்ண வேண்டும்" என்று உத்தரவுவிட்டார்கள்.

இந்த உத்தரவை கேட்டு அவர் " ஒ"வென்று அலறி கதறி ஆண்டவர்கள் எதிரில் மண்டியிட்டு குமுறி குமுறி அழுதார். "பெரியோர்களுக்கு பொறுமை உண்டு. பிள்ளைக்கறி சமைத்தவர்களாயிற்றே..." என்று கூறி அவரை எழுந்திருக்க சொல்லி சமாதானம் செய்து பிறகு பிள்ளையாக ஏற்றுக் கொண்டார்கள்.

மான்மியத்தில் வரும் " கான்முளை ஆதிக்குமுன்" பாடல் பாடிவரும்போது - " எட்டு கன்னிகள் நடந்து விட்டன. இன்னும் இரண்டு கன்னிகள் நடக்க இருக்கிறது" என்று உத்தரவாகியது.

பிறவியர் ஒருவர் தனது சகோதரர் இறந்து விட்டதற்கு போய் வந்ததற்காக பிராயசித்தம் செய்ய வேண்டி, தெய்வத்திடம் விண்ணப்பித்தார். அப்போது தெய்வமவர்கள்:

ஏதோ திடீர் என்று அகஸ்மாத்தாக னிகழ்ந்து விட்ட னிகழ்ச்சிக்குதான் பிராயசித்தமே தவிர, வேணுமென்று னீ போய் மாட்டிக் கொண்டதற்கு பிராயசித்தம் செய்தால், அது பிராயசித்தம் ஆகுமா? அது உன் பிறப்பையே னியே அழித்து கொள்வது போல் ஆகும்.

உயிரோடு இருந்த வரை அவன் உன்னை மதிக்கவில்லை. அவன் இறந்தபிறகு னீ போகணுமா? னீ சிவகாசியில் இருக்கிறாய். அவன் மதுரையில் இருக்கிறான். ஏதேனும் சாக்கு போக்கு சொல்லி வரமுடியவில்லை என்று தெரிவித்து விட்டிருக்கலாமே.

சரி, போகலாம். பிறகு இங்கு வந்து இவர்களிடம் பிராயசித்தம் செய்து கொள்ளலாம் என்றுதானே போய் வந்து இருக்கிறாய்.

எந்த விஷமானலும் இறக்கிவிடுவதற்கு இங்கு ஒரு பாம்பு பிடாரன் ஒருவன் இருக்கிறான் என்று யாராவது பாம்பிடம் கையை னிட்டுவார்களா? அது போன்று தான் இருக்கிறது னீ செய்துள்ளது. மீண்டும் சொல்கிறேன்கேள். அவர்கள் யாரும் உனக்கு உறவு இல்லை. னீ தனித்த

யோனியில் பிறந்தவன். எப்படி பிறந்தாய்? உன் னினைவை கொண்டு தானே பிறப்பிக்கப் பெற்றுள்ளாய்! இப்போது இப்படி எல்லாம் செய்து னினைவில் இருந்து னீ பிரண்டு விட்டால், னும் என்ன செய்ய முடியும்?

சத்தியமாக னடக்க வேண்டும். இல்லாவிட்டால் எல்லா பாடும் எடுபட்டுபோகும் என்று அறிவுரை அருளி பிரயாசித்தம் செய்தார்கள்.

அன்று மாலை மீண்டும் அதுபற்றிய திருவாக்கியம் ஆலயத்தில் தொடர்ந்தது...

னீ எந்த லோகத்தில் பிறந்தாய்? வானலோகத்தில் தானே! உன்னை சுற்றி உள்ள உறவுகளும், உலகமக்களும் எந்த லோகத்தில் பிறந்தவர்கள்? னரக லோகம் என்று உனக்குதான் தெரியுமே. இரண்டுக்கும் எவ்வளவு வித்தியாசம் - ஒரு பிறப்பு இன்னொரு பிறப்பை உகக்குமா?

அப்படி உகந்து அண்ணன் சாவுக்கு போனேன், தம்பி சாவுக்கு போனேன் என்று பிரயாசித்தம் வேண்டி வந்து ஏன் இங்கு னிற்கிறீர்கள்?

ஜீவப்பிறப்பாகிவிட்டு, னரப்பிறப்போடு போய் னீ ஒட்டினுல் ஜீவப்பிறப்பை பழித்த சாபம் உன் தலையில் ஏறும்.

தூலகாரியம் முக்கியமா? ஜீவகாரியம் முக்கியமா? தூல காரியம் தவறினுல் ஒன்றும் இல்லே. ஆனுல் ஜீவகாரியம் தவறினுல் தண்டனே உண்டு.

ஜீவகாரியத்தை மயிரிழைக்கும் கீழாக எங்கள் எனேத்தால், சாமான்யமாக இதனே எனேத்துக் கொண்டு இருந்தால் இப்படி எல்லாம் செய்யுங்கள்!

எரனுக்காக, எ ஜீவச்செயலில் இருந்து மாறி விடுகிறீர்களே! இது தேவச் செயலே அவமானம் படுத்துவது போலாகி சாபம் வந்து விடுமே.

ஒரு தீப்பொறி பட்டவுடனேயே தானே அணைக்க வேண்டும். தாமதித்து பிறகு அணைத்து கொள்ளலாம் என்று இருந்தால் எல்லாம் நாசமாகிவிடும். இருபது நாள் கழித்து வந்து எனிற்கிறீர்கள். உங்களே என்ன செய்வது? மெய்யில் கொஞ்சும் கூட ஒட்டவில்லே என்று தான் சொல்லவேண்டும்.



கூவுதையா.... வேல் கூவுதையா.... என்ற காகபுசுண்டர் தீர்க்கதரிசனம் சபையில் பாடப்பெற்றது. அப்போது தெய்வமவர்கள், "இதை ஒரு இருபது வருடங்களுக்கு முன் படித்தால் பொருள் விளங்கி இருக்குமா...? செயலில் எல்லாம் ஆன பிறகு அல்லவா தீர்க்கதரிசனம் புரிகிறது..... இல்லேயா....?" என்று கேட்டார்கள் பிறகு -

" இந்த பாடல் ஆலயத்தில் கேட்க ஆரம்பித்
எல்லோரும் ஆலயத்திற்கு உடனே வந்துவிட வே
என்றும் உத்தரவாகியது.

ஆதி பரம்பொருளே னமது குலதெய்
வந்ததைப்பற்றி ஒரு வரலாறு ஒன்று உண்டு. இறைவ
உலகம் தோற்றுவித்து மண்முனே முனைத்த காலம்
போன்ப உயிரை மக்களுக்கு பறிமாற எத்த
தூதர்களை இந்த உலகத்திற்கு அனுப்பியும், மக்கள் அ
அடையாளம் கண்டு கொள்ளாது அலட்சியம் படுத்தி
மேலும் மேலும் அவர்களுக்கு துன்பம் இ
மட்டுமல்லாமல், இருக்க இடமின்றி தவிக்கும்
தூரத்தினர்கள்.... இதனையெல்லாம் பார்த்த ஈசன் மெ
இழந்து இறுதியில் தாமே புறப்பட்டு இப்பூவு
அவதரித்து எழுந்தருளிவந்து, இந்த எல்லையில் மெய்
அரசாட்சியை இப்போது அவர்களே இங்கு ஏற்
யிருக்கிறார்கள். இப்படி ஈசனே இங்கு வந்து விட்

வசந்த காலத்தில் னம் எல்லோர்க்கும் இந்த மெய்ஞ்ஞான அருளமுதம் மிக எளிதாக கிடைத்தது மட்டுமல்லாமல் இன்னும் வந்து கொண்டிருக்கும் அளவில்லாத பல்லோருக்கும் இவர்கள் வாரி, வாரி வழங்கி வருகிறர்கள் என்று சபையில் பேசப்பெற்றது. இதனை பற்றி விவரிக்க தெய்வம் அவர்கள் ஒரு கதை சொன்னர்கள். அது இதோ:

"ஒரு பெரிய அரசன் இருந்தான். அவன் தன் ஒரே மகனுக்கு திருமண ஏற்பாடு செய்து பல கோடி ரூபாய் செலவிட்டு படே ாடபமாக ஆடம்பரமாக ஒரு பெரிய விருந்து ஏற்பாடுகளையும் செய்தான். பலவிதமான இனிப்பும், ருசியுமான தின்பண்டங்களும் தயாரிக்கப்பட்டன. பல னட்டு ராஜாக்களுக்கும், இவன் கீழ் கப்பம் கட்டும் சிற்றரசர்களுக்கும் அழைப்பான அழைப்புகள் ஏராளமாக அந்த அரசன் அனுப்பினன். அந்நோ! என்ன ஆயிற்றோ தெரியவில்லை! திருமண விருந்துக்கு ஒருவரும் வரவில்லை.

கவலைப்பட்டு மனமொடிந்த ராஜா, உடனே ஒரு முடிவுக்கு வந்தான். ஊரில் உள்ள அனைவரையும், எழை, பாழை, பிச்சைக்காரன் முதல் எல்லோரையும் விருந்துக்கு அழைத்து விருந்தளித்துவிட்டான்.

அது போல, திடீரென்று வந்த ஒரு அதிர்ஷ்டமான ஒரு வாய்ப்பில் தான் உங்களுக்கு இந்த ஞான அருளமுத விருந்து

வெகு தாராளமாக கிடைத்துக் கொண்டிருக்கிறது" - என்று இந்த கலியை அழிக்க கடமை பூண்டு இந்த பூமிக்கு மெய்ஞ்ஞான அருளாட்சி புரிய, அவதாரமாக வந்துள்ள தனிப்பெரும் தலைமைப்பதியான எமது தெய்மவர்கள் தெரிவித்தார்கள்.



ஒரு கஞ்சுப்பிரபு இருந்தான். அவன் கஞ்சுத்தில் கூட பிரபுதான். அவ்வளவு கஞ்சுத்தனம் உடையவன். அவன் ஒரு வேலையாள் வைத்திருந்தான். அந்த ஆள் மம்மட்டி எடுத்து பத்து மணி நேரம் வேலை செய்தால் 2 ரூபாய் தருவான். இப்படி எல்லா பணிகளுக்கும் எல்லா வேலையாட்களுக்கும் இந்த மணி நேர கணக்கு போட்டுத்தான் சம்பளம் தருவான். கூலியும் தருவான். ஒரு சமயம், அவன் ஒரு கேஸ் விஷயத்தில் மாட்டிக் கொண்டுவிட்டான். தப்பிப்பது பெரும்பாடு ஆகி விட்டது. அந்த கோர்டின் ஜட்ஜ், இந்த பணக்காரனை கஞ்சுப்பிரபுவுக்கு எப்போது தண்டனை கொடுக்கலாம் என்று முன் விரோதம் கொண்டு காத்திருப்பவன். இவனை கண்டாலே அவனுக்கு பிடிக்காது. இந்த நிலையில், இந்த கேஸ், இந்த ஜட்ஜ் முன்னிலையில் விசாரணையும் வந்து விட்டது.

கஞ்ஞுப்பிரபு, தன்பக்கம் கேஸ் ஜெயிக்க வேண்டும் என்று எண்ணி பட்டணத்தில் இருந்து ஒரு பெரிய வக்கீலை வரவழைத்தான். அவரிடம் கேசை ஒப்படைத்தான். அந்த வக்கீல் பல இரவு முழுதும் சட்டபுத்தகங்ஞளை மாறி மாறி படித்து, பாயிண்டுகள் பல எடுத்து பேசி, அரும்பாடுபட்டு வாதாடினர். ஐந்து னிமிடத்தில் ஆராய்ந்த அத்தனை பாயிண்டுகளையும் எடுத்து வைத்து பேசி முடித்து விட்டார். அந்த ஐந்து னிமிட வாதத்திலேயே கெட்டிகார தனமாக பேசியதால் ஜெயித்தும் விட்டார்.

அடுத்து, னமது கஞ்ஞுப்பிரபு அவருக்கு பீஸ் கொடுக்க வேண்டும். சரி என்று அவருக்கு தாரளமாக பீஸ் தர வேண்டும் என்று இவர் கணக்கு போட்டாராம். எப்படி தெரியுமா? பத்து மணி னேரம் மம்மட்டி எடுத்து கூலி வேலை செய்தால் கூலி இரண்டு ரூபாய். இது ஒரு ஐந்து னிமிட வேலை தான் ஆகிறது. ஞஞ்பைசா கூட வரவில்லையே. அதுவும் மம்மட்டி கூட எடுக்கவில்லை. அதனல் இதற்கு போய் எவ்வளவு கூலி கொடுப்பது? ஒரு ஐந்து பைசா கொடுத்துவிட்டால் போதுமா? என்று வக்கீலிடமே கேட்டாராம். வக்கீலுக்கு கோபம் கோபமாக வந்தது. அந்த கஞ்ஞுப்பிரபுவை வெட்டிப் போடலாமா என்று ஆகிவிட்டது என்று தெய்வமவர்கள் ஒரு கதை கூறிவிட்டு, இந்த கஞ்ஞுப்பிரபு யார் தெரியுமா?

என்றார்கள். பிள்ளைகள் "தெரியவில்லை.... தெய்வமே..." என்று கூறினர். அதற்கு தெய்வமவர்கள் "அது நீங்கள்தான் வேறு யாருமில்லை" என்று உத்தரவாகியது. "ஜீவரட்சிப்பு செயலை உலகம் தோன்றியது முதல் எந்த பாரவன்களாவது ஒரு காசுக்கு சமமாக எடுத்து வைத்தது உண்டா! ஆனால் நீங்கள் அந்த கஞ்சுப்பிரபு போல, எமனை மிகைத்து உன்னை கரை சேர்க்கும் எம் செயலுக்கும், ஒரு ஒரு ஐந்து பைசா என்று வைத்திருக்க கூடாதா? என்று நினைக்கிறீர்கள்!" என்று அருளினார்கள்.

ஒரு பெரிய ஓட்டல் அதிபர் தெய்வத்தின் பிள்ளையாக இருந்தார். அவர் திருவிழாதோறும் உணவுப் பொட்டலங்களை அசல் விலைக்கும் குறைவாக மக்களுக்கு வினியோகிப்பதாக தெய்வத்திற்கு சிலர் தெரிவித்தனர். அப்போது தெய்வம் அவர்கள் அவரை அழைத்து கிழ் கண்டவாறு அருளுரை-தந்தார்கள்.

"மெய்வழிக்காக நீ காரியமாற்றுவது எமக்கு மிக சந்தோஷமே. ஆனால் உன்னை நீ நஷ்டப்பட்டுக் கொண்டு மெய்வழிக்காக செயலாற்றுவது என்பது நடிப்பு ஆகிவிடும். எல்லோரும் மெச்ச வேண்டும் என்று நீங்கள் எந்த நஷ்ட காரியங்களும் இங்கு செய்யாதிருப்பதையே நம்

விரும்புகிறேன். ஏனெனில், அப்படி செய்பவர்களை பார்த்தால் இந்த மெய்யில் னடிக்கிறார்களோ என்ற கவலை எனக்கு வந்துவிடுகிறது.

ஒரு சமயம், சபையில் பிறரியர் ஒருவர், ஒரு தவறு செய்து விட்டமைக்கு தெய்வம் அவர்கள் கோபம் கொண்டு கண்டபடி திட்டினர்கள். பிறகு சமாதானம் அடைந்தார்கள். அப்போது சபையில், பிள்ளைகள், " தெய்வம் அவர்கள் கோபம் அடையும்போது இதுபோன்று பிள்ளைகளை திட்டுவதைத்தான், "*கீழ்மை உவமானம் கொடுக்கக்கூடாது....மகதி....!*" என்று தீர்க்க தரிசனங்கள் பார்த்து பேசுகின்றன என்று மகிழ்ச்சியுடன் பேசினர். அப்போது தெய்வம் அவர்கள் "ஆமாண்டா.... அந்த பாண்டியா அனந்தன் இருக்கிறானே அவனிடம் ஏதேனும் செய்ய வேண்டும் என்று ஒன்று கொடுத்தால், ஏதேனும் குளறுபடி செய்வான். "திருட்டு பயலே, ஆத்தா... அம்மா" என்று வாயில்வந்தபடி கண்டபடியெல்லாம் திட்டிவிடுவோம். அதற்கு அவன் "தெய்வமே.... அது மாதிரி னன் இருந்தால் உங்கள் பிள்ளையாக இருப்பேனு தெய்வமே!...." என்று கதறுவான். இதுவே வழக்கமாகிவிட்டது" என்று தெரிவித்து புன்னகை பூத்தார்கள்.

னமது தெய்வமவர்கள், மூலப்பழம் பெற்று ஏகவல்லபம் கைக்கொண்டெழுந்த னுள் எட்டாம் னுள் ஆகும். எல்லாம் கோள்களாக உள்ள கிரகங்ஙளின் வலிமை, னம்மை சிறுமைபடுத்தா வண்ணமும், தொடமுடியாத வண்ணமும், ஆக்குவதற்கு அன்று அவர்கள் மேன்மையை கை கொள்ள வித்திட்ட னுள் தான் அது." என்று சபையில் பேசப்பெற்றது. அப்போது தெய்வமவர்கள்:

" னும் ஒரு விரலேக்காட்டி இரண்டு என்ருல் னிங்ஙளும் அப்படியே சொல்ல வேண்டும். அதாவது எம் எண்ணத்திற்கு செயலுக்கும் அப்படியே உன் எண்ணத்தை என்னிடம் ஒட்டிவைக்க வேண்டும். அப்போதுதான் மீட்பு" என்று அருளினர்கள்.

அப்போது சபையில் "னும் தெய்வ உத்தரவுபடி அப்படியே னடந்து கொள்ளவேண்டும். அதனுல் தான் தீர்க்கதரிசனங்ஙள் தெய்வமவர்களை *"சேனைகளின் கர்த்தர்"* என்று அழைக்கிறது இராணுவத்தில் சேனைகளின் தலைவனுகிய கர்னலிடமிருந்து என்ன உத்தரவாகிறதோ, அதை அப்படியே, அதன்படி தானே சேனைகள் வேலை செய்ய காத்திருக்கும். அந்த சேனைகள் போல னுமும் இருக்க வேண்டும்." என்று பேசப்பெற்றது.

"னம் தெய்வமவர்களின் கையகத்தானவர்களே மண் தீண்டுவதில்லை. ஒன்பது கோளங்களில் ஒன்றுன மண் கோளத்தின் தன்மையை மாற்றி, ஜீவப்பிரயாணமானவர்களை, மண் தீண்டாமல் தெய்வம் அவர்கள் பாதுகாக்கிறார்கள். அதனால் தான் "மண் கோள் அகற்ற வரும் தவ னெறிகுலமான்" என்று மாண்மியத்தில் தெய்வந்தை குறிக்கப்படுகிறது" என்று சபையில் பேசப்பெற்றது. அப்போது தெய்வமவர்கள் புன்னகையுடன், *"ஆமாம்.... னேற்று குலமான் அனந்தனுக்கு மண்கோளை அகற்றியாகிவிட்டது. அதற்கு அவன் முன்பே ரிஜஸ்டர் பத்திரமும் செய்து கொண்டு விட்டான் பார்!"* என்று அருளினார்கள்.

ஒரு பொருள் அதன் மதிப்பு தெரிந்தவர்களிடம் இருந்தால் தான் பத்திரமாக பாதுகாப்பாக இருக்கும். இன்று உலகம் திருத்தி திருப்பமுடியாத எல்லைக்கு போய் விட்டது. சர்வத்தையும் படைத்த கடவுளை ஒரு 'கல்' என்று கல்லாக்கி விட்டார்கள். அந்த கல்லை மண்டியிட்டு வணங்குகிறார்கள். ஒருவன் பாடுபட்டு சம்பாதித்த தங்க, வைர னைகளையும், பட்டுபுடவைகளையும் தன் மனைவி மக்களுக்கு தந்துதானே பூட்டி அழகுபார்க்க வேண்டும். ஒரு கல்லுக்கு பூட்டுவது, அணிவிப்பது என்றால் ஒரு அறிவினம் என்று சொல்வதை தவிர

வேறு என்ன சொல்ல இயலும்? எங்கள் எப்படியோ இந்த கல் வழிப்பாட்டில் இருந்து மீண்டுவிட்டீர்கள். இது யார் செய்த தவம்?

பிள்ளைகள்: *தெய்வம் செய்த தவத்தினால் தான் நாங்கள் மீண்டோம் தெய்வமே!*

தெய்வத்தின் மகிமையை தெரிந்து அறிந்தவர்கள், தெய்வத்திடம் ஓடிவந்து தங்களையும் பிள்ளையாக்கிக் கொள்ள வேண்டும் என்று வேண்டி நிற்பவர்களில் ஒரு சிலரின் கடந்த காலத்தை எடுத்தால், அவர்கள் மிகவும் முரடர்களாகவும், கள் குடிப்பவர்களாகவும், தீய பழக்க வழக்கங்களுக்கு உட்பட்டவர்களாகவும், அடிதடி ஆட்களாகவும், ஏன் ஒரு சிலர் கள்வர்களாகவும் கூட இருந்தவர்களாக இருப்பர். தெய்வம் அவர்களுக்கு பலவித புத்திமதிகளையும், பிராயசித்தமும் செய்து அங்கத்தினராக ஏற்றுக் கொள்வது உண்டு. இதை குறித்து வெளி உலகில் சிலர், "இப்படி பட்ட அயோக்கியர்களையும், உங்கள் ஆண்டவர்கள் தம் பிள்ளைகளாக ஏற்றுக் கொள்ளலாமா? இது என்ன நியாயமா!, என்று கேட்பதாக, ஒரு பிள்ளை தெய்வத்திடம் வந்து கூறினர். அப்போது தெய்வமவர்கள்:

"ஏன்?.... தம் பிள்ளை எவ்வளவு கொடியவன் ஆனாலும் அவன்தாய் அவனை விரட்டி விடுவாளா? அந்த கருணையில் ஒரு சிறிதாவது பெரியத்தாய் என்று தீர்க்கதரிசனங்கள் அழைக்கும் எமக்கு அந்த ஜீவன்கள் மேல் இரக்கமும் கருணையும் கொஞ்சமாவது இல்லாமல் போய்விடுமா?" என்று பதில் அளித்தார்கள்.

ஒரு சமயம், நாயை வீட்டில் வளர்க்கலாமா? என்று சபையில் பேசப்பெற்றபோது ஆண்டவர்கள் வாக்கியம்:

"நாய் உன் வீட்டை காக்கும் என்று நீ நினைப்பது போல அது உதவாது. திருடன் திட்டமிட்டு வரும்போது ஒரு மாமிசத்துண்டில் சிறிது மயக்க வஸ்து தடவி வைத்து விசி எறிந்துவிடுவான். இது உடனே ஓடிச்சென்று அதை தின்று விட்டு மயங்கிவிடும். பிறகு அவன் வந்த வேலையை முடித்துகொள்வான். மொத்தத்தில், நாய்க்கு பயித்தியம் பிடிக்கும் வரை அது நல்லதாகத்தான் இருக்கும். ஆனால், அதற்கு எப்போது பயித்தியம் பிடிக்கும் என்று உனக்கு தெரியாதே! அதுமட்டுமெல்லாமல் நீ வளர்க்கும் நாய் உன்னுடன் நெருங்கி பழகும். அதனால் உன்னை அறியாமல் நீ அதனுடன் ஒட்டுதல் காட்ட நேரும் படி இருக்கும். உன்னை மரணம் சந்திக்கும் நேரத்தில் உன்னிடம் பிரியமாயிருந்த

அந்த முயை னினினைத்தால் அவ்வளவுதான், உனக்கு அடுத்த பிறப்பு முய் பிறப்புதான் கிடைக்கும்"

பெண் இனத்தை வெறுத்து, பெரியோர் ஒருவர் பாடியதாக ஒரு செய்யுள் ஒன்றை, தெய்வம் முன்பாக ஒருவர் பாடினர். அப்போது தெய்வமவர்கள்-

" பெண் இனம் வேண்டாம்" என்று ஞானிகள் யாரும் சொல்லமாட்டார்கள்! அது மாதிரி ஞானப்பாடல் ஏதேனும் இருந்தால், அவர்கள் ஒன்று ஞானியாக இல்லாமல் இருக்கனும் அல்லது ஞானம் பெறுத முன்பு பாடியதாக இருக்கும். ஏனெனில், பெண் இனமும் இறைவனுடைய படைப்புதானே! இவனே பெண்ணிடம் இருந்து வந்தவன்தானே. அப்படியிருக்க இறைவன் படைத்த இனத்தை மெய்ஞ்ஞானிகள் யாறும் வெறுக்க மாட்டார்கள். இறைவனுக்கு துரோகிகள் மட்டும் தான் இறைவன் செயலை பழிப்பார்கள். பெண்களும் ஞானம் அடைய தகுதி உடையவர்களே! எந்த ஆண் இனமும் அவர்கள் ஞானம் பெறுவதை தடுக்க முடியாது. ஞானத்திற்கு பெண்கள் ஆகாது என்று சொல்லும் அந்த ஆண்களை ஞமும் பெண்கள் சார்பாக எதிர்க்கிறோம். என்று அருளினர்கள்.

ஒருனள் மத்தியம், தவத்திலிருந்து தெய்மவர்கள் வந்நதும், திருமூலர் தீர்க்கதரிசனம் சபையில் ஒதுப்பெற்றது. அதில், "தெய்வத்தின் பெருமையை னமது தெய்வமே அறிந்நதில்லை.... னுமும் அறியவில்லை" என்று அதில் கூறப்பெற்றுள்ளது. மேலும், " வானேர்கள் தாமறியார்... தானே அறியும் தவமுடையார்.... " என்றும் பலவாறு தெய்வத்தைப்பற்றி அந்ந பாடலில் காணப்பெற்றது. அதற்கு பிறகு கௌதுல் ஆலம் வாக்கியம் படிக்கப் பெற்றபோது... அதில் தெய்வமவர்கள் னமக்கு இடைக் கச்சையும் தலைப்பாகையையும் அணிவித்திருப்பதையும் கூறியிருந்நது. தெய்வம் னம்மை திருத்தி, மெய்ஞ்ஞானத்தில் திருப்பி, னம்பாவத்தை எல்லாம் சங்காரம் செய்வதை அது கூறிவந்நபோது, தெய்வம் அவர்கள் இளனகை பூத்தார்கள். "அப்படி சிரித்த முகத்துடன் னம்மை திருத்துவார்கள்" என்றும் அது கூறியது. அப்போது தெய்வமவர்கள், "*இவை எல்லாம் னிங்கள் தெரிந்தும், அறிந்து திருந்தும், வானவர்களாகிய உங்களின் பெருமையை தெரியாமல் னபுசிகளின் பாச வலையில் சிக்கி, அந்ந மனித பிசாசுகளுடன் போய் ஒட்டி உறவு வைத்துக் கொள்கிறீர்களே! இது சரிதானு?*" என்று வருத்தத்துடன் ஒரு வினுவை எழுப்பினர்கள்.

தமிழ் இலக்கியங்களில் மிகவும் புலமைபெற்ற ஒரு கல்வியாளர் ஒருவர் தெய்வத்தின் முத்தப்பிள்ளைகளில் ஒருவராகவும் காரியதரிசியாகவும் இருந்து தெய்வத்திடம் மிகவும் ஒட்டி பழகி இருந்துவந்தார்.

தெய்வ பிள்ளைகள், சபையில் ஒரு சமயம் தெய்வத்தின் செய்யுள் ஒன்றின் பெருமையை பற்றி எடுத்துப்பேசி வருகையில், தெய்வம் அவர்கள் 'குழந்தை' என்று வரும் இடத்தில் ஒரு எதுகை மோனைக்காக 'குடந்தை' என்று குறித்திருப்பது மட்டும் சற்று இடருதல் தருவதாக ஒரு கருத்தை லேசாக இவர் தெரிவித்தார். இதை கவனித்த தெய்வமவர்கள், அவருக்காகவே *''பிண்ட உற்பத்தி முதல் அருத்தடைத்த வாசல் வரை''* என்ற தீட்சையை ஒருனுள் எடுத்து வைத்தார்கள். அன்று மத்தியம் மூன்று மணிக்கு சபா மண்டபத்தில் அந்த தீட்சையைப்பற்றி அற்புதமாக அவர்கள் எடுத்து விவரித்த அந்த காட்சியை கண்டு அதிசயிக்க, தேவலோகமே திரண்டு அங்கு வந்து கேட்டுக் கொண்டிருந்தது.

தெய்வம் அவர்கள், ஆதி அசல் புள்ளியில் இருந்து அந்த கருவானது, ஒவ்வொரு வினாடிகளிலும், மணித்துளிகளிலும் நிமிடங்களிலும் மற்றும் ஒரு னுள், ஒரு இரவு, பகல் வாரம் மற்றும் மாதமாக எந்த எந்த விதமாக வளர்ந்து வந்தது என்ற

அதிசய காட்சிகளை காட்டி, இறுதியில் அது முழுமையாக ஒரு குடத்தில் வைத்து பாதுகாக்கப்பட்டு, இறுதியில் அந்த பனிநீர்குடம் உடைந்து குழந்தை வெளிவரும் நிலையை எடுத்து உரைத்தபோது, அந்த தமிழ் இலக்கிய புலமை கொண்ட அந்த தெய்வ மாணுக்கருக்கு அப்போதுதான், பளீரென ஒரு உணர்வு இடிபோல் அவர் சிந்தையில் இறங்கியது. இன்று தெய்வமவர்கள் தமக்காகத்தான் இந்த தீட்சையை எடுத்து வைத்துள்ளார்கள் என்று ஒன்றுக அந்த கணனேரத்தில் உணர்ந்துகொண்டார். உடனே, மண்டியிட்டு கதறி அழுது, தெய்வத்திடம் விண்ணப்பித்தார். "தெய்வமே! குடத்தில் இருந்து குழந்தை வெளிவரும் நிலையை உணராமல், ஒரு காரணப் பெயராக தாங்கள் குடந்தை என்று குறித்ததை அறியாமல், என் சிறுமதியால் விமரிசினம் செய்து விட்டேன். என்னை மன்னித்தருள வேண்டும்'' என்று மன்னிப்பு கோரினர். "அதெல்லாம் ஒன்றுமில்லையடா" என்று சொல்லி தெய்வமவர்கள் சமாதானம் கூறி இளனகை பூத்தார்கள்.

ஒரு சமயம் ஆலயத்தில் மக்கள் நிறைந்து வழிந்திருந்த னேரம். வெளியூர் பிள்ளையொருவர் வந்து, தெய்வத்தை

தரிசித்து போது, ஒரு பாகுரத்தில் இருந்த ஒரு பாடலை எடுத்து தெய்வத்தை தோத்தரித்து, கடைசி வரியாக "ஆறுமுகம் ஆன பொருள் னீ அருள வேனும் ஆதி அருணாசலத்தில் அமர்ந்த பெருமானே....." என்று பாடி முடித்து விட்டு அமர்ந்தார்.

தெய்வம் அவர்கள் இளனகையுடன் சபையை பார்த்து ஒருபார்வையை சுழலவிட்டு -

"ஆறுமுகமானது எப்படி தெரியுமா?" என்று வினவினர்கள். சபையில் எல்லோரும் ஏதோ திருக்குறிப்பு இறங்குகிறது என்று தயாராகி தெய்வ வாக்கியத்தை கவனமுடன் கேட்க தயாராகினர்கள். காரியதரிசிகள், உபதேசம் ஆகாதவர்களை அந்த இடத்தில் இருந்து வெளியேற்றலாமா என்று யோசித்துக்கொண்டு இருந்த போது, தெய்வமவர்கள் அருளியது:

"ஒன்று திசையும், மற்றும் மேலும் கீழும் ஆன ஆறுபக்கமும் நின்றது தான் ஆறுமுகம். இந்த ஆறுமுகமான திருப்பை..... உங்களுக்க முன்பே. "சதுர்முகமாய் மேல்கீழ் உருகிய ஸ்தாபரம்" என்று வேதத்தில் முன்பே காட்டி உள்ளோம் என்று அவர்கள் அருள, சபையில் உள்ளோர்கள் இதனைக்கேட்டு வியந்து, அகமகிழ்ந்து " குருநாதா" என்று கூறி, சிரசில் தங்கள் கையை வைத்து தாழ்த்தி தெய்வத்திற்கு வணக்கத்தை தெரிவித்துக் கொண்டார்கள்.

ஒரு சமயம், தெய்வமவர்களின் திருச்செங்கோடு விஜயத்தின்போது, அவ்வூரின் பல பிரமுகர்கள் ஆண்டவர்களை தரிசிக்க வந்தார்கள். அவர்களுள், அவ்வூரின் பிரபல ஜோதிடர் ஒருவரை ஆண்டவர்களுக்கு அறிமுகம் செய்து வைத்தனர். அப்போது தெய்வமவர்கள் "உங்கள் ஜோதிடம் எல்லாம் கணக்குதானே!" என்று அவரைப்பார்த்து வினவினர்கள். அதற்கு "ஆம். கணக்குத்தான்" என்று அவரும் ஒப்புக்கொண்டார். அப்போது ஆண்டவர்கள், "எம்பிள்ளைகளுக்கும் ஜோதிடம் தெரியும். ஆனல் அது கணக்கல்ல. ஜோதி இடம். அதாவது, ஸ்வயமான ஜோதி இருக்கும் இடம். இது அவர்களுக்கு தெரியும்" என்று அருள, அனைவரும் வியந்து நின்றனர்.

மெய்வழி அங்கத்தினர் ஒருவர், தெய்வத்திடம் காஷாயம் வாங்கி அதை தலையில் கட்டி இருப்பதை குறித்து, " காஷாயம் கட்டியிருந்தால் பணங்காசு நிலைக்காது, சேராது. வயதானபிறகு வேணுமானல் இப்படி இரு" என்று அவரின் உறவினர்கள் அறிவுறுத்தினர்களாம். அந்த அங்கத்தினர் வந்து தெய்வத்தை தரிசிக்கும்போது, இதுபோன்று உறவினர்கள் கூறியதை தெரிவித்தார். அப்போது தெய்வமவர்கள், " அவர்கள் சொல்வதில் ஒரு விஷயம்

இருக்கிறது. அது என்னவென்றால் போலிச் சாமியார்களிடம் காஷாயம் வாங்குபவர்களிடம் முதலில் குடிபுகுந்துவிடுவாள். போலிச் சாமியார் பிச்சைக்காரனுக்கு ஒப்பானவன். தெய்விகத்திற்கும் அவனுக்கும் ஒரு சம்பந்தமும் கிடையாது. எம் தெய்விக ராஜ்ஜியமேவேறு. எம்மை பார்! தங்கம், முத்து, வைரம் போன்ற உயர்ந்த ஆபரணங்களையும் பட்டுப் பட்டாடையையும் அணிந்து, ஒரு ராஜரிஷியாக இருந்து உனக்கு காஷாயம் தருகிறோம். எம் பிள்ளைகளுக்கு எளுக்குளுள் செல்வம் செழிக்குமே தவிர, வறுமை அண்டவே அண்டாது. அசலுக்கும், நகலுக்கும் உள்ள வித்தியாசம் இது." என்று அருளி ஆசிர்வதித்து பிரசாதம் கொடுத்தார்கள்.

தெய்வத்திடம் மேல் தீட்சைகள் எல்லாம் பெற்ற ஒரு முத்தபிறவியர் தெய்வத்திடம் வந்து தம்மை செயலில் தானே இருக்கும்படி ஆக்கிவைக்க வேணும் என்று விண்ணப்-பித்தபோது, தெய்வம் அவர்கள் அவரைப்பார்த்து "னீ ஆக வேண்டும் என்றால் இதுனேரம் ஆகியிருக்கும். உங்களால் எதுவும் பிடித்துக்கொள்ள முடியவில்லை. தவம் செய்து பெரும் தவ முதலை எம் கையில் வைத்திருக்கிறோம். எம் சொல் ஒன்றையே னம்பி இருபோதும். உனக்கு னமே அளித்து விடுகிறோம். இதை எந்தனை விதமாக சொன்னாலும் னீங்கள்

கேட்க மாட்டோம் என்கிறீர்களே! வயதான காலத்தில் வந்து இப்படி கேட்டு னிற்கிறீர்கள். இளமை காலத்தில் வந்திருந்தாலும் பரவாயில்லை. னுத வலுவில் ஏதேனும் பிடித்து கொள்ளும். னீங்கள் இப்படி வந்த னிற்பது எப்படி இருக்கிறதென்றல், ஒரு தாய் சமையல் செய்ய மிளகாயை அம்மியில் வைத்து அரைப்பது பார்த்து, குழந்தையும் தானும் வந்து னின்று அதே வேலையை செய்யவேண்டும் என்று பிடிவாதம் பிடிப்பது போன்று உள்ளது. அதெல்லாம் குழந்தையால் முடியுமா? குழவி எடுக்கும்போதே குழவி தடுமாறி அதன் காலில் விழும், அரைத்தாலோ குழந்தையின் கைகள் அதை தாங்காமல் எரியும். கண்ணும் எரியும். குழைந்தையால் செய்யக் கூடிய காரியமா அது? அதுபோல் தான் இது. னும் உனக்கு அளிக்க காத்திருக்கிறோம். னீ பொறுமையுடன் காத்திரு, போதும்.

ஒரு சமயம், ஆலயத்தில் தெய்வப்பிள்ளைகள் எல்லோரும் குழுமி இருந்தனர். அப்போது ஒருவர் வந்து ஆண்டவர்களை தரிசனம் செய்தார். அப்போது அங்கிருந்த காரியதரிசிகளில் ஒருவர், "உங்கள் ஊர் எது?" என்று வினவினர். அவர் "ராஜபாளையம்" என்றார். தெய்வம் அவர்கள் அவரைப்பார்த்து "ராஜபாளையமா?"... அந்த னொடில

ராஜபாளையத்தில் னும் காலமெல்லாம் இருக்கிறோமே!''... என்றார்கள். சபையில் மகிழ்ச்சி அலை எழும்பியது. (ராஜபாளையம் என்பது சத்திய லோகத்தின் அரசர் பெருமானுகிய ஆண்டவர்கள் இருக்கும் இடம் என்பதை தெய்வம் அவர்கள் சுட்டிக்காட்டினர்கள்.)

தமிழ் எழுத்துக்களில் பலகாலமாய் விடுபட்ட எழுத்துக்களை பயன்படுத்தும் முறையை தம் மக்களுக்கு அறிவித்து மெய்வழித் தமிழிலேயே மெய்வழி னூல்கள் வெளிவர ஆரம்பித்தது. அப்போது, சில மூத்த பிள்ளைகள், தெய்வத்திடம் '' இந்த மாற்றத்தில் மெய்வழி னூல்கள் வெளிவந்நால், சபையில் சேராத மக்களுக்கு படிப்பதில் சிரமம் இருக்கும். அதனல் பழைய முறையிலும் சில னூல்கள் வெளியிடுவதற்கு அனுமதி வேனும்'' என்று விண்ணப்பித்தனர்.

அதற்கு தெய்வம் அவர்கள், ''சபையில் சேராதவர்களுக்கு னும் வேதம் எழுதவில்லை. அவர்கள் படிக்காமல் விட்டால், படிக்காமல் போகட்டும்''. என்று அறிவித்து விட்டார்கள்.

1936ல் மெய்வழி ஆஸ்ரமம் திருப்பத்தூரில் ஒரு மாணாக்கர் ஏதோ ஒரு தவறு செய்த போது அவரை திருத்த தெய்வமவர்கள் சற்று கோபமாக:

"ஏண்டா... எம்மை யாரென்று நினைத்தாய்? உன் உயிர் பிரியுந்தறுவாயில் சிவனுக வருவதும் நம்தான். எமனுக வருவதும் நம் தான்".

1937ல் திருப்பத்தூரில் னடந்த தீட்சா சபையில் தெய்வமவர்கள் அருளிய ஒரு வாக்கியம்:

"ஜோதிடம் பார்க்காதீர்கள். எம்மை அடைந்த பின்னர் உங்களை பிடித்த கிரகங்கள் எல்லாம் எம் கையில் இருக்கின்றன".

செய்யாறு வெங்கண்ண செட்டியார் தெய்வத்திடம் வந்து னின்று:

" அடியேனையும் சபையில் ஒரு அங்கத்தினனுகச் சேர்த்துக்கொள்ள உத்தரவாக வேண்டும்" என்று விண்ணப்பித்தார். அப்போது தெய்மவர்கள், "என்ன செட்டி மகனே! இன்னும் ஐந்து வருடங்கள் தானே பாக்கி இருக்கிறது. இவ்வளவு தாமதமாக வந்து சபையில் சேர விரும்புகிறுயே?"

என்று கேள்விக்குறியை எழுப்பி விட்டு, சபையில் சேர அனுமதி தந்நார்கள்.

அப்போது அவருக்கோ சபையில் குழுமி இருந்த பிள்ளைகளுக்கோ எதுவும் புரியவில்லை. சரியாக அடுத்த ஐந்நாவது ஆண்டில், திடமான சரீரத்துடன் இருந்த அவர் ஜீவப் பிரயாணம் ஆகிவிட்டார்.

ஒரு சமயம் பவுன் விலை என்ன? என்று சபையில் கேட்டார்கள். சபையில் அன்றைய சவரன் விலையை சொன்னர்கள். " பவுன் விலை ஏற ஏற, சாமான்கள் விலையும் எட்டிக்கு இரட்டிப்பாய் தானே ஆகும். இனி பவுன் விலையும் இறங்காது. சாமான்களின் விலையும் இறங்காது. ஏறிக்கொண்டே போகும்" என்று அருளினர்கள்.

(இது 1942ல் அருளப்பெற்றதில் இருந்து எடுக்கப் பெற்றது. மீண்டும் பல முறை அடுத்தடுத்து இதனை தெரிவித்திருக்கிறார்கள்.)

ஆதியே துணை

பெரும் திருச்செயலே, னிதிச் சொல் மணம் வீசும் தெய்வீக னிறைவிரி சோபன திருவுரு வரமருள் சாலே அண்டவர்கள் சரிதத்தின் னிகழ்வுகளே, வண்ண வண்ணமாக பல ஆண்டுகள் னடந்த பாரபெரிய ஜீவ வழிபாட்டு சரிதத்தை, தலே செழிக்க வந்த, வேத விரத னிதி உயிர்க்களிப்பு னன்னலம் தவழும் தவப்பாட்டை, கோடான கோடியான இந்த மாபெரும் னிகழ்வுகளே சொல்லியா முடித்து விட முடியும்?

மறக்கமுடியாத அதிசோபன தவ விளவு அதிகாரன காரிய ஜீவ வழிபாட்டு சம்பவங்கள்

தெய்வமவர்களின் மெய்ஞ்ஞான திருவரலாற்று காலக்கட்டங்களை மூன்று வகையாக நாம் பார்க்கிறோம்:

- 1901 முதல் 1923 வரை அவர்கள் பாட்டையரை சந்தித்ததையும், தவமியற்றி தேவ சன்னதங்களை பெற்றதையும் பிறகு அவர்களால் ஆசீர்பாத கங்கணம் பூணப்பெற்று மெய்வழி குலத்தை ஸ்தாபிக்க எண்ணம் கொண்டு, இந்த உலகிற்கு இறங்கி வந்த நிகழ்வுகளும் ஆகும்.

- அடுத்து 1923ல் இருந்து 1938வரை, இராஜகம்பீரம், திருப்பத்தூரில் மெய்வழி குல மக்களை சேர்த்ததும், ஆசிரமம் உண்டு பண்ணியதும், சபா மண்டபம் ஏற்படுத்தியதும் ஒரு காலகட்டம் ஆகும்.

- அடுத்து 1938ல் இருந்து 1942 வரை பழஞ்ஞாலை கால கட்டம் ஆகும். பழஞ்ஞாலைக்கு ஒரு பழச்சோலையை வாங்கியதும், தீர்க்கதரிசனப்படி அவர்களே நின்று அங்கு ஆலயம் கட்டி, மணி மேடை ஏறிய வரலாறும், தெய்வ வரலாற்றில் பொன்னேடுகளால் குறிக்கப்படவேண்டிய ஞான வசந்த காலம் ஆகும்.

- அதற்கு அடுத்து கடைசியாக 1942 முதல் 1976 வரை, ஒரு 34 ஆண்டுகள், உரல் மலையாகிய மெய்வழிச்சாலை என்னும் தேவ பூமியில் தெய்வமவர்கள் நடத்திய பல்வேறு ஞான அற்புதங்கள் மலை மலையாக இருக்கிறது.

❁ மொத்தத்தில் இந்த 75 ஆண்டு கால, பாரப் பெரிய மெய்ஞ்ஞான சரிதத்தைப்பற்றி தெய்வமவர்கள் ஆலயத்தில் தம் பிள்ளைகளுடன் அவ்வப்போது, அந்தந்த காலத்தில் னடந்த னிகழ்ச்சிகளை பற்றி விரிவாக திருவாய் மலருவார்கள். அது கேட்க கேட்க திகட்டாத பேரின்ப வரலாறுக இருக்கும்.

அந்த தேனமுதத்தில் இருந்து ஒரு சில துளிகளையும், அனந்நாதி தேவர்கள் னேரில் கூட இருந்து பார்த்த, தெய்வ வரலாற்றின் அற்புதங்களில் ஒரு சிலவற்றையும், இப்போது அடுத்து னம் பார்ப்போம்:-

பாட்டையருடன் தெய்வம் அவர்கள் அகில வலம் வந்த காலத்தில், ஒரு சமயம் ஒரு காட்டுப்பகுதிக்கு உள்ளே வந்து சேர்ந்திருந்தனர். அப்போது புலிகள் அங்கொன்றும் இங்கொன்றுமாக ஒன்று இரண்டு முதலில் அங்கு காணப்பட்டது. அடுத்த சில மணி னேரத்தில் னிறைய புலிகள் அங்கு வந்து சேர்ந்து விட்டன. அங்கிருந்த ஒரு பெரிய காட்டு எருமையை குறிவைத்து, அங்கிருந்த ஒரு குன்றின் மீது இரண்டு வேங்கைகள் னின்றிருந்தன. சிறிது னேரத்தில் பதுங்கி வாலை கீழே ஒரு தட்டு விட்டு அப்படியே மேலே இருந்து தாவி, ஒரே பாய்ச்சலாக பாய்ந்து, மேய்ந்திருந்த எருமையின் குரல் வளையத்தை கடித்து குதறி ரத்தத்தை

உறிஞ்சியது. அந்த காட்டெருமை சாய்ந்து விழுந்ததும், னலா பக்கமும் இருந்த எல்லா புலிகளும் அங்கு ஓடிவந்து, அந்த காட்டெருமையை அதனதற்கு தக்கபடி பதம் பார்த்தது.

அந்த புலி கூட்டத்தின் அருகே ஒரு ஓரமாக பாட்டையரும் னமது தெய்வமவர்களும் சென்று கொண்டிருந்தனர். னமது பிரானின் மனம் இதை கண்டு அஞ்சி படபடத்தது. அப்போது பாட்டையர், ''*தைரியமாக இரு. மாமிச வாடைக்குத்தான் புலிவரும். புல்வாடையை புலி உகக்காது. னம் இருவர் மேனியும் மாமிச வாடையை இழந்து பல காலம் ஆகிவிட்டது. எனவே னம்மை ஒன்றும் அவைகள் லட்சியம் செய்யாது. அஞ்ஞாதே!*''என்று கூறி அந்த இடத்தை தாண்டி தைரியமாக அழைத்து சென்றார்கள்.

திருப்பரங்குன்றில் ஒரு உயர்ந்த மலை. அது உச்சியில் உயர்ந்நும், சிறிது கீழேவந்ததும், உள்ளுக்குள் குழிந்நும் இருக்கிறது. அந்த குழியின் மேல் ஒரு குகை இருக்கிறது. அந்த குகையை பாட்டையர் சுட்டிக் காட்டியருளியபடி, அங்கு வந்து தேடி அந்த இடத்தை கண்டு தெய்வமவர்கள் தவமிருந்து வந்தார்கள். சர்வ அமலான்மை மெய்ஞ்ஞான செல்வங்களையும் அங்கு தெய்வம் அவர்கள் கைப்பற்றினார்கள். ''தெய்வபிரான் அங்கு அந்த குகைக்கு

செல்லும்வரை, அங்கு அது வரை எந்த ஒரு மனு சஞ்ஞார காலடியும் பட்டதோபுழங்கியதோ இல்லை. தெய்வம் அவர்கள் மட்டும் தான் அழியாத தவம் செய்யவே அந்த குகை ஒரு சுனையுடன் உற்பத்தியாகி அங்கு இருந்தது.'' என்று பிற்காலத்தில் ஒரு தீர்க்கதரிசனம் தெய்வத்திற்கு எடுத்து காட்டியது.

தெய்வம் செய்த தவத்திற்குபிறகு, இனி தவம் என்பதே இல்லை. இதுவே கடைத்தவம். இனி எக்கோடி காலத்திலும் எந்த காலத்திலும் தவம் இல்லவே இல்லை. என்று அந்த தீர்க்கதரிசனங்கள் மேலும் கூறுகிறது.

அந்த அபூர்வ குகையில் தெய்வம் அவர்கள் னெடுங்காலம் கடும்தவம் இயற்றினர்கள். தேவையான னேரத்தில் வெளியே வந்து, அந்த மலைக் காட்டில் கத்தாழை சோற்றை சீவி எடுத்து உண்டு, குகையில் இருந்த சுனையிலேயே னீர் அருந்தி தவமிருந்தார்கள். இதுவன்றி வேறு அன்னஆகாரம் எதுவும் இல்லாமல் தவமியற்றி பலதேவ சன்னதங்களை எல்லாம் தம் திருக்கரத்தில் பெற்று, அந்த திருப்பரங்குன்றின் மலையில் இருந்து இறங்கும் போது, அவர்கள் திருவ உருவமும் மாறியிருந்தது. முழந்நாள் வரை னீண்டு வளர்ந்த ஜடா முடி கோலத்துடன் இருந்தார்கள்.

இறங்கி வரும்போது ஒரே பசியும் களைப்புமாக கீழே வந்தார்களாம்.

அப்பொழுது ஒருவர் , தெய்வத்திற்கு னீராகாரம் பருக கொடுத்தாராம். அதில் உப்பு போட்டு கொடுத்ததில் அந்த உப்புக் காரம், தாங்காமல் தெய்வத்தின் கண்களிலிருந்து னீர் கொட்டியதாம். தல ஏற்றத்தில் அவர்கள் தேக மெல்லாம் அவ்வளவு மென்மையாகி, இளகி, பசுமையாகி குழந்தையின் மேனி போல ஆகி விட்டிருந்திருக்கிறது.

தெய்வமவர்கள் திருபாட்டையர் அவர்களுடன் அகில வலம் வரும் காலத்தில் ஒரு பேனுகத்தி ஒன்று மட்டும் கையில் வைத்திருந்தார்களாம். அந்த பேனு கத்தி, கழுகுமலை தாண்டி அரண்டை வரும்போது தொலைந்து விட்டதாம். பிறகு ஒரு புது கத்தி வாங்கினர்கள். அதைத் தான் கடைசி வரையில் கையில் வைத்து இருந்தார்கள். திருப்பரங்குன்ற தவகாலத்தில் கத்தாழை சோற்றை சீவி எடுக்க அந்த கத்தியைத்தான் பயன்படுத்தி பசியாறுவார்கள். இந்த தவத்தின்போது பசிக்கு இப்படி கத்தாழையை சீவிச் சீவியே அந்த கத்தியும் தேய்ந்து மிகவும் சின்னதாகி விட்டது. திருப்பத்தூர் வரை அது கையில் வைத்திருந்தார்கள். பிறகு அது சோனு அவர்களுக்கு கொடுத்துவிட்டார்களாம்.



திருப்பத்தூரில், முதலில் னிரந்நரமாக சொந்ந இடத்தில் ஒரு ஆசிரமம் அமைக்க திட்டமிட்டு, மாமரம், தென்னை மரம் அதிகமாயுள்ள ஒரு தோப்பை குறைந்ந விலைக்கு வாங்கினர்கள். அந்ந ஊரில் இருந்ந போக்கிரி ஒருவன் தோட்டத்தில் மாங்காய், தேங்காய்களை தொடர்ந்து கொள்ளை அடிக்கும் தொந்நரவினை தாங்க முடியாமல் ஒரு னிலச்சுவான்தார் அதை தெய்வத்திற்கு விற்று விட்டார்.

தெய்வம் அதை வாங்கியவுடன், தோப்பை சுற்றி வேலியிட்டார்கள். ஒரு னள் இரவு அவன் திருட வருவான் என்று தெரிந்து, ஒரு திட்டம் செய்து அவனை மடக்கி வாயில் துணி அடைத்து கை, கால் கட்டி ஒரு கட்டிலில் கட்டிப்போட னான்கு ஐந்து பேரை ஏற்பாடு செய்து, அதன்படி செய்தும் விட்டார்கள்.

உயிருக்கு சேதம் ஏற்படாவண்ணம், கள்ளர்கள் அச்சப்படும்படி நக்க ஊமை காய தண்டனையும், தேகத்திற்கு குடைச்சல்களும் அவனுக்கு தந்து முடித்து, அவனை காவல் னிலையத்திற்கு இழுத்துவந்து கொண்டிருந்த போது, அவன் எதிரில் ஆண்டவர்கள் வந்து னின்றார்கள். அப்போது அவன் தெய்வத்தைப் பார்த்து, கூச்சல் இட்டு, கதறி மன்றாடி "இனி உங்களுக்கு பக்கபலமாக இருப்பேன். இது சத்தியம். இந்ந பக்கமே இனி வரவே மாட்டேன், என்னை காப்பாற்றுங்கள்"

என்று கூறி அலறினான்.

சரி, என்று அவனை மன்னித்து ஒழுங்காக இருக்கும்படி கூறியது மட்டுமல்லாமல் புதுவேட்டி, சட்டையும், கொடுத்தார்கள். அவன் அது முதல் கொட்டம் அடங்கி திருந்திவிட்டான். ஒரு கொட்டகை போட்டு அவ்வப்போது அங்கு சபையும் னடக்கலாயிற்று. இப்படி யெல்லாம் இந்த உலக சமுதாயத்துடன் போராடி, பல பராக்கிரமமான செயல்களை எல்லாம் செய்து சபையை வளர்த்து வரலானார்கள்.

இந்த மெய்யை உலகத்தில் ஸ்தாபிக்க எவ்வளவோ பாடுபட வேண்டியிருந்தாலும், அவர்கள் உயிருக்கே ஆபத்து வரும் னிகழ்வுகள் பல னேரங்களில் வந்தன. ராஜகெம்பிரத்தில் தெய்வம் இருக்கும்போது இரண்டு மூன்றுபேர் ஞானம் பேசுவதற்கும், பலருக்கு போதனை தருவதற்கும் பக்கத்தில் உள்ள ஒரு குன்றுக்கு மேல் இருந்த ஒரு சிறிய மலைக்கு தெய்வத்தை எழுந்தருளும்படி வேண்டவே, இவர்களும் எதார்த்தமாக இவர்களை னம்பி அங்கு சென்றுவிட்டார்கள். அந்த மலைமேல் சிறிய மண்டபம் ஒன்று இருந்தது. அதில் அமர்ந்து அவர்கள் பேச ஆரம்பித்ததும், அங்கு உள்ளவர்கள் குறுக்காகவும், எகு பிசகாகவும் தடித்த வார்த்தைகளையும், னக்கலாகவும் பேச ஆரம்பித்தார்கள். இதை

கண்டு தெய்வம் அவர்கள் உஷாராஞர்கள். ஓரக்கண்ணால் ஒரு பக்கம் பார்வையினல் நோட்டம் இட்டபோது, யாரோ ஒரிருவர் அறிவாளுடன் படியில் ஏறுவதும் இறங்குவதுமாக இருப்பது அவர்களுக்கு தென்பட்டது. சரி என்று ஒரு திட்டமிட்டு, பேச்சு வாக்கிலேயே எழுந்து ஒரு ஓரம் சிறுனீர் கழிப்பது போல் னடந்து வேகமாக சென்று, அந்த மண்டபத்தின் பின்புறத்தில் இருந்து, அப்படியே குதித்து ஒரு சரிவு பார்த்து உருண்டு, கீழே வந்துவிட்டார்கள் " தப்பி விட்டான்யா" என்று அந்த கூட்டம் கத்திக்கொண்டே கீழே இறங்கி ஓடிவருவதற்குள், தெய்மவர்கள் மாயமாய் னடந்து மறைந்துவிட்டார்கள். கல் உரசியதும் - முள்குத்தியதுமாக அப்போது அவர்கள் திருமேனி ஆகி விட்டது. இதற்கு பிறகுதான், ஆண்டவர்கள் ஒரு ஆயுதத்தை தங்கள் திருக்கரத்தில் மிக முக்கியமாக எப்போதும் வைத்துக் கொண்டு இருக்க ஆரம்பித்தார்கள்.

மத்தியபிரதேசம், உத்திரபிரதேசம் னடுவில் னேமி சாரண்யம் என்ற பெரிய வனப்பகுதி ஒன்று உள்ளது. கி.பி. 1929ல் பாட்டையர் உத்திரவுபடி, பாட்டையார் தவமிருந்த அந்த வனத்தின் ஒரு குகையில் தவம் இயற்ற ஆண்டவர்கள்

தம் பத்தினியாருடன் சென்றார்கள். இந்த இடம் பல ஆண்டுகளுக்கு முன்பிருந்தே பல முனிவர்கள் வாழையடி வாழையாக தவமிருந்த இடமாகும்.

கூர்மாசிரமம் என்ற அந்த குகையை கண்டு அடைந்தபோது, அங்கு ஒரு புலி கைப்பற்றி வசித்துக் கொண்டிருந்தது. தெய்வம் அவர்கள் அதனை விரட்ட குகையின் முன்னுள் னெருப்பு உண்டாக்கினர்கள். இரண்டு னுள் தொடர்ந்து னெருப்பு மூட்டி எரியும்படி செய்தார்கள். புலி குகையை விட்டு வேறுபக்கம் ஓடிவிட்டது. மறுபடியும் அது வராவண்ணம், சில திட்டங்கள் செய்து, அது இந்த பக்கம் வராமல் மிரண்டு ஓடியே போய் விடும்படி, தக்க ஏற்பாடுகளை செய்து விட்டு, அதில் ஓராண்டு தவம் இருந்தார்கள்.

பிறகு, இராஜகெம்பிரத்திற்கு திரும்பி வரும் போது, ஒரு புலித்தோலினை அந்த வனத்தில் இருந்து எடுத்து வந்தார்கள்.

பழுஞ்ஞாலையில் முதல் காலக்கட்டத்தில் அருளமுத தீட்சையை எடுத்துவைத்து னிகழ்ந்து வரும்போது, அதனைபெற உத்தரவு பெற்றவர்கள் மூன்று னுள் விரதம் இருக்கவேண்டும். பிறகு " புல்லனுக்கு புல்லாக போவதும், வல்லவனுக்கு வாளாக இருப்பதும் இந்த தீட்சை" என்று கூறிக்கொண்டு தொங்கவிடப்பட்டிருக்கும் இரு வாள்களுக்கு

இடையில் குனிந்து சென்று, தெய்வ சன்னிதானம் முன் னின்று வணங்கி " சத்தியப்படி னடப்பேன்" என்று மண்டியிட்டு உறுதி மொழி கூற வேண்டும். அதன் பிறகுதான் அந்த தீட்சையை தெய்வமவர்கள் அருளுவார்கள்.

" சரி" என்பதற்கு சரிந்து போகிறது என்ற ஒரு பொருளும் வருகிறது. ஒரு சமயம் பழஞ்ஞாலையில் தெய்வமவர்களிடம், பெரிய ஒரு வேத விற்பன்னர், படித்த பண்டிதர் என்று ஒருவன் சொல்லிக்கொண்டு வந்தான். சர்வ வேதத்தையும் படித்தவன் என்றும் வேதத்தில் இப்படி இருக்கிறது என்றும் அப்படி இருக்கிறது என்றும் தெய்வத்தின் வேத மொழியை செவிகொடுத்து கேட்காமல், ஏதோ சொல்லி வந்தான். தெய்வத்தின் மனத்திற்கு இவனே ஏற்றுக் கொள்ள சம்மதமில்லை. அதனல் அவனுக்கு, தங்கள் அமுதவுரையை எதுவும் வழங்காமல், கடைசியில் அவன் ஏதோ சொன்னதற்கு " அதுசரி" என்றார்கள். அடுத்து ஏதோ சொன்னன். அதற்கு " இது அதை விட சரி" என்றார்கள். அடுத்து ஏதோ மாற்றமாக சொன்னன். அதற்கு " இது அதைவிட ரொம்ப ரொம்ப சரி...." என்று ஒவ்வொரு முறை "சரி" சொல்லும்போதும் தங்கள் திருக்கரத்தால் சரிந்து போகிறமாதிரி மேலே இருந்து திருக்கையை இறக்கி சைகை காட்டிக் கொண்டே

இருந்நார்கள். தெய்வம் அவர்கள், "அவன் சரிந்து போய்க்கொண்டிருக்கிறான்" என்பதை சுட்டிகாட்டத்தான் இந்த பாவனை செய்கிறார்கள்" என்று சபையில் இருந்த எல்லோருக்கும் புரிந்து சிரித்தார்கள். ஆனால், அவனுக்கு ஒன்றும் அது படவில்லை. " னும் சொன்னதற்கு எல்லாம் தெய்வம் ரொம்ப சரி என்று சொல்லிவிட்டார்கள்" என்று னினைத்துக்கொண்டு, ரொம்ப திருப்தியோடு எழுந்து சென்றுவிட்டான்.

பழஞ்ஞாலையில் ஒரு சமயம், சாதிக்கொடி அனந்நருக்கு வேலை செய்யும்போது வெடி வெடித்து உடம்பு முகம-மெல்லாம் அடி பட்டு தாங்ங முடியாத எரிச்சலாகிவிட்டது. தெய்வம் தேன்கொண்டு உரிய மருந்தை கலந்து உடம்பு முழுதும் பூச, அந்த எரிச்சல் உடனே மாறி காயமும் ஒரு வாரத்தில் ஆறிவிட்டது.

ஒரு சமயம் சாலையில் மெய்வழி கலிசொல் அனந்நர் விடுதியில் தீப்பிடித்துக்கொண்டது. எல்லோரும் என்ன செய்வது என்று விழித்த னேரத்தில், தெய்வம் வந்து, ஒரு னன்கு பேரை அழைத்து அவர்களின் ஆடையை கழட்ட சொல்லி ஒவ்வொருவர் மேலேயும் ஒரு குடம் தண்ணீர் ஊற்றி

னனைத்து, ஆளுக்கு ஒருபக்கம் தண்ணீரை எடுத்து சென்று தீயை அணைக்க சொன்னர்கள். தெய்வ உத்தரவை ஏற்று இவர்களும் தைரியமாக எரிந்து கொண்டிருந்த விடுதியின் அருகில் சென்று தண்ணீரை கொட்டி தீயை அணைக்க ஆரம்பித்தார்கள். தீ இவர்களை சூழ்ந்தாலும், இவர்கள் னனைந்து இருந்ததனல் வெப்பம் இவர்களை தாக்காததால் வேகமாக காரியத்தை விடாது செய்து முடித்தார்கள்.

பிரளய காலாக்கினியிலிருந்து, னம்மை காப்பாற்ற சந்நிரகலா சக்தியையே னம்மீது வருஷிக்க இருக்கும் னமது தெய்வத்தின் அதிசய திட்டத்தின் ஒரு துளி இது என்று னம் சூசகமாக உணர்கிறோம்.

தெய்வத்திற்கு உறுதுணையாக ஒவ்வொரு செயல் செய்வதற்கும் ஒவ்வொரு காலத்தில் ஒவ்வொருவர் வந்து னிற்பார்கள். பழஞ்சூலையில் ஆண்டவர்கள் சபா மண்டபம் கட்ட உதவியர்களில் ஆறுமுக ஆச்சாரி என்று ஒரு பிறவியரும் இருந்தார்.

இவர் கல்லில் புல்லாங்குழல் செய்து தெய்வத்திற்கு சமர்ப்பித்தார். பழஞ்சூலை சந்நிர வட்ட சிலாசனம் செதுக்கியது இவர்தான். இவர் கல்லில் ஒரு னேர்கோடு

போட்டு அடித்தால் அப்படியே வேருக்கு நேர் சரியாக நேராக இருக்குமாம்.

இதே போன்று பழஞ்ஞாலையில் கட்டிடம் கட்டும் போது எல்லாருக்கும் ஒரு பொதுச் சமையல்தான். அந்த சமையலே மிகமிக சுவையாக சமைக்கும் பணி செய்தவர் பெரியப் பிள்ளை என்ற ஒரு தெய்வப்பிள்ளை. அவ்வளவு சுவையாக சமைப்பாராம். இதையெல்லாம் பொன்னரங்கு கொம்மியில் னும் காணலாம்.

குறிப்பாக கட்டி முடிக்க மூன்று வருடம் ஆக வேண்டிய பெரிய பிரமாண்ட கல்கட்டிடமான பழஞ்ஞாலை சபா மண்டபத்தை மட்டும், ஏழே மாதத்திற்குள், தெய்வமவர்கள் கட்டி முடித்தார்கள். எந்த கட்டிட வல்லுனர்களாளும், பெரிய ஒப்பந்தக்காரர்களாளும் கூட சாதிக்க முடியாத செயல் இது. பொன்னரங்கு தேவாலயத்தை கட்டுவதற்கு அவர்கள் எடுத்த எடுப்பும், பாடும் இவ்வளவு அவ்வளவு என்று சொல்ல முடியாது. கட்டிடம் கட்ட ஆரம்பித்தது முதல் ரொம்ப தீவிரமாக பணி ஆற்றினர்கள். ஒரு அரைக்கால் டிரவுசரும் காக்கி சட்டையும், சிரசில் கருப்புதுணியால் பர்மாகட்டும் அணிந்திருப்பார்கள். அப்போது அவர்களை பார்த்தால் யாருக்கும் தெய்வம் என்றே

தெரியாது. ஒரு வேலையாள் போலவே நின்று இருப்பார்கள். எப்போதாவது களைத்து வந்து ஒரு சின்ன ஈசி சேரில் திருமாளிகையில் சாய்வார்கள். அதுவும் சிறிது நேரம்தான். உடனே எழுந்து கை நீட்டுவார்கள். அம்மா தயாராக வைத்திருந்த கஞ்சியை கரைத்து ஒரு டம்பளரில் எடுத்து வைத்திருந்ததை, உடனே எடுத்து கொடுப்பார்கள். உடனே அதை 'மடக் மடக்' என்று குடித்து விட்டு மறுபடியும் கட்டிடத்தருகே வந்து நின்று விடுவார்கள். அன்று முழுதும் அந்த கஞ்சிதான். அது தான் ஆகாரம். நள் முழுதும் வேலை மேற்பார்வைக்கே சரியாக இருக்கும். சாலை எங்கும் கல் உடைக்கும் சத்தமும், தச்சர்களின் மரவேலை ஓசையும் நள் முழுதும்கேட்டுக்கொண்டே இருக்கும். மாலை இருட்டும் வரை கூட கட்டிட வேலை நடக்கும். ஓய்வு ஒழிச்சல் இல்லாமல் நடக்கும். பழஞ்ஞாலை மண்டபத்தை கட்டி முடித்து பொன்னரங்க மேடை ஏறியவரையிலும் இப்படித்தான். நினைத்து கூட பார்க்க முடியாத வேகத்தில் கட்டினர்கள். இன்று மாலை கல் ஆகிவிட்டிருக்கும். ஆனல் மறுநள் காலை கல் தயாராக வந்து சேர்ந்திருக்கும். மற்ற பொருள்களும், தளவாடங்களும் அப்படித்தான். உடனுக்குடன் எல்லாம் அடுத்தடுத்து தயாராக வந்து சேர்ந்து இருக்கும். சென்னையில் இருந்து பெரிய பெரிய இரும்பு கர்டர்கள் வந்து இறங்கின.

பொள்ளாச்சியில் இருந்து தேக்கு மரமாக வந்து இறங்கியது. இப்படி, இது எப்படி வந்தது என்று கூட யாருக்கும் தெரியாது. தெய்வம் அருகே பிள்ளைகள் போகக்கூட அந்த நாட்களில் அஞ்சுவார்கள். கிட்டேனெருங்கி ஏதேனும் கேட்டாலும் சரியாக விடைபகரும்ல் கோபிப்பார்கள். அதுசமயத்தில் யாரேனும் சரியாக அறிமுகம் இல்லாத ஆட்கள் வந்தால் "விஷியத்தை சொல்லிவிட்டுப் போங்க... ஆண்டவர்கள் வந்தால் சொல்கிறேன்..." என்று அனுப்பி விடுவார்கள். அந்த மாதிரி யாரும் அறிய முடியாத தோற்றத்தில் இருந்துக் கொண்டு எப்போதும் சிந்தனை வசப்பட்டிருப்பார்கள். லிண்டல் கல்லில் "ஆலயம் மாற அரசு மாறும்" என்று தீர்க்கதரிசனத்தை செதுக்கி சுவரில் பதித்தபோது கூட பிள்ளைகள் , இது எதற்கு என்று கேட்க தைரியம் இல்லாமல் தெய்வத்துடன் உடன் இருந்து செயலாற்றி வந்தனர். இந்த காலகட்டத்தில்தான் பதிமூன்று வக்கீல்களுடன், அப்போது தான் முதன்முதலாக தெய்வம் அவர்களை வந்து கயிலை அனந்தர் தரிசித்தார்.

கட்டிடம் முடியும் தருவாய் வந்துவிட்டது. பிள்ளைகள் வேறு வழியில்லாமல் ஒன்று கூடி எப்படியோ தெய்வத்திடம் சென்று குழைந்து " தெய்வமே! பொன்னரங்க மேடை திறப்பு விழாவிற்கு காப்புச் செய்யுள் ஏதாவது பாடி அருள வேணும்"

என்று கேட்டார்கள். தெய்வம் அதற்கு " எல்லாம் அப்புறம் பார்த்துக்கலாம்" என்று மட்டும் பதில் அளித்துவிட்டு வேகமாய் போய்விட்டார்கள். அதன்பிறகு எதுவும் அவர்களிடம் கேட்கமுடியவில்லை.

அடுத்து, திறப்பு விழா தினமும் வந்துவிட்டது. தெய்வம் சர்வ பூஷண அலங்காரத்துடன் வந்து மேடையேறப் போகிறார்கள்.... இது வரை எதுவும் எந்த செய்யுளும் இந்த சுப னுக்காக பாடித்தரப்பட வில்லை.... "பாடி மகிழ இல்லாமல் இப்படி ஆகி விட்டதே..." என்று எல்லோரும் மனம் கலங்கி விழாவில் னின்று இருந்தனர்.

தெய்வம், விழா மேடைக்கு கம்பிரமாக ஆடை அலங்காரத்துடன் வந்து முதல்படி ஏறினர்கள். அப்போது பிள்ளைகளை பார்த்து தெய்வம் அவர்கள் திடீரென்று, *"வேலையெழில் சூழலகில் வியா னின்ற..."* என்று ஆரம்பித்து, ஒவ்வொரு படிக்கும் ஒவ்வொரு வரியாக பாட ஆரம்பித்தார்கள், அடுத்தடுத்தவரிகளாக.... *வல்லிருளை மாய்க்க வென்று முன்னேர்னளில்... காலையிளம் சூரியனும் முழுனிலாவுங் கலந்து முடிவு கட்டி விட்ட காரணத்தால்... மாலையெனும் சாதிகுல இருட்பரப்பை... மாய்த்து ஒரு பெருங்குலமாய் உதயம் செய்யச்... சாலையென்று வந்ததிந்தப் பொன்னரங்கச்... சபையிலுள்ளோ ரென்னுனும்*

னிடுவாழ்க..." என்று தெய்வம் அவர்கள் ராகமுடன் பாடப்பாட, பின்னல் பிள்ளைகளும் உரக்க கூடவே பாடி அதி சந்தோஷமாக னின்றனர்.

கடைசியில் "னிடுவாழ்க" என்று கூறி பாடலை முடித்து ஆசனத்தில் தெய்வமவர்கள் அமர்ந்நார்கள். பிள்ளைகள் எல்லோரும் ஒரே மகிழ்ச்சி ஆரவாரம் செய்தனர். இந்த னிகழ்ச்சி என்றும் னினைத்துப்பார்ப்பதற்கு மிகவும் மகிழ்ச்சி பூப்பையும், புளாங்கிதத்தையும் அடையச்செய்வதாக அன்று அமைந்நது.

1942ல், தெய்வம் அவர்கள் அரசினை பகைக்கக்கூடாது என்றே அரசுடன் சமாதானம் செய்துகொண்டு மதுரை பழஞ்ஞாலையை விட்டு விட்டு வெளியே வந்நார்கள். தம்மையே னம்பி வந்நவிட்ட அவ்வளவு குடும்பங்களையும் அழைத்துக்கொண்டு, எங்கே செல்வது என்று கூட தெரியாமல் வேந்நன் பட்டியில் தங்கியிருந்த போது, அவர்களுக்கு பெரிய ஆபத்து ஒன்று வந்நது.

ஆண்டவர்கள், அனுமதி பெறுத சக்திவாய்ந்த துப்பாக்கி ஒன்றை வைத்திருக்கிறார்கள் என்று காவல்துறைக்கு ஒருவரால் தகவல் ஒன்று தரப்பெற்றது.

அந்த தகவலை வைத்து, தெய்வத்தை தேடி வேந்நன்பட்டிக்கே ஒரு பெரிய போலிஸ்வேன், தெய்வம்

தங்கி இருந்த மாளிகையை பரிசோதனை செய்ய வந்தது. தெய்வம் அவர்களின் பெட்டி, படுக்கை மற்றும் தங்கியிருந்த எல்லா அறைகளையும், அந்த இல்லம் முழுதும் பரிசோதனை செய்தனர். பரிசோதனைக்கு பிறகு அது போன்று எதுவும் இல்லை என்று தெரிவித்துவிட்டு, பொய்யான தகவல் தங்களுக்கு வந்துவிட்டது என்று தெரிவித்துவிட்டு, "வருந்துகிறோம்" என்று கூறிவிட்டு சென்று விட்டனர். இந்த நிகழ்ச்சியால் தெய்வம் அவர்களுக்கு ஏற்பட்ட மனவேதனையை எப்படி விவரிக்கமுடியும்! ஆனால் எந்த கவலையுமின்றி எல்லாவற்றையும் சந்தித்து, வெற்றியடைந்து இந்த மெய்ஞ்ஞானத்தை உலகம் வியக்க செழித்தோங்க செய்தார்கள்.

..... "அக்கினி உன் வலக்கையிலப்பா....." என்று பாட்டையர் தெய்வத்தை பார்த்து கூறுவதாக ஒரு தீர்க்கதரிசனம் நம் பார்த்திருக்கிறோம். அதுபற்றி சில முக்கியமான சம்பவங்களை ஆண்டவர்கள் ஆலயத்தில் திருவாய் மலர்ந்தருளுவார்கள். அகிலத்திரட்டு அம்மானையில்

- ... *கரண வைதந்தா*
என்மகனே யெனனீ
வாரணமே னீ வணங்கி
மகனேகை சோராதே

னீ கை தவித்தால்
எனக்து மிக தாங்ஙரிது
தானீதன் ஆன
சர்வபரா என்மகனே
ஒருவருமே தாங்ஙரிது

உன்கை தவித்தாக்கால்..... என்று வருகிறது.

ஆண்டவர்கள் ஒரு மெய்க்குருபிரான் என்பதை, பல்வேறு குடும்பங்ஙள் அறிந்து, இராஜகெம்பீரம், திருப்பத்தூர் மற்றும் செட்டிஙுட்டில் ஙிறையபேர் தெய்வத்தின் பிள்ளைகள் ஆகினர். அதில் ஙுட்டுக்கோட்டை செட்டியார் குடும்பங்ஙள் பல முக்கியமானவை. அதில் பல செல்வ குடும்பங்ஙள் தெய்வமவர்களை தங்ஙள் குடும்பத்து ராஜகுருவாக அங்ஙிகரித்து, அவர்களையே தங்ஙள் குடும்பத்தின் பல ஙிகழ்சிகளுக்கு தலைமை தாங்ஙு வேண்டி அழைத்து செல்லுவார்கள். அது போது சில ஙிகழ்வுகளில், தெய்வத்திற்கு ஏதோ ஒரு அடையாளம் காட்டுவது போல் அமைந்ததாம்.

அதனல், இந்த ஙிலை என்ன என்று உணர, தெய்வம் அவர்கள் இதற்கு ஒரு தனித்த தவமே இயற்றினர்களாம். அந்த தவம் முடிந்த பிறகு அவர்களுக்கு தங்ஙள் இடது கையில் உலக மக்களை ஆசீர்வதிக்க தனித்த ஒருவரம் கைவரவாயிற்ரும். அதிலிருந்து தம் மக்களையும் தங்ஙள்

அன்புக்கு உரித்தாக வரும் உலக மக்களையும் ஆசீர்வதிக்க தங்கள் இடது கரத்தை தூக்கியே ஆசீர்வதிப்பது வழக்கமாக தெய்வம் அவர்கள் கொண்டிருந்தார்கள்.

ஆண்டவர்களுக்கு, பாட்டையர்அவர்கள் திங்களூர் னத்தத்தேரடியில் ஒரு னள் இரவு முழுக்க உபதேசம் அருளினர்கள். விடியற்காலை அவர்கள் தெய்வத்தை னேக்கி "ஊரில் என்ன சப்தம் கேட்கிறது?" என்றூர்களாம். அப்போது தெய்வமவர்கள், "இன்று பௌர்ணமி. ஊரில் தேர்திருவிழா." என்றூர்களாம். அன்று ஆண்டவர்கள் உபதேசம் பெற்ற இரவு சதுர்தசி திதியாகும். இந்த னினைவு பசுமையாக இருப்பதாக கூறி பௌர்ணமிக்கு முந்திய னளில் பிறவானுட் பிறப்பு திருவிழா எடுத்து வைக்க தெய்வம் அவர்கள் முடிவு செய்தார்கள். 16.3.65ல் பங்குனி அன்று முதன் முதலாக பிறவானுள் பிறப்பு திருவிழா னடத்த தெய்வம் அவர்கள் உத்தரவு தந்நார்கள். இந்த னள் சதுர்தசி திதி னளாகும். அதிலிருந்து தொடர்ந்து இந்த விழா அதேனளில் தொடர்ந்து னிகழ்ந்து வருகிறது.

ஒரு சமயம் 1965ல் சேலம் வழியாக விஜயம் செய்யும் போது, கடப்பா மாவட்டம் போத்தலூரில் உள்ள ஸ்ரீ

வீரபிரம்மங்காரு என்னும் மெய்ஞ்ஞான மகத்து வாழ்ந்த இடத்திற்கு தெய்வம் அவர்கள் செல்ல திருவுளம் கொண்டார்கள். ஏனெனில், அந்த திரிகாலம் கண்ட தீர்க்கத்தரிசி " காலஞ்ஞானம்" என்ற ஒரு அற்புத னூலில், னமது தெய்வத்தை பற்றி தீர்க்கதரிசனமாக அப்படியே தெய்வத்தின் பெருமையை விவரித்து எழுதியுள்ளார்கள். தெய்வத்திற்கு, வீரபோக வசந்தராயர் என்ற திருனமமும் இட்டு, தெய்வத்தின் பெருமையை எடுத்துக்கூறி "அடிபோரிகை" என்று அவர் முழங்கி உள்ள தீர்க்கதரிசனங்கள், இன்றும் னமது மெய்வழி ஆலயத்தில் எடுத்து கூறி, " அடிபோரிகை" என்ற மெய்வழி மக்கள் முழங்கி தோத்தரிக்கிறார்கள்.

அந்த வீரபிரம்மங்காரு மடம் சென்ற உடன் தெய்வமவர்கள், அங்கிருக்கும் காலக்ஞான ஏடுகளை தாம் பார்க்க வேண்டும் என்ற விருப்பம் கொண்டவரானார்கள். இது மிகவும் கடினமான ஒன்று. ஏனெனில் அந்த காலக்ஞான ஏடு பிரம்மங்காரு சமாதி ஸ்தல அறையில் பத்திரமாக வைக்கப்பெற்றிருக்கிறது. குருபூஜை அன்று மட்டும், பச்சிளம் பாலகன் ஒருவனை உள்ளே அனுப்பி, அந்த ஏட்டுக்கு பூஜை செய்வது வழக்கம்.

ஆனல், ஆண்டவர்கள் திருவுள்ளம் இப்படி எண்ணிவிட்டதால், மெய்வழி பிள்ளைகள், காலக்ஞான கிரந்நத்தில் உள்ள வீரபோக வசந்நராயர் என்ற னுமத்திற்கு உரிய அவதார புருஷரே இங்கு வந்துள்ள பேருண்மையை மடத்து தலைவருக்கு உரிய முறையில் தெரிவிக்கவே, அவர்கள் தெய்வத்திற்கு சகல மரியாதையும் தந்நு மடத்திற்குள் அழைத்து சென்நார்கள்.

தெய்வமவர்கள், சமாதி ஸ்தலத்திற்கு உள்ளே சென்று அந்ந காலக்ஞான ஏட்டு பிரதிகளை பார்த்தபோது, அந்நப்பெட்டியில் உள்ளதை அப்படியே தங்கள் திருக்கரத்தால் வாரி எடுத்து மார்போடு அணைத்துக்கொண்டு, சற்றுனேரம் தவத்தில் ஆழ்ந்நார்கள்.

தற்போது னமது ஆலய முன்முகப்பு, தவமாளிகை முன், மற்றும் வணக்க ஸ்தல பகுதியில் உள்ள புளியமரங்கள் அங்கிருந்நு எடுத்து வந்ந புளிய மர விதையை கொண்டு வளர்க்கப்பட்ட மரமாகும்.

1945ம் ஆண்டு ஒரு மஞ்ஞள் பத்திரிக்கை ஒன்று சென்னையில் இருந்நு வெளி வந்நுக் கொண்டிருந்நது. அந்ந பத்திரிக்கை, தமிழகம் முழுதும் உள்ள முக்கிய பிரமுகர்களின் அந்நரங்க வாழ்க்கையை அவதூருக விமரிசனம் செய்யப்

போவதாக அவ்வப்போது மிரட்டி பணம் பெறுவது வழக்கமாக இருந்தது. அந்த சமயம், ஒரு பெரும் செல்வந்தரும் ராஜாவுமான ஒருவரை பற்றியும், அந்த காலத்து திரைபட சூப்பர் ஸ்டார்களான இருவரை பற்றியும், உருட்டல் மிரட்டல் செய்து அடுத்த இதழில் உங்கள் மானத்தை வாங்கி விடுவேன் என்று எழுதியிருந்தது. இதன் மத்தியில் சாலை ஆண்டவர்கள் பற்றிய மர்மங்களையும் வெளியிடப் போவதாக அந்த பத்திரிக்கையில் அறிவிப்பு கூடவே வந்தது. அது பற்றி சாலையில் யாரும் கவலைப்படவில்லை. எது வேண்டு மானாலும் எழுதி கொள்ளட்டும் என்று இருந்து விட்டார்கள்.

ஆனால் சென்னையில் இருந்த மிகப்பெரிய பணக்கார ராசா அவமானம் தாங்காமல் அந்த பத்திரிக்கை ஆசிரியரை தாக்க முடிவு செய்து, ஆள் வைத்திருந்திருப்பார் போலிருக்கிறது. அதே சமயம், அந்த திரைபட செல்வாக்குள்ள நடிகர்கள் இருவரும் தங்களைப்பற்றி எழுத இருக்கும் அந்த பத்திரிக்கை ஆசிரியருக்கு நல்ல பாடம் கற்பிக்க வேண்டும் என்று ஒரு திட்டமும் திட்டி இருக்க கூடும் போலிருக்கிறது. எப்படியோ எல்லாரை பற்றியும் அதிரடி செய்தி வரப்போகிறது என்று அந்த பத்திரிக்கை அறிவித்திருந்த இரண்டு தினங்களில் - னடு ரோட்டில் அதன் ஆசிரியர் ரிக்ஷாவில் செல்லும் போது

கத்தியால் குத்தப்பட்டு கொலை செய்யப்பெற்றார். இந்த செயலை மாபெரும் திரைப்பட னடிகர்களான அந்த இருவர் தான் செய்தார்கள் என்று காவல்துறை அதிகார பூர்வமாக முடிவுசெய்து அவர்களை கைது செய்தது.

இதனிடையில், ஆண்டவர்களை பற்றி மோசமாக எழுதப் போவதாக பத்திரிக்கையில் செய்தி வந்ததும், சென்னையில் இருந்த ஒரு மெய்வழி பிறவியருக்கு கோபம் கோபமாக வந்தது. உடனே ஒரு பேனவும் ஒரு காகிதமும் எடுத்து - " எங்கள் ஆண்டவரைப் பற்றி அவதூராக எழுதப்போகிறேன் என்று சொல்லுகிறாயா... உன் தலை தப்புமா?" என்று ஒரு கேள்வி கேட்டு, அந்த பத்திரிக்கையை திட்டி எழுதி, அந்த பத்திரிக்கை ஆசியருக்கு கடிதம் ஒன்றை எழுதிவிட்டிருக்கிறார். அதன் னகலையும் சாலைக்கு, ஆண்டவர்களுக்கு அனுப்பி விட்டார். இவர் இப்படி செய்த சில தினத்தில் அந்த கொலை னிகழ்ச்சியும் னடந்துவிட்டது. இதுபோன்று, இவர் யாரும் கேட்காமல் " தடாலடியாக"கடிதம் எழுதிவிட்டதைப் பற்றி, தெய்வமவர்களுக்கு காரியதரிசிகள் தெரிவித்தார்கள். தெய்வம் அவர்கள் உடனே உஷாரானர்கள். உடனே அந்த சென்னை பிறவியரை வரச் சொல்லி அவரை னன்றுகதிட்டி, காஷாயத்தையும், தலைப்பாகையையும் பறித்துக் கொண்டு " இனி னீ இந்த மெய்வழி சபையில் அங்கத்தினர் இல்லை என்று

அறிவித்துவிடு. பிறகு இந்த னிகழ்வு பற்றிய வழக்கு எல்லாம் முடிந்த பிறகு வந்தால் போதும்.. அது வரை இந்த பக்கம் வரவே வராதே." என்று எச்சரித்து அனுப்பிவிட்டார்கள்.

னல்ல வேளையாக னமது சாலையை பாதிக்கும் வண்ணம், எந்த னிகழ்ச்சியும் சந்தேகமும் விசாரணையில் வரவில்லை.

கைது செய்யப்பட்டு, சிறையில் அடைக்கப்பட்ட திரைபட னடிகர்களும், ஓராண்டு கழித்து லண்டன் கோர்ட் வரை சென்று வாதாடி விடுதலைபெற்றனர்.

இரண்டு ஆண்டுக்கு பிறகு, அந்த சென்னை மெய்வழி பிறவியர் தெய்வத்திடம் வந்து, மன்றாடி மன்னிப்பு கேட்டு, மீண்டும் புதிய அங்கத்தினர் ஆனர்.

இப்படி சம்பந்தமே இல்லாமல் தெய்வம் அவர்களுக்கு வாழ்க்கையில் எவ்வளவோ பெரிய ஆபத்துக்களும், துன்பங்களும், இன்னல்களும் எல்லாம் வந்துள்ளன. அதனை எல்லாம் தெய்வம் அவர்கள் மிக எளிதாக சந்தித்து, எப்படி எல்லாமோ சாதுரியமாக னிகழ்வுகள் னிகழ்த்தி வெற்றி கண்டார்கள் என்பதை சொல்லி விவரிக்கவே இயலாது.

❋ ஒரு டாக்டரின் மனைவியான " சுஜாதாசென்" என்ற பிரஞ்சு சீமாட்டி ஞன்கு மாதம் சாலையில் தங்கி இருந்து ஆண்டவர்கள் திருவாயுரையை கேட்டு மகிழ்ந்து

தெய்வத்தின் சிஷ்யையாக பணிந்து இருந்தார். இருப்பினும் அவர் தமிழ் தெரியாதவர் என்பதால் தெய்வம் அவர்களுக்கு உபதேசம் தரவில்லை.

❋ "டாக்டர் அவ்யக்தானந்தா" என்ற வெளிநாட்டவர், நூற்பது பேர்களுடன் வந்து ஆண்டவர்களை தரிசனை செய்த போது, அருமையான திருவாக்கியங்களை தெய்வம் அவர்கள் இறக்கி அருளினார்கள்.

❋ "பால்பிரண்டன்" என்ற அமெரிக்கர், தெய்வத்தை தரிசனம் செய்து, முத்து மாலை ஒன்றையும் தெய்வ காணிக்கையாக சமர்ப்பித்தார்.

❋ "டாக்டர் சையத்" என்ற அரேபிய நாட்டை சேர்ந்தவர் ஆலாகாபாத் யுனிவர்சிட்டியில் பேராசிரியராக இருந்தவர், மூன்று நாட்கள் சாலையில் இருந்து தெய்வத்திடம் பல மெய்ஞ்ஞான விளக்கங்களை கேட்டு மகிழ்ந்து வணங்கி சென்றார்.

இவர்கள் அனைவரும் தெய்வத்தை தரிசனம் செய்த போது, உலகம் உண்டான ரகசியம், இறைவன் மனிதனை படைத்து அதில் குடியேறிய ரகசியம், வித்திய தேவ பிறப்பு போன்ற அற்புத அருள்விளக்கங்கள், தெய்வத்திடம் இருந்து மெய்வழி குலமக்களுக்கு கிடைத்தது.

இப்படி பலனூறு வெளி னுட்டவர்கள் தெய்வத்தை தரிசித்திருக்கிறூர்கள். இந்தியாவில் இருந்து பல ஆயிர ஆன்மீக வாதிகள் சின்மயனந்நா, சுத்தானந்நபாரதி போன்ற பலரும் தெய்வத்தை வந்து பார்த்து தரிசித்து இருந்நாலும், தெய்வத்தின் னேர் பிள்ளைகளாக அவர்களின் கையகத்-தானவர்கள் 5040 அங்கத்தினர்களும் அவர்களின் சந்நதி-யினரும் தான். இவர்களே இப்போது இன்னும் பல லட்சங்களாக பெருகி உள்ளனர்.

ஆலயத்தில் தீபம் ஏற்றுவதற்கு இலுப்ப எண்ணெய் தான் உபயோகப் படுத்த வேண்டும் என்பது தெய்வ உத்தரவு. ஏனெனில் இலுப்ப எண்ணெய் உபயோகித்து தீபம் ஏற்றினுல் தீப ஒளி குளிர்ச்சி கலந்த வெப்பமாக இருக்குமாம். அதே சமயம் தீபத்தின் பொறி, துணியில் பட்டாலும் எளிதில் தீப்பிடிக்காது.

ஆண்டவர்கள் சிலம்பாட்டம் மல்யுத்தம் போன்ற-வற்றில் மிகவும் வல்லவர்கள். அவர்களும் மார்கம்பட்டிக்கு பக்கத்து ஊரில் உள்ள மாம்பாரை கிராம ஜமின்தார் மகனும், அந்நபகுதியில் ஒரு சிறந்த மாமல்லர்களும், சிலம்பாட்ட விரர்களும் ஆவர். அந்த பகுதியில் னடைபெறும்

சிலம்பாட்டம், மல்யுத்தம் போன்ற போட்டிகளில் இவர்கள் இருவரும் தான் முன் அணியில் வருவர். ஆனல் தெய்மவர்கள், ஜமீன்தார் மகனேவிட வல்லவராயினும் போட்டி என்று வரும்போது, அந்த பகுதி விழாக்களில் ஜமீன்தார் மகனேயே வெற்றிவாகை சூடும்படி வாய்ப்பு கொடுப்பார்களாம். இது, ஜமீன்தார் மகனின் உள்ளத்தை னெகிழவைத்து தெய்வத்திடம் ஒரு அன்பையும், னட்பையும் அதிகமாக பாராட்டும்படி செய்து வந்நது. தன்னுடைய கௌரவத்திற்கு உரிய மரியாதையை செய்யும் தெய்வத்தின் பெருந்தன்மையை னினேத்து, அவர் மனதில் தெய்வத்தின் மீது, பெருமதிப்பை வைத்திருந்நார்.

அப்போது தெய்வத்திற்கு இருபத்தி ஒன்று வயது இருக்கும். அந்த சமயம் மார்கம்பட்டி மற்றும் மாம்பாரை கிராமம் இரண்டு ஊர்களுக்குள்ளும் ஒரு தகராறு வந்து விட்டது. அதனல் மாம்பாரை ஜமீன்தார் தம் ஊரில், மார்கம்பட்டி ஊர்க்காரர்கள் யாரும் வெளியூர் செல்ல தங்ஙள் ஊர் வழியாக செல்லுவதற்காக ஊர் உள்ளே னுழையக் கூடாது என்றும், அப்படி னுழைந்நால் அடிதடியாகும் என்றும் அறிவித்து விட்டார்.

ஆனல், இதை மீற மார்க்கப்பட்டி மக்கள் முடிவு செய்தனர். மாடுவண்டி பூட்டி அவர்கள் மாம்பாரை கிராமம்

பகுதிவழியாக அடுத்த கிராமத்திற்கு போக முடிவு செய்தனர். அப்படி மாடு பூட்டி அங்கு செல்வதற்கு முதல் ஆளாக தெய்வம் அவர்களை அனுப்புவது என்றும் ஊர் கூட்டத்தில் முடிவு செய்தனர். எனெனில், இவர்கள் ஒரு சிறந்த மாமல்லர் மற்றும் வீரர் என்பதால், அவரை முதலில் ஊருக்குள் செல்லும் ஆளாக னியமித்து, இவர் பின்னல் எல்லோரும் செல்வது என்றும் முடிவு செய்யப்பெற்றது.

ஊர் விருப்பத்தை மதித்து தெய்வம் அவர்கள், மாம்பாரை ஊர் உள்ளே மாட்டு வண்டியுடன் னுழைந்தார்கள். ஜமின்தார் ஆட்கள் அதை தடுத்து னிறுத்தினர். தெய்வமவர்கள் ஜமின்தார் பிள்ளையின் னண்பர் என்பதனை வேலையாட்கள் அறிந்தவர்கள் ஆதலால், அடிதடி இல்லாமல் வாய் பேச்சாலேயே இவர்களை தடுத்தனர்.

"எங்கள் ஊரில் முடிவுபடி, னுங்கள் இந்த வழியாகத்தான் போவோம் வருவோம். இதனை யார் தடுத்தாலும், னுங்கள் எங்கள் உயிரை விடவும் தயாராக இருக்கிறோம்", என்று உறுதியாக தெய்வம் இவர்களிடம் தெரிவித்தார்கள்.

இதனை கேட்ட ஜமின்தார் மகன், தெய்வம் அவர்களின் அன்பும், பண்பும், னட்பும் தான் முக்கியம் என்றும், ஊருக்காகவே இவர் இப்போது வாதம் செய்யவும்

சண்டையிடவும் வந்திருக்கிறார் என்பதனையும் கருத்திற்-கொண்டு தமது தந்தையிடம், தெய்வம் அவர்கள் விருப்பபடி மார்க்கம்பட்டிகாரர்கள் உள்ளே வரவும் போகவும் அனுமதிக்கும்படி கேட்டுகொள்ளவே, எல்லாம் சுமுகமாக முடிந்தது.

இப்படி னட்புக்கு ஒரு இலக்கணமானவர்களாகவும், தெய்வம் அவர்கள் வாழ்ந்து காட்டி, சிறப்புகள் பெற்றவர்கள் என்று அவர்களின் சரித்திரம் எடுத்துக்காட்டுகிறது.

தன்னே னிழல் போல் தொடர்ந்து வந்து கொண்டிருக்கும் னமது குல தெய்வம் ஆண்டவர்கள், மக்களே ரட்சிக்கும் இரக்கமான குணமும், கருணை உள்ளமும் பெற வேண்டும் என்பதற்காகவும், மேலும் தன்னைவிட்டு பிரித்து அனுப்பவும் திருவுளங் கொண்ட னமது பாட்டையர் தலிகை வள்ளல் பிரானவர்கள், ஆண்டவர்களே ரெட்டியப் பட்டி என்ற சிறிய கிராமத்தில் ஒரு பெரிய தனக்காரர் வீட்டில் ஆடு மேய்க்கும் தொழிலா- பரணத்தை ஏற்குமாறு உத்தரவிட்டார்கள். இந்த உத்தரவை சிரமேற்கொண்டு தெய்வம் அவர்கள் அந்த தொழிலா பரணத்தை ஏற்றுக் கொண்ட அந்த சம்பவத்தை, மெய்வழிமக்கள் தெய்வத்தின் இப்படிப்பட்ட எல்லா தவபாட்டையும் உணருவதற்காக, அதனை ஒரு திருவிழாவாக

வைக்க, தெய்மவர்கள் திருவுள்ளம் கொண்டார்கள். ஆனல் அதனை யாருக்கும் தெரிவிக்கவில்லை. அந்த விழாவினை அந்த ஆண்டே செயல்படுத்துவதற்கு ஒரு னிகழ்வை னிஜமாகவே னிகழ்த்தினர்கள். அதன்படி அவர்கள் திட்டமிட்டு னிகழ்த்தி காட்டிய ஒரு வரலாற்று னிகழ்வை அடுத்து காண்போம்.

ஒவ்வொரு னுட் காலையிலும் திருமாளிகையிலிருந்து வெளியே எழுந்தருளி வந்து பொன்னரங்க தேவாலய ஆசனத்தில் அமருவது ஆண்டவர்கள் வழக்கமாக இருந்து வந்தது. ஆனல் அன்று 1944ல் வைகாசி மாதம் பவுர்ணமி அன்று வெகு னேரமாகியும் ஆண்டவர்கள் ஆலயத்திற்கு எழுந்தருளவில்லை. ஆண்டவர்கள் ஏதோ கோபமுற்றி-ருக்கிறார்கள் என்ற செய்தி மட்டும் பரவலாக வந்தது.

மேலும், மாலை முன்று மணி அளவில், ஆண்டவர்கள் திருமாளிகையில் கூட இல்லை, மெய்வழி பிள்ளைகள் மீது கோபம் கொண்டு எங்கேயோ வெளியேறி விட்டார்கள் என்ற ஒரு பகீர் செய்தி வந்தது. இதனல் சாலை வாழ் மக்கள் எல்லோரும் அதிர்ச்சி அடைந்து, என்ன செய்வதென்று புரியாமல் மனம் பதைத்து னின்றார்கள். உடனே எல்லோரும் ஆண்டவர்கள் எங்கே போய் இருப்பார்களோ அருகில் தான் இருப்பார்கள் என்ற னம்பிக்கையில் அவர்களை தேடிக்கொண்டு அக்கம் பக்கம் னன்கு திசைகளிலும் பதறி

தவித்து புலம்பிக்கொண்டு, விசாரித்து தேட ஆரம்பித்து வெளியே சென்றார்கள்.

சுமார் ஒரு மணி நேரம் தேடியும், எந்த செய்தியும் ஒருவருக்கும் கிடைக்கவில்லை. மத்தியம் மூன்று மணிக்கு, சத்தியமங்கலம் செல்லும் பாதையில், ஒரு பாறை மீது, ஆண்டவர்கள் விற்றிருக்கின்றார்கள் என்ற செய்தி வந்தது. உடனே எல்லோருக்கும் இந்த செய்தி பரவிற்று. எல்லா திசைகளிலும் சென்றிருந்த அனந்நாதி தேவர்கள் எல்லோரும் திரும்பி இந்த குறிப்பிட்ட இடத்தை நோக்கி கூட்டம் கூட்டமாக ஓடிவந்தார்கள்.

அங்கு சிறிய மலைக்குன்று போன்ற ஒரு பாறை ஒன்றின் மீது ஆண்டவர்கள் அமர்ந்திருந்தார்கள். ஆனால் அவர்களைப் பார்க்கும் போது, "இவர்கள் ஆண்டவர்களா?" என்று கூறும் அளவிற்கு, நெஞ்சம் வெடித்துவிடும் ஒரு கந்தல் கோலத்தில் அந்த இடத்தில் ஆண்டவர்களை எல்லோரும் கண்டார்கள். எப்போதும் கெம்பீர இராஜ பட்டாடையில் காட்சி அளிக்கும் ஆண்டவர்கள், அன்று கிழிந்து தொங்கிக் கொண்டிருக்கும் வேட்டியையும், அழுக்கு மண்டிய பனியனையும் அணிந்து அமர்ந்துக் கொண்டிருப்பதை எல்லோரும் கண்டார்கள். ஒரு கையில் ஊண்ட கொம்பு ஒன்று வைத்துக்கொண்டு, தோளில் தண்ணீர் அருந்தும் ஒரு குடி கொட்டாங்கச்சியைத்

தொங்கவிட்டுக்கொண்டு, அந்த பழைய கிழிந்த கந்தை வேஷ்டியை மேலே தூக்கி உடுத்திக் கொண்டு, ஆடுமேய்க்கும் ஒருவரின் தோற்றத்திலேயே னின்றுக் கொண்டும், மேட்டில் அமர்ந்து கொண்டும், ஆடுகளை மேய்த்துக் கொண்டிருந்தார்கள்.

இக்கோலத்தினைக் கண்ட அனந்நர்கள், "ஞங்ஙள் என்ன குற்றம் செய்தோம் ஆண்டவர்களே! எதற்காக இந்த கோலத்தை இங்கு வந்து ஏற்றுக்கொண்டு இருக்கிறீர்கள்! " என்று கன்னத்திலும் தலையிலும் அடித்துக்கொண்டு குமுறி அழுது வேண்டி கேட்டுனின்றனர். இந்த புலம்பலை கேட்டு தெய்வம் அவர்கள் தாபமுகத்தினராக எதுவும் சொல்லாமல் அமைதியாக இருந்நார்கள்.

பிறகு, எல்லோரும் ஒருமுகமாக மண்டியிட்டு, "எங்ஙள் குற்றத்தை மன்னித்து, ஆண்டவர்கள் சாலைக்கு வந்து திருமாளிகைக்கு மீண்டும் எழுந்நருளி, தங்ஙளுக்கு உரிய ஆடையை மாற்றிக்கொள்ள வேண்டும்" என்று பிரார்த்தித்து னின்றனர். இப்படி தொடர்ந்து எல்லோரும் வேண்டவே, ஆண்டவர்கள் மனமிரங்ஙி, தலையசைத்து திருமாளிகைக்கு வர இசைவுதந்நு, சாலையை நோக்கி திரும்பி னடக்க ஆரம்பித்தார்கள். அவர்களை தொடர்ந்நு மெய்வழி மக்களும் கூட்டமாக தோத்தரித்தவண்ணம் கூடவே சாலைக்கு அழைத்து வந்நனர்.

சிறுது நேரத்தில் திருமாளிகையை அடைந்ததும், தாம் அணிந்திருந்த ஆடைகளை மாற்றி பாட்டாடை உடுத்திகொண்டு வெளியே வந்து பழைய தோற்றத்தில் காட்சி தந்தார்கள். இதன் பிறகு தான் எல்லோருக்கும் மனம் தெளிந்து ஆனந்தக் பரவசமாக தெய்வத்தை தோத்திரித்து னின்றனர்.

அன்று அடைந்த திகிலை, என்றும் மெய்வழிமக்கள் மறக்க இயலாதுவாறு தெய்வமவர்கள் அன்று செய்தார்கள். அன்றிலிருந்து இதே ஆடுமேய்ப்பு திருகோல காட்சியில் ஆண்டுதோறும் பிள்ளைகளுக்கு தெய்மவர்கள் தரிசனை தருவது வழக்கமாயிற்று.

ஒவ்வொரு ஆண்டும் வைகாசி பௌர்ணமி னிலும் ஆடு மேய்க்கும் கோலத்தில் வந்து, பிள்ளைகளை கலங்ங வைத்து, அதன்பின் அதனைமாற்றி சர்வ ஆபரண பூஷணராக காட்சி தருவது இந்நவிழாவில் வழக்கமாகியது. எவ்வித எளிய வாழ்க்கையையும் விரும்பி ஏற்க வேண்டுமென்பதற்கும், மேட்டிமை என்னம் ஒவ்வொருக்கும் மறைய வேண்டும் என்று உணர்த்தவும் இந்த விழாவை மெய்வழி மக்களுக்கு தெய்வமவர்கள் ஏற்படுத்தி தந்தார்கள். இச்சம்பவத்தை ஆடு மேய்ப்புத் திருக்கோலக் காட்சியாகக் கொண்டாட ஆரம்பித்தவுடன், அன்று இரவு பாசுபதத் தவக்கோல

கங்காணைக் காப்பு திருவிழாவையும் எடுத்து வைத்தார்கள். அதற்கேற்ப ஆடுமேய்ப்பு திருக்கோலப்பாவையும், பாசுபத கங்காண திருவிழா பாடல்களையும் எழுதியருளினர்கள்.

இதன்பிறகு, ஒரு சமயம் இந்த ஆடுமேய்ப்பு திருக்கோல திருவிழாவிற்கு மறுநாள், புத்தாடை புனைசிர் கருமானக்குடிக் காட்சி திருநாள் ஒன்றையும் எடுத்துவைக்க ஆண்டவர்கள் முடிவு செய்தார்கள். இதனைப்பற்றி ஒரு சமயம் சபையில் தெய்வமவர்கள் "இந்த ஆண்டு வைகாசித் திருவிழா, ஒரு புதிய முறையில் கொண்டாடப் பெறப்போகிறது. அதுபோது அனந்நாதி தேவர்களும் அவர்களின் பத்தினிமார்களும், குழந்நைகளும், புத்தம் புதிய ஆடைகளை அணிய வேண்டி வரும். அதனால் அதற்கு நீங்கள் தயாராக புதிய துணி மணிகளை வாங்கி வைத்துக்கொண்டு இருங்கள்" என்று இளனகையுடன் ஒரு அறிவிப்பினை தந்நருளினர்கள். பிறகு, "அதனை எப்போது அணிய வேண்டுமென்று நாம் தக்க சமயம் வரும்போது அந்நனேரத்தில் அறிவிக்கின்றோம்." என்றும் அருள் பாலித்நார்கள். ஆதலால், எல்லோரும் புதிய ஆடைகளை வாங்கிவைத்துக்கொண்டு, அடுத்து வரப்போகும் வைகாசித் திருவிழாவிற்காகவும், தெய்வ உத்திரவுக்காகவும் காத்தி-ருந்நார்கள்.

"குடிக்காட்சி திருவிழா" என்ற இந்த திருவிழாவையும் ஒரு சம்பவ னிகழ்வாக னடத்த தெய்வமவர்கள் ஒருதிட்டம் வைத்திருந்தார்கள். அது என்னவென்று அடுத்து பார்ப்போம்.

முன் ஒரு காலத்தில்.... "னி இனிமேல் உலகமெங்கும் சென்று, ஞானசீடர்களைப் பெற்று உமது மெய்வழி சாம்ராஜ்ஜியத்தை னடாத்துவாயாக!" என்று தம்மை பிரிந்து செல்ல உத்தரவிட்டு ஆசிர்வதித்த அவர்களின் ஞானத்-தந்தையும் குரு கொண்டலருமாகிய னமது பாட்டையர் தனிகை வள்ளல் பிரான் அவர்களின் உத்தரவுபடி, னமது பிதா ஸ்ரீலஸ்ரீ ஆண்டவர்கள் வெளி உலகத்திற்கு தனித்து வரவேண்டியதாயிற்று.

தெய்வமவர்கள் பாட்டையர் உத்திரவிட்ட அந்த கடமையை சீரமேற்தாங்கி, இந்தப் பரந்த உலகில், தான் பெற்ற இந்த மெய்ச் செல்வத்தை எல்லோரும் பெற வேண்டும் என்ற சீரிய எண்ணம் கொண்டு, தமது ஞானபிரசாரத்தைத் துவங்குவதற்கு திருப்பரங்குன்றின் மலைக்குகையில் இருந்து முழுங்கால் வரை னீண்டு வளர்ந்திருந்த ஜடா முடிக்கோலத்துடன் இறங்கி வந்த போது, இந்த பேரின்ப பெருவாழ்வு பெருஞ்செல்வத்தை, இந்த உலகில் யாரும் வேண்டாமென்று மறுக்கமாட்டார்கள் ஆகையால், இதனை மிக எளிதில் எல்லோருக்கும் புகுத்தி விடலாம் என்று

னினைத்தார்கள். அதனுல் மிகுந்த னம்பிக்கையுடன் தனது பிரசாரத்தை தெய்வமவர்கள் ஆரம்பித்தார்கள்.

இல்லறத்தைத் துறந்து சன்னியாசம் பூண்டு தனியாக மடத்தில் வாழும் சாமியார்கள் மிகவும் ஞான இச்சை கொண்டு இருப்பார்களாகையால், மெய்யினை அவர்களுக்கு எளிதில் உணர்த்தி, தங்கள் மெய்வழி ஞான மார்க்கத்திற்கு இலக்காக உடனே அவர்களை ஆக்கிவிடலாம் என்ற ஒரு தீர்மானத்திற்கு முதலில் வந்தார்கள். அதனுல் காஷாய உடையும், யோக தண்டும் கமண்டலமும் தாங்கி சாமியார் கோலத்துடன் பல சாமியார்கள் சேர்ந்து கூட்டமாக வாசம் செய்யும் மதுரையம்பதிக்கு அடுத்திருந்த "அந்தி வெளிபொட்டல்" அருகில் அமைந்திருந்த " தான் தோன்றி" மடத்தை அடைந்தார்கள்.

அங்கு சென்று அங்கிருந்த சாமியார்களை சந்தித்து "மெய்யான பேரின்ப பெருவாழ்வின் செல்வம் இன்னது" என்று எடுத்துப்பேசி அவர்களிடம் உரையாடியதில், அங்கிருந்த சாமியார்கள் எல்லோருமே காஷாயமணிந்து துறவிகள்போல் உலகத்தாருக்குத் தோன்றினலும், யார் ஒருவரும் தெய்வத்தின் ஞான மொழிகளை கேட்காத கேவலமான குணதிசயம் கொண்டவர்களாகவும், ஞான இச்சையோ அதுப்பற்றிய சிந்தனை எதுவுமோ இல்லாத

சோம்பேறிகளாகவும் இருந்தனர். அதுமட்டுமல்லாமல் எல்லோரும் உண்மையில் கஞ்சாவான ஒரு போதைப் பொருளை, கோரக்கர் பிரம்மமூலிகை என்றும் கூறிக்கொண்டு புகை குழாயில் அதனை போட்டு புகைத்து உபயோகிக்கும் போலி பாஷாண்டிசாமிகள் என்பதும் தெளிவாக அவர்களுக்கு அங்கு புரிந்தது.

அங்கிருந்த அந்த சாமியார்கள் ஒவ்வொருவரும், அவனைவிட்டு வேறொருவனுடன் ஓடிவிட்ட பொண்டாட்டியால் அவமானபட்டவர்களாகவும், பஜாரியான பெண்டாட்டியால் அடித்து துரத்தப்பட்டவர்களாகவும், மேலும் இவர்களை பல பெண்டாட்டிகள் வைத்துக்கொண்டு அதனால் குடும்பத்தில் கலவரம் விளைந்து ஓடிவந்தவர்களாகவும், கேளிக்கையில் ஈடுபட்டு கடனாகி ஜப்தி கேஸ் என்று ஆகிவிட்டு ஓடிவந்தவர்களுமாகத்தான் எல்லோரும் இருந்தார்கள்.

இந்த நிலையில் தான், எல்லாரும் இப்படி சோத்துக்கு வழியில்லாத சாமியாகவும், கடன்கார சாமியாகவும் ஆகி இங்கு வந்து இருப்பதின் காரணை காரியமாக இருந்தது என்பதை அங்கு பார்த்து தெரிந்துகொண்டார்கள்.

உண்மையான மெய்ஞ்ஞான ஞட்டம் எதுவும் இல்லாது இப்படிப்பட்டவர்கள்தான் சாமியார்களாக அங்கு இருப்பதால்

மெய் என்பது இவர்களுக்கு வெகு தூரமாக இருந்தது. உலகம் முழுதும் உள்ள சாமியார்களின் பொய்வேடம் முழுதும் இது போலத்தான் உள்ளது என்பதனையும் தெள்ளத் தெளிவாக தெய்வம் அவர்கள் அப்போது உணர்ந்தார்கள்.

அந்த சாமியார்களிடம் ஏதேனும் வலிந்து போதிக்க முற்பட்டாலும், அந்த சாமியார்கள், எதனையும் ஏற்றுக் கொள்ளாமல் "ஞம் பிரம்மம் - ஒம்தத் சத் - ஞமசிவாய - ஓம் தத்துவ மசி - பிரம்மமே ஜகத் - ஓங்காரம். ஆய் ஊய்" என்று ஏதேதோ கூறி அதனை புறக்கணித்தார்கள். அங்கு வருபவர்களை ஏமாற்றி "பிரம்மம் ஞன்தான் - ஏகாந்தம், ஆனந்தம், பரபிரம்மம் - ஜகம்பிரம்மம் - எல்லாம் பிரம்மமயம் - எல்லாம் தத்துவ மயம் னியே ஞன் எல்லாம் ஏகமயம்" என்று ஏதோதோ வேறு சொல்லுவார்கள்.

யாரேனும் பார்க்கவந்தால் சும்மாவாகினும் கண்களை மூடிக்கொண்டு "ஓம் ஜீம்"... என்று சத்தமிட்டுக் கொண்டிருந்தார்கள். வருபவர்கள் "சுவாமி, சுவாமி" என்று அழைத்தாலும், கண்களை திறக்காமல் தவத்தில் இருப்பதாக பாசாங்கு காட்டிக் கொண்டிருந்தார்கள்.

பெரிய பணக்காரர்கள் யாரேனும் வந்தால், தங்களுக்கு கீழ் உள்ள குட்டிச் சாமிகளை வைத்துக்கொண்டு, அவர்களை அழைத்துவந்து, னல்லா கவனித்து உபசாரம் செய்து தங்கள்

தங்கள் வயிற்றுப் போற்றுக்கு எல்லா வகைகளையும் பண்ணிக் கொண்டிருந்தார்கள். வருபவர்களிடம், தான் இமயமலை தோன்றுவதற்கு முன்பிருந்தே வாழ்ந்து கொண்டிருப்பவர் என்றும், மலை மலையான பொய்யையும் கண்டபடி புளுகுவார்கள். இன்னும் சிலர், கையிலாயம், வைகுண்டம் ஆகிய இடங்களில் இருந்து தான் கால்னடையாகவே னடந்து இங்கு வந்து வாழ்ந்து கொண்டிருப்பதாகவும் புளுகுவார்கள்.

நெய்வம் அவர்கள், அவர்களை நோக்கி, கஞ்சா, அபின் அருந்துவது மிகவும் கேடான ஒரு பஞ்சமாபாதகம் என்று தெரிவித்தபோது, னி புதிய சாமி உனக்கு ஒன்றும் தெரியாது, இது முத்திக்கு வித்து. பரமானந்தம். பிரம்மானந்தம். னீரும் பழகிக்கொள்ளலாம் என்றார்கள்.

அந்த கஞ்சாவை அந்த சன்னியாசிகளின் விருப்பத்திற்காக ஒரு ஜமின்தார் வந்து இவர்களுக்கு வினியோகம் வேறு செய்து கொண்டிருந்தார். தெய்வம் ஞான மார்க்கத்திற்கு செல்லும் மெய்ஞ்ஞானிகளுக்கு இந்த கஞ்சாபுகை மிகவும் தடையானது என்று பலவாறு அறிவுரைகளை கூறியும், மற்றும் பல ஞான மொழிகளையும் புகன்றும், அவர்கள் அதை மறுத்து தெய்வமவர்களையும் கஞ்சாவை பழகிக் கொள்ளும்படி மட்டுமே வற்புறுத்தி கொண்டே இருந்தார்கள். அது பிரம்ம முலிகை என்றும்

அதனை குடித்தால் பிரம்மமாகி முத்திதானே சித்திக்கும் என்றும் திரும்ப திரும்ப உளறினர்கள்.

அந்த ஜமின்தார் மட்டும், தெய்வம் சொல்லுவதில் ஒரு உண்மை இருக்கிறது என்று உணர்ந்து தெய்வ வாக்கியத்தை மதித்து மரியாதையுடன் பக்தியுடனும் தெய்வத்தை வணங்கினர். ஆனல் அந்த பொய் பாசாண்டியர்களின் கையில் அவர் சிக்கியிருப்பதால் எதுவும் செய்ய இயலாது விழித்துக்கொண்டிருந்தார். இந்த மெய்ஞானத்தை இது போன்ற சன்னியாசிகளிடம் புகுத்தவே முடியாது என்பதனை தெய்வம் அவர்கள் அறிந்து அம்மடத்தை விட்டு வெளியேறி விடவேண்டும் என்று னினைக்க ஆரம்பித்தார்கள். முடிந்த அளவு தொடர்ந்து விடாமல் அவர்களுக்கு பல்வாறு எடுத்து சொல்லியும், அந்த கூட்டத்தில் யாரும் திருந்தவில்லை என்பதால், இறுதியாக ஒருனுள் மிகவும் வருத்தத்துடன் "வேறுயாருக்கு ஞானம் வந்தாலும் வரும்... உங்களைப் போன்ற பாஷாண்டி சன்னியாச சாமிகளாகிய உங்களுக்கு ஞான வாசனை கிட்டவே வராது" என்று கூறி சபித்துவிட்டு, கோபமாக தாங்கள் அணிந்திருந்த காஷாய அங்கியை அவர்கள் முன்னே திடீரென்று கிழித்து எடுத்து அவர்கள் மேலேயே வீசி எறிந்தார்கள். அங்கிருந்த ஜமின்தாரின் வேலையாளிடம் எட்டு முழத்தில் வெள்ளை வேஷ்டியும்,

.வெள்ளை பாகை கட்ட கிளாஸ்கோமல் வாயில் துணியையும் வாங்கிவர சொல்லி, அது வந்த பிறகு அதை அணிந்து கொண்டு, இனி கௌரமாக இல்லறம் னடத்தும் குடும்பஸ்தர்களையே மெய்யிற்கு இழுக்க பாடுபட வேண்டும் என்ற எண்ணத்துடன் அங்கிருந்து மதுரை நோக்கி னடந்து வந்துவிட்டார்கள். இப்படி னம்மையெல்லாம் இரட்சிக்க அன்று அவர்கள் திரு உள்ளத்தை மாற்றி திரும்பிய ஒரு சரித்திரம் இது. இந்த சரித்திரத்தில் வரும் மேலே குறித்த அந்த மடத்து சாமியார்களின் போலித்தன னடவடிக்கை அனைத்தையும் அப்படியே தத்ருபமாக னடகமாக்கி குடிகாட்சி திருனளில் னடத்த மெய்வழி பிள்ளைகளுக்கு பயிற்சி கொடுக்க திட்டமிட்டார்கள். அதன்படி அந்த னடகம் தெய்வ பிள்ளைகளைகொண்டே முதன் முதலில் அந்த கருமான குடிகாட்சி திருனள் அன்று காலை ஏழுமணிக்கு சாலையின் விதிகளில் ஆரம்பமாகியது.

தத்ருபமாகக் போலிபாசண்டி வேடமிட்ட சாமியார் கூட்டத்தை தம்பிள்ளைகளை ஏற்க சொல்லி, சாலையில் னன்கு விதிகளிலுமிருந்து னெற்றியிலும் தோள்பட்டையிலும் னமமும் விபூதியும் பட்டை பட்டையாக குழைத்து திட்டிக்கொண்டு, இடது தோளில் அன்னக்காவடி தாங்கியும், வலது கையில் சங்கு ஒன்றினை பற்றியும், "பூம் பூம்" என்று

ஊதி "ஹர ஹர சம்போ மகாதேவா" என்று பல்வேறு விதமான சாமியார்களை மூலா மூலைக்கு பிச்சை கேட்டு ஆண்டிகளாக வரும்படி செய்து, கடைசியாக தெய்வ சன்னதி வரும்படி சொல்லி, இந்த நாடகத்தை ஆரம்பித்து வைத்தார்கள்.

ஆலயம் உள்ளே, தாங்கள் திருமுன்பாக இவர்கள் வந்தபிறகு, தெய்வமவர்கள், "சாமிகள் எல்லோரும் எந்த ஊர்?" என்று அவர்களைபார்த்து வினவி விசாரிக்க ஆரம்பித்து, அனந்நாதி தேவர்களும், மெய்வழி குலமக்களும் வியந்து கேட்டு அறிந்துகொள்ளும் வண்ணம், உலகில் உள்ள போலி சாமியார்களின் பித்தலாட்டங்களை அவர்கள் வாயிலாகவே உளரும்படி அந்த நாடகத்தில் செய்வார்கள். தெய்வ வாக்கியங்களை, தான் தோன்றி மடத்தில் இந்த சாமிகள் எப்படி எல்லாம் மறுத்து என்னவெல்லாமோ மூடத்தனமாக வாக்கு வாதம் செய்து பேசிய உரையாடல்களை அப்படியே நாடகத்தில் பிள்ளைகளை கொண்டு பேசவைத்து நடிக்க வைத்தார்கள். நாடகம் முடிந்தவுடன் அந்த பிள்ளைகளுக்கு தீர்த்தம் போட்டு திரும்ப பரிசுத்த பிள்ளைகளாக ஆக்குவார்கள்.

இப்படி தாங்கள் மெய்ஞ்ஞான அருள்நெறியை, இவ்உலகிற்கு பரப்ப பெரும்பாடுபட்ட ஒரு சம்பவத்தை, அப்படியே பிரத்தியட்சமாக எல்லோரும் காணுமாறு நாடக

முறையில் எடுத்துக்காட்டி, அந்த சாமியார்களே தாம் மெய்யில் மாற்ற முயன்ற முயற்சிகளையும், அவர்களே திருத்தி மெய்யில் ஆக்க போதித்த அனைத்து வாதங்களையும் விவாதங்களையும் விதவிதமாக அந்த நடகத்தில் எடுத்து வைத்தார்கள்.

இந்த நடகத்தை பிள்ளைகளே கொண்டு னடிக்க வைத்தபிறகு, இந்த கருமான குடிகாட்சி நடகத்தின் இறுதி கட்டத்தில், அந்த சாமியார்களே திட்டிவிட்டு, தெய்வமவர்கள் எழுந்து தமது காஷாய மேல் ஆடையை அவர்கள் எதிரே கிழித்துப் போட்டுவிட்டு வேகமாக திருமாளிகைக்கு சென்று விடுவார்கள். சில னிமிடங்கள் கடந்ததும் கெம்பீர இராஜ உடை அனிந்து திரும்பி ஆலயத்தில் எழுந்தருளி வந்து முகமலர்ச்சியுடன் தமது ஞானக்குழந்தைகளே நோக்கி,

"நம் புத்தாடை அனிந்துவிட்டோம், நம் உங்களே எல்லாம் ஆட்கொள்ள எழுந்த இச்சம்பவத்தின் னிமித்தமாக னீங்கள் எல்லோரும் விடுதிக்கு சென்று புத்தாடை புனைந்து ஆலயத்திற்கு வாருங்கள்", என பகர்ந்து விட்டு, மறுபடியும் திருமாளிகைக்கு திரும்பியருளுவார்கள்.

இதன்பிறகு அனந்தர் அனந்ததிகள், குழந்தைகள் எல்லோரும் தங்கள் விடுதிக்கு சென்று புத்தாடை புனைந்து மிக்க ஆனந்தக் களிப்புடன் ஆலயத்திற்கு திரும்பிவந்து தெய்வத்தை தோத்திரம் செய்து வணங்குவது வழக்கம்

இப்படி பல ஆண்டுகள் இந்த குடிக்காட்சி னிகழ்
னிகழ்ந்துவந்தது. குடிக்காட்சி னடகம் முடிந்தவ
அனைவரும் புத்தாடை புனைந்து ஆலயம் வந்து தெ
முன்பாக சபையில் அமர்ந்து பழையபடி அளவள
கொண்டிருப்பது வழக்கம். அதுனேரம் தெ
திருவாக்கியங்களும் இறங்கும். இந்த காலகட்டத்தில்
சமயம், தெய்வம் அவர்கள் இந்த திருவிழா முடிந்தவ
அமைதியாக அமர்ந்து இருந்தார்கள். அப்போது சப
அமைதியாக இருந்தது. இந்த மௌனத்தை கலைக்க
பிறவியர் அன்றைய செய்திதாளில் வந்த ஒரு செய்தி
எடுத்துப்பேசி விவரிக்க ஆரம்பித்தார்.

தெய்வம் அவர்கள் அதை கேட்க விருப்பமில்
"என்னடா இது.... இன்று இவ்வளவு னடந்தது தெற்கு?
கலியுக பொய்யான இகமாய்கையை போக்கத்த
உங்களை புத்தாடை புனைந்து வரச் சொன்னோம். இதன் பி
அந்த உலக னினைப்பையே இங்கு பேச மீ
விரும்புகிறீர்களே....!" என்ற சற்று கலிப்புடன் கோப
தெரிவித்தார்கள்.

சபை மீண்டும் அமைதியாயிற்று. சிறிது வேரத்தில் மூத்தபிறவியரும், காரியதரிகளில் ஒருவருமாகிய ஒரு பிறவியர், "ஙங்ஙள் இப்போது பாவமன்னிப்பு .... வன்னம்பிக்கை வசனத்தை.... இப்போதே தங்ஙள் திருமுன் ஓத விழைக்கிறேம்.... இதற்கு ஆண்டவர்கள் உத்தரவு தரவேணும்" என்று மண்டியிட்டு வாய்பொத்தி உத்தரவுகேட்டார்.

தெய்வம் அவர்கள், இதற்கு "...ம் ... சரி செய்யுங்ஙள்" என்ற உத்தரவு தந்நார்கள்.

உடனேயே பாவ விமோசனம் மந்திரம் எல்லோரும் ஓத தயாராகி, ஒருவர் கூற மற்றவர்கள் வாங்ஙி ஓதினர். அதிலிருந்து ஒவ்வொரு வைகாசி திருவிழாவிற்கும் இந்த பாவமன்னிப்பு ஓதுவது வழக்கமாக ஆயிற்று.

1947ம் ஆண்டில், ஒரு திருவிழா முடிந்து, பூராங்கொடி இறக்கி கொடி பிரசாதம் வழங்கப் பெற்றதும், திருவிழாவிற்கு விஜயம் செய்திருந்த ஆருயிர் பிறவியர்கள் பெரும் பான்மை போறும் ஆண்டவர்களிடம் உத்திரவு பெற்று தம் தமது தொழில் பணியை ஏற்று னடாத்த விடை பெற்று சென்று விட்டார்கள். மிதமிருந்த பிறவியர்களும் மாலை வணக்கம் முடிந்நதும் விடை பெற்றுக் கொண்டார்கள். அன்றிரவு தங்ஙியிருந்நதவர்கள் வெகு சிலரே.

இரவு எட்டு மணி அளவில், மைக் இல்லாமலேயே பெலத்த குரலில் சாலே முழுவதும் கேட்கும்படியான உயர்ந்த குரல் கொண்ட பிறவியர் ஒருவர்," ஓ.... அமுது வழங்குராங்கோ; ஆலயத்துக்கு எல்லோரும் வாங்கோ...." என்று மூன்று முறை அறிவித்து ஓய்ந்தார்.

சாலே வாசிகளுக்கு முன் அறிவிப்பு ஒன்று மில்லாததால், என்ன விசேடத்திற்கு அமுது வழங்குகிறார்கள் என்று திகைத்துப் போய், ஆனால் உடனே சுறு சுறுப்பு அடைந்து, காஷாயத்தைக் கையிலேந்தி ஆலயத்தை விரைந்தார்கள். போகும் போதே காஷாயத்தினுல் தங்களது வாயை மூடி, வழக்கம் போல் தலையில் சேர்த்து கட்டிக் கொண்டார்கள்.

எப்போதும் ஆலய முகப்பில்தான் அமுது வழங்குவது மாமூலாக இருந்ததினுல், ஆலய முகப்பை வந்தடைந்தார்கள். அங்கு அமுது வழங்கும் அறிகுறியே இல்லை. ஆனால் ஒரு ஆருயிர் பிறவியர் ஒருவர் அங்கு னின்று கொண்டு திருமாளிகையினுள்ளே அமுது வழங்கப் பெறுகிறது என்று அறிவித்தார்.

வயதில் முதியோர்களான ஒரு சில அனந்நர் பெருமக்கள் னிங்கலாக யாரும் திருமாளிகையினுள் பிரவேசிப்பதில்லை ஆகையால்; எல்லோரும் னிசப்தமாகவும், மிகவும் பக்தி மரியாதையுடனும் திருமாளிகை வாயிலை அடைந்தார்கள்.

அங்கு னின்றிருந்த ஆருயிர் பிறவியர் ஒருவர் "ஆண்டவர்கள் தமது திருகரத்தினுலேயே அழுது வழங்குகிறார்கள், அவர்கள் வழங்கும் அழுதினை கரண்டியிலிருந்து சுத்தமாக மீதம் இல்லாமல் வழித்தெடுத்து உடனே அருந்தி விடுதல் வேண்டும்" என்று ஒவ்வொரு அங்கத்தினர் காதிலும் மெதுவாக ஓதி உள்ளே அனுப்பி வைத்தார்.

திருமாளிகைக்குள் னுழைந்ததும், ஆண்டவர்கள் தாம் சயனிக்கும் கட்டிலில் அமர்ந்து, அழுது வழங்கும் காட்சி னிகழ்ந்து கொண்டிருந்தது. வெள்ளை மஸ்லின் ஆடை மேனியை அலங்கரிக்க, சிரசில் பர்மியர் பாணியில் கருப்பு சவுக்கத்தைக் கட்டி பக்க வாட்டில் முடிச்சியிட்டு, தங்க அறுபுரி பூனூல் மார்பில் ஊசலாடி பனிச்சிட, ஆண்டவர்கள் கெம்பீரமாக னிமிர்ந்து அமர்ந்திருந்தது கண் கொள்ளா காக்ஷியாக இருந்தது.

திருக்கரத்தில் வெள்ளி கரண்டி பிடித்து, அது னிறைய கும்பமாக அழுதினை அள்ளி அள்ளி வழங்க, அதனை அப்படியே வழித்தெடுத்து அங்கேயே வாயினில் இட்டுக் கொண்டு பிள்ளைகள் வெளியேறினர்கள்.

யாராவது அடியோடு வழித்தெடுக்காமல் மீதம் வைத்தால், ஆண்டவர்கள் தமது சிரசை உயர்த்தி முகத்தை ஊடுறுவி பார்த்தார்கள். அது கோபப் பார்வையா, அல்லது

பூரும் வழித்தெடுக்க முடியாதவரை மன்னிக்கும் கடைக் கண் விச்சா என்று யாராலும் யூகிக்க முடிய வில்லை. இவ்வாறே அழுது வழங்கி முடிய மூன்று மணி னேரமாயிற்று.

மறு னுட்காலை, ஆலயத்தில் தெய்வம் அவர்கள் அமர்ந்திருந்தபோது, னேற்றிவு வழங்கப் பெற்ற அழுது "ஐங்காய அழுது" என்றும், அது காயத்தைக் கெட்டிப்படுத்தி பிணி போக்கும் தேவ மருந்தென்றும், அதனை தனது மேற்பார்வையில் பனி மதி னுச்சியாரும். இளைய னுச்சியாரும் திருமாளிகையில் தயாரித்தார்கள் என்றும் ஆண்டவர்கள் அருள் பாலித்தார்கள்.

அழுதின் தன்மையைப் பார்த்தால், அந்த அழுது வெண் பொங்கலா, சர்க்கரை பொங்கலா அல்லது பிரியாணி வகையைச் சார்ந்ததா என்று யாராலும் யூகிக்க முடிய வில்லை. அதன் மணமும் ருசியும் அலாதியாக இருந்தது. இளங்காரமும், மெல்லிய இனிப்புமாக வாய் மணக்க, உள்ளம் பூரிக்க, னுவினில் ருசியானது, னின்டனேரம் னின்று ஊசலாடிக் கொண்டேயிருக்கும் அழுது அது. இந்த அழுதை செய்து பார்க்கும் பொருட்டு பெரியம்மா பனிமதி னுச்சியாரிடம் அப்போது அவர்களை அணுகி கேட்டபோது வாங்கிய அளவு விகிதங்களை இப்போது கீழே பார்ப்போம், குடும்ப அளவிற்கு....

பச்சரிசி - 1 உழக்கு, பாசிப்பருப்பு - 15 கிராம், கடலைப் பருப்பு - 8 கிராம், துவரம் பருப்பு - 8 கிராம், முந்திரி பருப்பு - 10 கிராம், திராட்சை - 10 கிராம், பட்டை - 1 கிராம், ஏலக்காய் - 1 கிராம், பிரிஞ்சி இலை - அரை கிராம், கிராம்பு - 4, பூண்டு - 10 கிராம், தேங்காய் - 1 (பால் எடுக்க) நெய் - 50 மில்லி, கொத்துமல்லி - தழை, புதினா - தழை, உப்பு - வேண்டிய அளவு, ஒ.கே. ஆயில் - 15 மில்லி, பன்னீர் - 8 மில்லி.



பழஞ்சோழ காலத்திலேயே சில குடும்பங்கள், அங்கு பொங்கல் தினத்தன்று, பொங்கல் வைத்து அதனை தெய்வத்திற்கு சமர்ப்பிப்பது வழக்கம். புதுக்கோட்டை பாப்பாஞ்சிவயலில், பொன்னரங்க தேவாலயம் அமைந்து, அந்தநேவ பூமிக்கு மீண்டும் மெய்வழிச் சாலை என்று புதுனுமம் சூட்டி, 64 அடி உயர கொடி கம்பம் னிறுத்தி தனது கிள்னுமக்கொடியை வானுயர பறக்க விட்டு, தனது மெய்ஞான இராஜ்ஜியத்தை ஒரு னிலையாக ஸ்தாபிதம் செய்த பிறகுதான், 1946ல் பாழைப்போக்கி பலன்தரும் கோளரி சாலையர் பொங்கல்பானைப்பலி திருனாள, ஆண்டவர்கள் எடுத்து வைத்தார்கள்.

இத் திருனாள் தை மாதம் முதல் தேதியில் கொண்டாடப் பெறுகிறது. மார்கழி மாதம் கடைசி வாரத்திலேயே சாலை களை

கட்ட துவங்கிவிடும். அங்கத்தினர்கள் அந்த காலத்தில், தலையில் மூட்டை முடிச்சிகளுடன், சத்திய மங்கலம், வெள்ளனூர், அன்னவாசல், கீரனூர் முதலிய கிராமங்களில் இறங்கி முட்கள் னிறைந்த ஒத்தையடிப் பாதையிலும், இடுப்புயர மிக குறுகிய வரப்பிலும், சில இடங்களில் தண்ணீரிலும் இரங்கி னடந்து மெய்வழி கீதம் பாடிக்கொண்டு, மதுரை, பூவாளூர், திருச்சி, தஞ்சாவூர், சென்னை, சேலம், நமக்கல் முதலிய இடங்களிலிருந்து கும்பல் கும்பலாக வரத் துவங்குவார்கள்.

இக்காலம் போல் ஆரம்பகாலத்தில், கீழகுறிச்சி வரையிலும் கூட வருவதற்கு பஸ் போக்குவரத்துக் கிடையாது. ரஸ்தாக்களும் செப்பனிடப் படவில்லை. னடக்க இயலாத வயோதிகர்கள் இரட்டை மாட்டு வண்டியில் (கூண்டு இல்லாத திறந்த வண்டி) கீழக்குறிச்சி அன்னவாசல், கீரனூர், விராலிமலை முதலிய கிராமங்களிலிருந்து வருவதற்குள் உடம்பைக் குலுக்கி ஒவ்வொரு எலும்பாக எண்ணி எடுத்து விடும். அப்படி சாலைகள் திமர் பள்ளங்களும், கற்கள் னிறைந்த மேடுமாக பயங்கர தோற்றமளிக்கும். னடந்துவரும் எந்தப்பாதையிலும் கால் மிதியடியைத் துணைத்துக்கொண்டு னடக் என்று கருவேல், வெள்வேல் முள் குத்தும். அதன் வலிமாற ஒருவாரம் கூட ஆகும்.

சாலேயம்பதியை அடைந்த அனந்நாதி தேவர்களும், சாலேவாசிகளும் தை மாதம் விடிவதற்கு முன்பே கோழி கூப்பிடும் னேரத்தில், பிரம்மோதய மெய்வழி சாலே ஆண்டவர்களின் அவதார திருக்காக்ஷி திருவிழாவை கொண்டாடி கஜிர் அமுது வாங்ஙி உண்டு விடுதிகளுக்கு திரும்பிவிடுவார்கள்.

மறுனாள், பொழுது னன்ருக புலர்ந்நதும் விடுதிக்கு முன் புல் செதுக்கி, னீர் தெளித்து, சுத்தமிட்டு அடுப்புகள் அமைத்து, அதனைச் சுற்றி கோலமிட்டு, மதிய னேரத்தில் ஆலயத்தில் புதுப்பானை வாங்கி, திருமாளிகைக்கு சென்று தீர்த்தப் பிரசாதம் வாங்ஙி வந்து, அதனைப் பாலில் கலந்து புதுப்பானையிலிட்டு, அரிசிகளைந்து, வெல்லம் தூள் செய்து பானைபலி திருனாளுக்குத் தயாராகி விடுவார்கள்.பிற்காலத்தில் ஆலயம் எதிரில் உள்ள வெட்டவெளியிலேயே வரிசை வரிசையாக பொங்கல் வைப்பதும் ஆரம்பமாகியது.

மாலே வணக்கம் முடிவுற்றதும் ஆண்டவர்கள் தனது பரிவாரங்களுடன் துந்துமி எக்காளம், சங்கு முழங்க கொடி மேடைக்கு எழுந்நருளி "னெய் ஒளி பந்நத்தை" ஏற்றிக்கொண்டு உடன் கீழ்குனிந்து னிற்கும், அதன் கைங்கர்ய அனந்நரின் கையிலிருந்து வாங்ஙி தனது திருக் கரத்தால் தூக்கி உயர்த்தி னாங்குபுறமும் அசைத்து காட்டி

சமிக்ஞை செய்தருளுவார்கள். அப்போது அத்தீப ஒளியைக் கண்ணுற்ற அத்தனை குடும்பத் தலைவிகளும் தங்களது அடுப்புக்களை ஏக காலத்தில் பற்ற வைப்பார்கள்.

அடுப்புகள் எரிய, புகை மண்டலம் வானளாவி எங்கும் சூழ்ந்து கொள்ள, கலகல என்ற சந்தோஷ ஆரவாரம் எங்கும் இருக்கும்.

சாலை காவற் படையின் உத்தி ஆட்களாகிய முத்த அனந்தர்கள், தியாணைப்பு பொறுப்பேற்று நிற்பர். மற்றைய மெய்வழி ஆண் மக்களும் சாலையைச் சுற்றி காவற் பணி செய்வதிலும், தீ கட்டுக் கடங்காமல் வேறு எங்கும் பரவாமலும் கண் காணித்தவாறே இருப்பார்கள்.

பொங்கல் பானை பொங்கி வழியும்போது, பொங்குலோ பொங்கல், சாலை ஆண்டவர்கள் பொங்குலோ பொங்கல் என்று எழும்பும் சத்தம் வானைப் பிளக்கும். ஆண்டவர்கள் முகப்பில் அமர்ந்த படியே மிகவும் ரசிப்பார்கள்.

எல்லோரும் பொங்கல் அமுதை பொங்கி முடித்ததும், தங்கள் குடும்பத்துடன் பொங்கல் பானையையும் சுற்றி கரும்பு கழியை கையில் பிடித்தவண்ணம் வட்டமாக நின்று கொள்வார்கள்.

திருமாளிகையிலிருந்து பணிமதி ஞச்சியார் பின் தொடர ஆண்டவர்கள் எழுந்தருளுவார்கள்.

" மங்கையர் பொங்களிட - மாமண
வாளர்கள் கூடனிற்க -
பொங்குலோ பொங்கல்"

என பொங்கல் கீதம் பாடிக்கொண்டு முத்தபிள்ளைகள் பின் தொடர, ஒவ்வொரு பானையிலும் பனிமதி ஞச்சியார் தீர்த்தம் தெளித்து முடித்ததும், ஆண்டவர்கள் முக்கூர்கத்தி கொண்டு தமது திருக்கரத்தாலேயே பொங்கல் அமுதை எடுத்து, அருகில் காரியதரிசிகள் ஏந்தி னிற்கும் வெள்ளிப் பேழையில் இடுவார்கள்.

பிறகு ஆலயம் சென்று, சேகரித்து வந்த அமுதை பெரிய பாத்திரத்தில் கொட்டி ஒன்றுக கலந்து திருமாளிகை அமுதாக்கி, முதலில் சபைக்கரசருக்கும், தீப கைங்கரியம் செய்த வருக்கும், ஆலய அலங்காரம் செய்தவருக்கும் அமுது வழங்கி விட்டு பிறகு முறையே சத்தியப்பிடி முப்பர்களுக்கும், சாலை வாழ் அனந்நர்களுக்கும், எல்லா அங்கத்தினர்களுக்கும் மற்றும் கத்தினிப்பட்டி முதலிய சில கிராமத்தில் இருந்து திருவிழாவிற்கு வந்திருந்த உறன் முறை காரர்களுக்கும், அமுது வழங்கி முடிய மணி பனிரென்டு ஆகும்.

பல ஆண்டுகளுக்குப் பிறகு, 1973ல் சூரிய அஸ்தமனமான பிறகு கொண்டாடி வந்த இத்திருவிழாவை, மதியனேரத்தில் கொண்டாடும்படி உத்திரவாயிற்று,

இப்படியே இந்திருவிழாவில் அவ்வப்போது மேலும் சில மாற்றங்களை ஆண்டவர்கள் செய்தருளினர்கள். ஆகையால் தற்போது சாலை வாழ் அனந்நர்கள் எந்த முறையில் கொண்டாடுகிறர்களோ அதுவே தற்கால னடை முறை என்று கொள்ளல் வேண்டும்.

1945ல் பங்குனி மாத திருனளிள் போது, சாலை வாசிகளுக்கும் திருவிழாவுக் கென்று வரும் அங்காத்தினர்-களுக்கும், மூன்று னாட்கள் தொடர்ந்து னேன்பு அனுசரிக்க வேண்டுமென்று உத்திரவாயிற்று.

இந்த னேன்பு அனுசரிப்பதனல் உடற் பிணி னீங்கி சுகவாழ்வு வாழ வழி வகுக்குமென்று ஆண்டவர்கள் வலியுறுத்தினர்கள்.

காலை பஞ்சுனை எழுச்சி முடிவுற்றதும், வழக்கம் போல் தீர்த்தப் பிரசாதம் ஆலயத்தில் வழங்கப் பெறும். அதனை வாங்கி அருந்தி விட்டதும் னேம்பு துவங்கி விடுகிறது.

இந்த னேன்பு னாட்களில் பகல் வேளைகளில் உணவு அருந்தக் கூடாது. மேலும் தண்ணீரோ அல்லது வேறும் எந்த வகை பானமும் அருந்துதல் கூடாது. இப்படியே மாலை வனைக்கம் முடியும்வரை இருக்க வேண்டும். ஆக பகல் 12.00

மணி னேரத்திற்கு வயிற்றில் இரப்பைக்கு முழு ஓய்வு கொடுக்கப் படுகிறது.

தூல சம்மந்தமான காரியங்களில், கூடிய வரையில் ஈடு படாமல் இருத்தல் வேண்டும். ஆண்டவர்கள் வாக்கியம் வாசித்தல், கூட்டமாக மெய்வழி னூல் ஓதுதல் போன்ற தேவகாரியங்களை மட்டுமே செய்தல் வேண்டும்.

எலுமிச்சம் பழம், வெல்லம், ஏலக்காய் கலந்த மிகவும் சுவையான னீர் ஆலயத்தில் வழங்கப் பெறும், இதனை தேவையான அளவு அருந்தலாம்.

னெல்பு முடிந்ததும் பச்சையரிசி, பாசிப் பருப்பு, வெள்ளை பூண்டு, முந்திரி பருப்பு, திராட்சை, பட்டை, லவங்கம் தேங்காய் இவைகளால் தயாரிக்கப்பெற்ற னெய்பு கஞ்சி ஆலயத்திலேயே வழங்குவார்கள். அவரவர்கள் பாத்திரத்தில் வாங்கி தேவையான அளவு அருந்தலாம்.

இது முடிவுற்றதும் விடுதி சென்று மறுனாள் காலை பஞ்சனை எழுச்சிக்கு வரும் வரையில்எதுவும் சாப்பிட்டுக் கொள்ளலாம். விடியற்காலை பஞ்சனை எழுச்சிக்கு வருமுன்னர், உணவருந்தி விட்டே பஞ்சனை எழுச்சிக்கு வருதல் வேண்டும். முன்தினம் அனுஷ்டித்த னெய்பை தொடருதல் வேண்டும். முன்று னாட்கள் உபவாச னெய்பின் னடை முறை விதி இதுதான்.

ஒரு சமயம், சில திருவிழாக்கள் கடந்த பிறகு, மூன்று நாட்கள் நேன்பின் பலனை குறுக்கி ஒரே நேன்பிலேயே நிணைத்திருக்கிறேன் என்று உத்திரவாகி, நேன்பை ஒரே ஒரு நாளாக குறைத்தருளினார்கள். பின்னர், இந்த நேன்பின் பலனை எங்கள் உணர்ந்து கொண்டார்கள் ஆகையால், இதனை எங்களை அனுசரிக்கலாமென்று உத்திரவாகி, இந்த நேன்பு கைவிடப் பெற்றது. ஆனாலும் அவ்வப்போது(16-12-74ல் இறுதியாக) அடுத்தடுத்த காலக் கட்டங்களில், இந்த யுகத்தவசு நேம்பினை தெய்வம் அவர்கள் எடுத்து வைத்திருக்கிறார்கள்.

முன்வந்த பெரியோர்களை "பாரவான்கள்" என்று குறிக்க பெற்றது தெய்வம் அவர்கள் காலத்தில்தான்.

தெய்வமவர்கள் தவம் இருந்து கைப்பற்றிய சக்திகளில் மூன்று வித தவத்தை முக்கியமாக குறிப்பிடுகிறார்கள்.

- எமனை விரட்டி நம்மை எல்லாம் மெய்யில் ஆக்கியது ஒரு தவம்.
- புது யுகம் பிறப்பித்து அதற்கு ஆவண செய்ய வேண்டியது மற்றொரு தவம்..
- மூன்றாவது தவம், பாரவான்களை மண்ணில் இருந்து எழுப்புவதற்கு ஆகும்.

தெய்வ திருவாலாற்று சரித்திர குறிப்புகள்

தோற்றம்	:	18ம் நூற்றாண்டு.
பிறந்த ஊர்	:	மார்க்கம்பட்டி என்னும் சிற்றூர்.
பெற்றோர்	:	தின்குல னிதர் ஜமாலுசேன்-பெரியதாய் அம்மை.
பூர்வ நாமம்	:	காரணவல்லரசு எனும் பொருள்படும் காதிருபாச்சா.
கி.பி.1901	:	தனிகை மணி பிரானவர்களின் திருவருள்கூடி அவரின் ஞானப்பிள்ளை ஆகுதல். (இது மெய்வழித் தலையுக முதல் வருடம் ஆகும். பங்குனி பௌர்ணமி தினம். மெய்ஞ்ஞானோபதேசம் பெற்று உடன் துறவு பூண்டனர்.)
கி.பி. 1913	:	அகிலவலம் வந்த பன்னிரெண்டாண்டில் பிடாரிக்கண் திறந்து காரண தேகத்தின் தீட்சை பெற்றது.
1915	:	பாட்டையர் உத்தி உத்திரவுபடி ஆடு மேய்க்கும் தொழிலாபரணத்தை மேற்கொண்டது.
1916	:	திருப்பரங்குன்றின் குகையில் அன்ன ஆகாரமின்றி கடும் தவம் மேற்கொண்டது.

1922	:	தேவ சன்னதங்கள் பெற்று, பாட்டையரிடம் மார்க்கனுதர் எனும் திருனமமும் பெற்று, பாட்டையரவர்களால் உலக மக்களை உய்விக்க ஆசீர்பாத கங்ஙணமும் பூணப் பெற்ரூர்கள்.
1923	:	இப்பூவுலகிற்கு இறங்கி வந்து, மெய்வழி னித னெறிப் பிரசாரத்தைத் துவக்கிய காலம் ஆரம்பம்.
1924	:	முதல் வேத னூல் வெளியீடு
1925	:	பர்மா விஜயம்
1925	:	இராஜகும்பிரம், திருப்பத்தூர் மெய்வழி ஆசிரமங்களை ஏற்படுத்தி அழிகலிப் பருவம் வசன பாகத்தை எழுதி வெளியிட்டார்கள்.
1925	:	னுத மகா முனிவர் தீர்க்கதரிசனம்படி பனிமதி னுச்சியாரை திருமணம் பூனுதல்.
1926	:	மக்கா, மதினு, ஜெருசலம் புனித பயணம் சென்று வருதல்.
1928	:	னேமிசாரண்ய வனத்திற்கு தவமியற்ற ஓராண்டு செல்லுதல்.
1930	:	இராஜகெம்பிர ஆசிரம கட்டிடம் உருவாகுதல்

1930	:	திருப்பத்தூரிலும் ஆசிரம கட்டடம் உருவாகுதல்
1931	:	சிவகங்கை அரண்மனை வரவேற்பு
1933	:	19-6-1933ல் மெய்வழிச் சபையை சட்டப்படி பதிவு செய்தல்.
1934	:	28.4.1934 னூர்த்தாமலையில் சிஷ்ய பிள்ளைகளுக்கு முதன் முதலாக காஷாயம் தருதல்.
1935 - 1937	:	திருப்பத்தூர் ஞான சபா மண்டபம் புதிதாக ஒன்று கட்டி, அமுத கலைக் ஞான போதம்2-ம் காண்டத்தை எழுதி வெளிப்படுத்தி விசேஷித்தார்கள்.
1938	:	மதுரையில் பழஞ்ஞாலை இடத்தை வாங்கியது.
1940	:	13.9.1940 மதுரை பொன்னரங்கம் சபா மண்டபம் கட்டி திறப்பு விழா செய்தது.
1942	:	மதுரை பழஞ்சாலை என்னும் மேற்படி இடத்தை பிரிட்டிஷ் அரசாங்கம் எடுத்துக் கொண்டதற்கினங்க அதை ஒப்படைத்து விட்டு வெளியேறுதல்.

1942	:	1942ல் னவம்பர் மாதம், புதுக்கோட்டை ஜில்லா, ஸரல் மலைக்காடு, பாப்பனுச்சிக்குளம் னிலத்தை, புதிய மெய்வழிச் சாலை அமைக்க கிரயம் வாங்கியது.
1944	:	உரிய மாற்றங்களுடன் மெய்வழி சபை புதுக்கோட்டையில் பதிவு செய்தல்.
1945	:	நேடுகூடகம் எழுதி முடித்தல். அனந்நர்கள் என்ற பட்டத்தை பிள்ளைகளுக்கு சூட்டுதல்.
1946	:	காஷாய ரட்சிப்பு சீரா எடுத்துவைத்தல். கொடி கம்பத்தை 64 அடி உயரமாக மாற்றியது.
1946	:	இளையனுச்சியாரை திருமணம் பூஜுதல்.
1947	:	முறையான வணக்க முறைகள் ஆரம்பமானது.
1948 -1952,	:	திரு மகவுகள் உதயமாகியது.
1965	:	சிரசில் கிள்ளைச் சின்னம் அணிய உத்தரவாகியது.
1966	:	2.6.1996 "மறலி கைதீண்டா சாலை ஆண்டவர்கள் மெய் மதம்" ஸ்தாபித்தருளியது.
1966	:	தெய்வத்தின் திருமகளார் திருமணம்.
1967	:	ஆங்கிரச தவ எல்லையை கைப்பற்றியது.

1961 முதல் 1970 வரை	:	கல்கத்தா, சிவகாசி, திருசெங்கோடு, ஈரோடு, பூவாளூர், ராஜகெம்பீரம், திருச்சி, சேலம், இராயவேலூர், சென்னை, ஸ்ரீ முஷ்ணம், கும்பகோணம், கோவை, நமக்கல், புதுக்கோட்டை, ஆகிய இடங்களுக்கு திக்விஜயம் செய்து அருட் சொற்பொழிவு ஆற்றியது.
1968	:	கற்பக தவத்திலும், பிருக்த யோகத்திலும் ஓயாது தினைத்தல்.
1970	:	பகிரங்கமாக முலமந்திரம் சொல்ல உத்தரவானது.
1971	:	புத்தபகவான் தீர்க்க தரிசனம் ஒதும்படி எடுத்து வைத்தல்.
1972	:	மகா சங்கல்ப மந்திரம் எடுத்து வைத்தல்.
1973	:	தெய்வ திருக்குமாரர்களுக்கு திருமணம் னிகழ்த்தியது.
1974	:	இனைய நூச்சியார் மறைவு.
1976	:	12.2.1976 அன்று, னிதித் தீர்ப்பு னடத்த, தொடர்ந்து வான்கன்னி விராட் தவமியற்றுவதற்கு - பூரண புவஸ்வ மதிமாதவ சிகர எல்லைக்குச் சென்று - தவத் திருமேனி ஆகி, பதிமறைவு செயல் னிகழ்ந்தது.

கவிமாலை

வீழ் விக்டோரியா